www.padippakam.com

# ராஜீவ் படுகொலை மறைக்கப்பட்ட உண்மைகள்

க. இராசேந்திரன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவ் படுகொலை மறைக்கப்பட்ட உண்மைகள்

க. இராசேந்திரன்

26 தமிழர் உயிர்க்காப்பு வழக்கு நிதிக்குழு
17/1, நரசிம்மபுரம், மயிலை,
சென்னை - 600 004.

படிப்பகம்

www.padippakam.com

ராஜீவ் படுகொலை மறைக்கப்பட்ட உண்மைகள்

க. இராசேந்திரன்

முதல் பதிப்பு : மே – 1998

திருவள்ளுவராண்டு 2029
சித்திரை 18 – [மே–1998]

வெளியீடு : 26 தமிழர் உயிர்க்காப்பு வழக்கு நிதிக்குழு,
17/1, நரசிம்மபுரம்,மயிலை,
சென்னை – 600 004.

ரூ. 15

நன்றி

"ராஜீவ் கொலையும் சதிகளும்"
(திராவிட மனித உரிமை அமைப்பு வெளியீடு)

கீழ்க்கண்ட ஏடுகள்

தி இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், அவுட்லுக், பிரண்ட்லைன், இந்தியா டுடே, இல்லஸ்டிரேட்டட் வீக்லி ஆப் இந்தியா, புரோப், தி லாயர்ஸ் கலெக்டிவ், தமிழன் எக்ஸ்பிரஸ், குமுதம், விடுதலை, தென்செய்தி, நந்தன், ஜூனியர் விகடன், தமிழ் நேஷன், வீரகேசரி.

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

நீதி, நேர்மை, உண்மை ஆகியவை முற்றிலுமாக மறைக்கப்பட்ட ஒரு கபட நாடகம் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டு விட்டது. ராஜீவ் கொலை வழக்கு புலன் விசாரணையில் தொடங்கி வழக்கு நடத்தப்பட்ட விதம், தீர்ப்பு அளிக்கப்பட்டவரை பல உண்மைகள் ஆழக்குழி தோண்டிப் புதைக்கப் பட்டுள்ளன.

நீதி மன்ற விசாரணையும் இரகசியமாக நடத்தப்பட்டது. ஒரு முன்னாள் பிரதமரின் கொலை பற்றிய விசாரணையைப் பகிரங்கமாக நடத்த சி.பி.ஐ. விரும்பவில்லை. திட்டமிட்டு மறைக்கப்பட்ட உண்மைகள் அம்பலமாகி விடும் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

உண்மைக் குற்றவாளிகளை மறைக்கும் நோக்கத்தில்தான் தொடக்கத் திலிருந்து எல்லாமே நடத்தப்பட்டன. தமிழீழத்தில் நடைபெற்றுவரும் விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் தமிழகத்தில் பரவ விடாமல் தடுக்கக் கூடிய கருவியாக ராஜீவ் கொலை வழக்கை டில்லி பயன்படுத்தியது.

அதனால்தான் தமிழ்நாட்டுத் தமிழர்கள் 13பேர்கள் ஈழத்தமிழர்கள் 13 பேர்கள் என சரிசமமான எண்ணிக்கையில் மொத்தம் 26 தமிழர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டது ஏதோ தற்செயலானது அல்ல. ஆழமான உள் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டது.

தமிழ்த் தேசிய உணர்வைச் சிதைப்பதற்காக வகுக்கப்பட்ட இந்த சதியை முறியடிக்க வேண்டியது தமிழர்களின் நீங்காத கடமையாகும்.

ராஜீவ் கொலை பற்றி பல கால கட்டங்களில் பலர் கூறிய செய்திகள் பல பத்திரிகைகளில் வெளியான தகவல்கள், விசாரணையின்போது அம்பலமான முரணான செய்திகள் மூலம் தமிழ் மக்களுக்கு உண்மைகளைப்புரிய வைப்பதற்கான முயற்சியின் விளைவே இந்நூலாகும்.

சரியான புள்ளி விபரங்களுடனும், அசைக்க முடியாத ஆதாரங்களுடனும், நூல்கள் பல எழுதிய திறமை மிக்க எழுத்தாள நண்பர் திரு. க. இராசேந்திரன் இந்நூலினை தமது கடும் உழைப்பினால் உருவாக்கித் தந்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

26 தமிழர் உயிர்காப்பு வழக்கு நிதிக்குழுவினர் சார்பில் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

26 தமிழர்களை தூக்கு மேடையில் நிறுத்தி அதன் மூலம் தமிழ்ச்சமுதாயத்தையே மிரட்ட முயலுபவர்களின் அறை கூவலைச் சந்தித்தாக வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. அந்தக் கடமையுணர்வுடன் இந்நூலைப் பரப்ப முன்வருமாறு தமிழர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றேன்.

இந்நூலை வாங்குவதன் மூலமும், பரவச் செய்வதன் மூலமும் இரு நோக்கங்கள் நிறைவேறும்.

1. ராஜீவ் கொலை பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளுதல்.

2. தூக்கு மேடையில் நிறுத்தப்பட்டிருக்கும் 26 தமிழர்களின் வழக்கு நிதிக்கு உதவுதல்.

ஒட்டுமொத்தமாகத் தமிழினத்தின் மீது அடாதபழி சுமத்தி அழிக்க நினைக்கும் சூதுமதியினரின் சதியை முறியடிக்க தமிழர்களே! தோள் கொடுப்பீர்! துணை நிற்பீர்!

சென்னை.
1.5.98.

பழ. நெடுமாறன்
தலைவர்
26 தமிழர் உயிர்காப்பு வழக்கு நிதிக்குழு.

படிப்பகம்

www.padippakam.com

# 1. ஏன் இந்த வெளியீடு?

ராஜீவ் கொலை என்பது ஒரு அரசியல் படுகொலையாகும்; ராஜீவ் இந்தியாவின் முன்னாள் பிரதமர் என்பது மட்டுமல்ல; ஆசியாவின் மிகப்பெரும் நாடுகளிலே ஒன்றாக இந்தியா இருந்ததையும், ஆசியாவைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு தலைவராக ராஜீவ் காந்தியை உருவாக்க வேண்டும் என்பதற்கான முயற்சிகள் சில அரசியல் சக்திகளால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டு வந்தன என்பதையும் மறந்து விட முடியாது. பதவியை இழந்து எதிர்க் கட்சித் தலைவராக ராஜீவ் இருந்த காலத்திலும் - சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தலைவ ராக தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டு வந்தார்.

இந்தியாவில் அப்போது வர இருந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக வேண்டும் என்ற துடிப்பும் அவருக்கு இருந்தது.

இந்தப் பின்னணியில், இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப் பதிவு நடக்க இருந்த சில தினங்களுக்கு முன் தமிழ்நாட்டில் ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்குப் பிரச்சாரம் செய்ய வந்த ராஜீவ்காந்தி, மனித வெடிகுண்டால் - கொலை செய்யப்பட்ட எதிர்பாராத நிகழ்ச்சி 21-5-1991 அன்று நடந்தது. ராஜீவ் காந்தி படுகொலையைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் மாற்றங்கள் இந்தியாவில் நடந்து முடிந்திருக்கின்றன. இவ்வளவு முக்கியத்துவம் நிறைந்த ஒரு அரசியல் படுகொலைக்கான பின்னணி பல்வேறு தேசிய சர்வதேசிய கோணங்களில் ஆராயப்படவேண்டியது என்பது மிகமிக அவசியமான தாகும். ஆனால், இதற்குப் பின்னணியில் உள்ள பல உண்மைகளை வெளிக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் சி.பி.ஐ. புலனாய்வுக்குழு ஈடுபடவில்லை. ராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகள் படுகொலை செய்து விட்டதாக - இந்த வழக்கின் பரிமாணத்தை மிகவும் சுருக்கி, 26 அப்பாவித் தமிழர்களுக்குத் தூக்குத் தண்டனை அளித்ததோடு இந்தப் பிரச்சனையையே முடித்துக் கொண்டு விட்டார் கள். இந்தக் கொலைச் சதியில் பல்வேறு உண்மைகள் மூடி மறைக்கப்பட்டு விட்டன. பல்வேறு பிரச்சார நிறுவனங்கள், மக்கள் அமைப்புகளிலிருந்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, அரசாங்கமோ, அதன் நிறுவனங்களான உளவுத் துறையோ, ஏன் நீதித் துறையே கூட, இன்றுவரை பதிலே அளிக்கவில்லை என்ற உண்மையையும் நாம் சுட்டிக் காட்டவேண்டும்.

ராஜீவ் படுகொலை செய்யப்பட்ட அந்தக் கோர சம்பவம் - மனிதாபிமான உணர்வுள்ள அனைவரது உள்ளங்களையும் உலுக்கியிருப்பது உண்மை தான்; ஆனால் இந்தக் கொலைச் சதியில் பல உண்மைக் குற்றவாளிகள் மறைக்கப்பட்டு,

படிப்பகம்

www.padippakam.com



அப்பாவிகளைத் தூக்கு மர நிழலிலே நிறுத்தியிருப்பதை, மனித உரிமையைப் பேணும் எவரும் அங்கீகரிக்க முடியாது; அந்தக் கண்ணோட்டத்தில் தான் நாட்டு மக்களுக்கு சில உண்மைகளை விளக்கிட இந்த சிறு வெளியீட்டைக் கொண்டு வருகிறோம்; இந்தக் கொலைச் சதியில் கவனத்தில் எடுத்துக் கொள்ள மறுக்கப்பட்ட சம்பவங்கள்; எழுப்பப்பட்ட சந்தேகங்கள், மூடி மறைக்க நடந்த முயற்சிகள் போன்றவற்றை, கடந்த கால செய்திப்பதிவு களிலிருந்து, ஓரளவு திரட்டித் தந்திருக்கிறோம்; தமிழர்கள், உண்மைச் செய்திகளை உணர்ந்து ஒரு சார்பான - உள்நோக்கம் கொண்டோரின் பிரச் சார சூழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே, இந்த வெளி யீட்டின் நோக்கமாகும்.

## தமிழர் நெஞ்சங்களிலிருந்து பிரபாகரனைப் பிரிக்க முடியாது

ராஜீவ்கொலையில் பிரபாகரனை சம்பந்தப்படுத்தியிருப்பது சிறு பிள்ளைத்தனமானது, தேசிய விடுதலை இயக்கம் ஒன்றின் தலைவர் மீது அரசியல் உள்நோக்கத்துடன் கொலைப்பழி சுமத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தபோது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசு மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரரான **சுபாஷ் சந்திரபோஸ்** மீது கொலைக் குற்றத்தைச் சுமத்தி, யுத்தக் குற்றவாளியாக அவரைக் கைது செய்யத் துடித்தது. ஆனால் இந்திய மக்களின் மனங்களிலிருந்து நேதாஜியை அவர்களால் அகற்ற முடியவில்லை. அதைப் போலவே தமிழர்கள் நெஞ்சங்களில் இருந்தும் பிரபாகரனைப் பிரிக்க முடியாது. பொய்யான குற்றச் சாட்டுக்களைச் சுமத்துவதன் மூலம் அவரது பெருமையைக் குறைத்துவிட முடியாது.

**(இலண்டனிலிருந்து வெளிவரும் தமிழ்நேஷன் (மார்ச் 1992) இதழில் பழ. நெடுமாறன் அளித்த பேட்டியில் கூறியது)**

www.padippakam.com

# 2. சதியை விசாரிக்கவே அச்சம்!

ராஜீவ் காந்தி படுகொலை நடந்தபோது மத்தியில் சந்திரசேகர் தலைமையிலான ஆட்சி நடந்தது. இந்தப்படுகொலை பற்றி விசாரிக்க நீதிபதி வர்மா தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷனை, அன்றைய உள்துறை அமைச்சராக இருந்த சுபத்காந்த் சகாய் அறிவித்தார். அப்போது சட்ட அமைச்சராக இருந்தவர் சுப்ரமணியசாமி. இருவருமே, வர்மா கமிஷன், ராஜீவ் காந்திக்கு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறை இருந்ததா என்பது பற்றித்தான் விசாரிக்கும் என்றும் இந்தக் கொலைக்கான சதியின் பின்னணி பற்றி கமிஷன் ஆராயாது என்றும் திட்டவட்டமாகக் கூறி விட்டனர். சதி பற்றிய விசாரணையையும், இதில் சேர்க்க வேண்டும் என்று பாரதிய ஜனதா, தேசிய முன்னணி, காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்திய கோரிக்கை முற்றிலுமாக நிராகரிக்கப் பட்டது.



நீதிபதி வர்மா

சந்திரசேகர் ஆட்சியில் நீதிபதி வர்மா கமிஷன் அமைக்கப்பட்டு 2 மாதங்கள் ஆன நிலையிலும், பி.வி. நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் கட்சி ஆட்சியைப் பிடித்த பிறகும் கூட, கமிஷனுக்கு அலுவலகம் ஒதுக்கப்படவில்லை. செயலாளர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் நியமிக்கப் படவில்லை; விசாரணை வரம்பும் அறி விக்கப்படவில்லை; இதை நீதிபதி வர்மாவே மனம் குமுறி வெளிப்படை யாகவே கூறினார்; ''இந்தியாவின் ஜன நாயக முதிர்ச்சி எந்த அளவுக்கு உள்ளது என்பதையே இது காட்டுகிறது. இந்தப் பிரச்சினை இந்தியாவின் கவுரவம் சம்பந்தப்பட்டது; உலக மக்கள் இதை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்'' என்றார் நீதிபதி வர்மா (29.5.91 - 'இந்து')

படிப்பகம்

www.padippakam.com



வெளிப்படையாகப் பேசிய நீதிபதி வர்மா, ஒரு பிரச்னையில் மிக உறுதியாக இருந்தார். ''ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றித் தான் விசாரணை நடத்த முடியுமே தவிர, இந்தக் கொலைக்கான சதி பற்றி என்னால் விசாரணை நடத்த முடியாது'' என்று திட்டவட்டமாக மறுத்து விட்டார். கொலைக்குப் பின்னால் நடந்த சதியையும் ஆராய வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் அழுத்தமாக வலியுறுத்தி வந்தனர். இந்தப் பின்னணியில் நாடாளுமன்ற விவாதத்தில் பதிலளித்துப் பேசிய அன்றைய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் தெரிவித்த பின்வரும் கருத்துக்கள் முக்கியத்துவம் உடையதாகும். **''இந்திரா காந்தி கொலையில் கொலையாளிகளுக்குப் பின்னால் இருந்த சக்திகளை அடையாளம் காண, அரசு தவறிவிட்டது. ஆனால் ராஜீவ் கொலை விசாரணையில் அப்படி எதுவும் நடந்துவிடக்கூடாது. இதில் விடுதலைப் புலிகளின் பங்கு உண்டு என்று சொல்லப்பட்டாலும், கொலைக்குப் பின்னால் உள்ள மற்ற சக்திகளை கண்டு பிடிப்பதில் அரசு உறுதியாக உள்ளது. மூன்றாம் உலக நாடுகளின் முக்கிய தலைவராக ராஜீவ் உருவாகி இருந்தார். அவரது முயற்சியால்தான் சர்வதேச அரங்கில் ''ஆப்பிரிக்கா நிதி'' (Africa Fund) உருவானதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நிலையில் ராஜீவ் காந்தி மீண்டும் ஆட்சிக்கு வரும் வாய்ப்புகள் உருவாகிவருவது கண்டு, உலகில் கேள்வி கேட்பாரின்றி ஆதிக்க சக்திகளாக விளங்கி வரும் சில நாடுகளுக்கு எரிச்சலாக இருந்தது என்றார் உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் (27.7.91 - தி இந்து)** ராஜீவ் கொலையில் சர்வதேச சதிகள் இருந்திருக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளதை, தகுந்த அரசியல் காரணங்களைக் காட்டி, உள்துறை அமைச்சர், பொதுக் கூட்ட மேடையிலே அல்ல, இந்தியாவின் நாடாளுமன்ற அவையிலேயே பேசி, பதிவு செய்திருக்கிறார்; அப்படியானால் அத்தகைய சர்வதேச சக்திகள் எவையாக இருக்க முடியும்? இந்தக் கோணத்தில் விசாரணை எதுவும் நடத்தப்படாமலே 26 தமிழர்களுக்கு மரண தண்டனை விதித்துவிட்டு, வழக்கையே முடித்துக் கொள்ளத் துடிப்பது ஏன்? யார் யாரைக் காப்பாற்ற இந்த சூழ்ச்சிகள் நடந்திருக்கின்றன? இந்திரா கொலைக்கான சதியை மூடி மறைத்தது போல், ராஜீவ் கொலையில் நடந்த சதியையும் மூடி மறைக்க முடிவு செய்து விட்டார்களா?

படிப்பகம்

www.padippakam.com



## வர்மா கமிஷன் குற்றச்சாட்டு

ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறை இருந்ததா என்பதை ஆராய்வதற்காக நீதிபதி ஜே.எஸ். வர்மா கமிஷன் அமைக்கப்பட்டது. 1992ம் ஆண்டு ஜூன் மாதம் நீதிபதி வர்மா தனது அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தார். ஆனால் 5 ஆண்டு காலமாக கமிஷன் அளித்த பரிந்துரைகளில் எதுவும் அமுலாக்கப்படவில்லை.

1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கை வைக்கப்பட்டது. அப்போது உள்துறை அமைச்சராக இருந்த எஸ்.பி. சவான் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை முற்றிலுமாக நிராகரித்தார். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக இந்த அறிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பிரதமர் நரசிம்மராவ் அரசுக்கு ஏற்பட்டது. ஆனாலும் இரண்டு ஆண்டு காலம் எதுவும் நடைபெறவில்லை.அதற்குப் பிறகு எஸ்.பி. சவான், அர்ஜுன்சிங், வி.சி. சுக்லா, ஜகதீஷ் டைட்லர், எச்.ஆர். பரத் வாஜ், சதீஷ்சர்மா, ஆகிய அமைச்சர் களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப் பட்டது. இக்குழு இந்த அறிக்கையைப் பரிசீலித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

சில மூத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க இந்தக் குழு பரிந்துரை செய்தது. ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1996ம் ஆண்டில் மத்திய அரசைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் 4 பேரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. முன்னாள் அமைச்சரவைச் செயலாளர் வினோத் பாண்டே, உளவுத்துறைத் தலைவர் எம்.கே. நாராயணன், உள்துறை செயலாளர் சிரோண்மணி சர்மா, பாதுகாப்புச் செயலாளர் ஜி.எஸ். வாஜ்பாய் ஆகியோரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. ஆனால் இவர்கள் நால்வரும் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகே இத்தகைய விளக்கம் கேட்கப்பட்டது. இது வேண்டும் என்றே திட்டமிட்டு செய்யப்பட்டதாகும். ஓய்வு பெறுவதற்கு முன்னாலேயே அவர்களிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்பது பிரதமர் அலுவலகத்திற்குப் புரியாத ஒன்று அல்ல. ஆனாலும், பிரச்சினையை ஒன்றுமில்லாமல் செய்வதற்காகவும் ஒப்புக்காகவும் விளக்கம் கேட்கப்பட்டது. உடனடியாக அந்த 4 பேரும் மத்திய நிர்வாக மன்றத்திற்கு மேல் முறையீடு செய்தனர். ஓய்வுபெற்ற பிறகு அவர்களிடம் விளக்கம் கேட்பது முறையற்றது என்று அது ஆணை பிறப்பித்தது. இதன் மூலம் மேற்கண்ட அதிகாரிகள் திட்டமிட்டுப் பாதுகாக்கப்பட்டனர். இவர்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் என்ன? இவர்களுக்குப் பின்னணியில் இருந்த சூத்ரதாரிகள் யார்? இந்தக் கேள்விகளுக்கு இதுவரை விடை இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

# 3. ராஜீவ் கொலையும் சர்வதேச சதியும்- I

ராஜீவ் மீண்டும் பிரதமராகும் வாய்ப்புகள் பிரகாசமாக இருந்ததாகக் கூறப்படும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்கவிருந்த அந்தக் கால கட்டத்தில் ராஜீவின் சர்வதேசப் பார்வை எப்படி இருந்தது என்பதை ஆராய வேண்டும்; ராஜீவ் அப்போது அமெரிக்க எதிர்ப்பாளராகவே இருந்தார் என்பதை அவர் அளித்த பல பேட்டிகள் தெளிவு படுத்துகின்றன. அய்க்கிய நாடுகள் சபை அமெரிக்க ஆதிக்கத்தில் செயல்படுவதை மாற்றி அமைக்க அவர் விரும்பினார். தாம் பிரதமரானால் அணிசேரா நாடுகளின் அமைப்பை வலிமைப்படுத்தவும், அமெரிக்காவின் சார்பிலிருந்து இந்தியாவை விடுவித்துக் கொள்ளவும் அவர் விரும்பினார். தான் இறப்பதற்கு முன் அளித்த ஒரு பேட்டியில் ''தென்னாசியப் பகுதியில் இந்தியா ஆற்ற வேண்டிய பங்கு அதிகரித்துவிட்ட நிலையில், இந்தியாவும், இந்தியத் தலைவர்களும் வெளிநாட்டு சக்திகளின் இலக்குக்கு (Targets) உள்ளாகக் கூடும்'' என்றார். அந்த வெளிநாட்டு சக்தி எது என்று செய்தியாளர் கேட்ட போது ''நிச்சயமாக சோவியத் நாடு அல்ல'' என்றார். அப்படியானால், அமெரிக்காவின் சி.அய்.ஏ. உளவு நிறுவனத்தைக் கூறுகிறீர்களா'' என்று கேட்டபோது, ராஜீவ் அதற்கு அளித்த பதில் ஒரு நமட்டுச் சிரிப்புதான்! (தி இந்து 24.5.91)



ஜோதிபாசு

மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தந்துள்ள விவரங்களும் குறிப்பிடத் தக்கவையாகும்.

''நான் (ஜோதிபாசு) ராஜீவை சந்தித்துப் பேசிய போது சில முக்கிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். அமெரிக்க, ஈராக்

படிப்பகம்

www.padippakam.com



நாடுகளுக்கிடையிலான வளைகுடாப் போரில் சந்திரசேகர் அரசு எந்த முயற்சியும் எடுக்காமல் இருக்கிறது என்றும் எனவே சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்காக கோர்பச்சேவை சந்திக்க இருப்பதாகவும் ராஜீவ் என்னிடம் தெரிவித்தார். அமெரிக்க தூதர் தன்னை வந்து சந்தித்ததை அவர் குறிப்பிட்டு, அமெரிக்கர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்; அவர்கள் ஆதிக்கம் செலுத்துவதைத் தான் விரும்ப வில்லை என்றார், அமெரிக்கா வின் பிடியில் உள்ள உலக நிதி நிறுவனத்தை (I.M.F.)ச் சார்ந்து நில்லாமல், ஜெர்மனியிடமும் ஜப்பானிடமும் ஏன் உதவியைப் பெறக் கூடாது என்றும் ராஜீவ் ஆலோசனை தெரிவித்தார். வளைகுடாப் போரில் அமெரிக்காவின் சார்பில் நிற்கும் ஜெர்மனியும், ஜப்பானும் முழுமனதுடன் நிற்கவில்லை, தயக்கத்துடன் தான் ஆதரிக் கிறார்கள் என்றும் ராஜீவ் என்னிடம் கூறினார். *(ஆதாரம்: பிரன்ட்லைன் - 8.6.91)*

ஆக, ராஜீவ் பிரதமராக மீண்டும் வந்தால் அமெரிக்க ஏகாதிபத்தியத் துக்கு எதிராக சர்வதேச அளவில் செயல்படத் திட்டமிட்டிருந்தார் என்ப தையே இந்தப் பேட்டிகள் தெளிவாக உணர்த்துகின்றன; இது தொடர்பாக மேலும் சில நிகழ்வுகளைக் கவனப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

- பாகிஸ்தான் அதிபர் ஜியா - விமான விபத்து ஒன்றில் இறந்தார். இது பற்றிக் கூறிய ராஜீவ் காந்தி, இது விபத்து அல்ல; திட்ட மிட்டக் கொலை; நானும் ஜியாவும் காஷ்மீர் பிரச்னையில் ஒரு ஒப்பந்தத் துக்கு வந்து, சமரசத் திட்டம் முடிவடையும் நேரத்தில் ஜியா கொல்லப்பட்டு விட்டார். இந்தியா-பாகிஸ்தான் நல்லுறவை விரும்பாத வெளிநாட்டுச் சக்திகள்தான், இப்படிச் செயல்படு கின்றன என்றார் ராஜீவ் காந்தி *('பிரன்ட்லைன்' - 8.6.91)*
- சந்திரசேகர் பிரதமராக இருந்தபோது - சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி தந்த நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து, இரண்டுமுறை கடன் கொடுப்பதற்கான ஒப்புதல் தருவதற்கு முன்பே, இந்தியா தனது ரூபாயின் மதிப்பைக் குறைத்து அறிவித்தது. கடனைப் பெறு வதற்கு முன்பே, நடந்த இந்த அவமானத்துக்கு, ராஜீவ் பிரதமராகி யிருந்தால் நிச்சயம் ஒப்புக் கொண்டிருக்கமாட்டார். அமெரிக்கா வின் சி.அய்.ஏ. நிறுவனமோ அல்லது அதன் உள் அமைப்புகளில் ஒன்றோ ராஜீவைத் தீர்த்துக் கட்டிவிடும் என்பதை இது உணர்த்து கிறது *('பிளிட்ஸ்' 13.7.91)*
- அன்றைய காலகட்டத்தில் - அடுத்து ஆட்சிக்கு வருவது யார் என்பது பற்றி அறிய அமெரிக்கா உட்பட, பல வெளிநாட்டுத் தூதர கங்கள் மிகவும் ஆர்வம் காட்டின. பாகிஸ்தானில் அமெரிக்க தூத ராக இருந்த ராபர்ட் ஓகலே என்பவர் பாகிஸ்தான், வங்கதேச நாடு களில் நடந்த தேர்தலின் போது, அதில் தலையிட்டு, அமெரிக்கா வுக்கு சாதகமான ஆட்சியைக் கொண்டு வருவதற்கான முயற்சி

படிப்பகம்

www.padippakam.com



களில் ஈடுபட்டவர்; இந்த சூழ்ச்சிகளை வகுப்பதில் அவர் மிகவும் கை தேர்ந்தவர்; இந்த அதிகாரி இந்தியாவில் தேர்தலுக்கு முன்பு ஏப்ரல் மாத மத்தியில் பாகிஸ்தானிலிருந்து புதுடில்லிக்கு வந்து தங்கினார். (தி வீக் - 19.05.91)

- ராஜீவின் ஸ்ரீபெரும்புதூர் நிகழ்ச்சியை யார் முடிவு செய்தார்கள் என்ற கேள்விக்கு இன்றுவரை விடை கிடைக்கவில்லை. இந்த பாகிஸ்தான் அதிகாரியின் பயணத்துக்கும் ஸ்ரீபெரும்புதூர் கூட்ட நிகழ்ச்சி, ராஜீவ் சுற்றுப்பயணத்தில் கடைசி நேரத்தில் சேர்க்கப் பட்டதற்கும் தொடர்பு உண்டா என்பது ஆய்வுக்குரியது; இந்தக் கண்ணோட்டத்தில் இதுவரை எந்த ஆய்வும் நடத்தப்படவில்லை.

- அதே காலகட்டத்தில் - அமெரிக்காவில் இந்தியா பற்றிய கொள்கையை நிர்ணயிக்கும் துறையைச் சேர்ந்த ஜார்ஜ்ஷெமன் என்பவர் இந்தியாவில் விரிவான சுற்றுப்பயணத்தை மேற் கொண்டு தொழில், வியாபாரம், அரசியல், நிர்வாகம் உள்ளிட்ட அனைத்துத்துறைகளின் முக்கிய புள்ளிகளையும், தலைவர்களை யும் சந்தித்துப் பேசினார். ('தி வீக்'- 19.05.91)

- வளைகுடாப் போருக்குப் பிறகு, மேலை நாடுகள் இந்தியாவின் மீது காட்டிய ஆர்வம் அதிகரித்தது. இந்தியாவைத் தன்பக்கம் வைத்துக் கொள்ள விரும்பிய அமெரிக்கா, அதை வெளிப்படுத்து வதற்காகவே சந்திரசேகர் ஆட்சிக்கு அழுத்தம் தர முடிவு செய்தது. அதனால்தான், அமெரிக்காவின் போர் விமானங்களுக்கு எரி பொருள் நிரப்புவதற்கான வசதியை, இந்தியாவிடமிருந்து பெற்றது. இந்தியாவின் பிரதமராக வாய்ப்புள்ள முக்கிய நபர்களின் உள வியல் (Psychological Profile) உள்ளிட்ட பல விவரங்களை அமெரிக்கா சேகரித்தது. ஒரு தன்னிச்சையான தலைவரின் கீழ் தமக்கு தொல்லை தரக்கூடிய ஒரு அரசு இந்தியாவில் வந்து விட்டால், வளைகுடா போரில் தலையிட்டது போல், இந்தியாவில் அமெரிக்கா நேரடியாகத் தலையிட வேண்டிய கட்டாயம் அதற்கு இருக்கிறது என்று ஒரு அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர் தெரி வித்தார். இது மிகவும் ஆபத்தான அறிகுறியாகும். ('தி வீக்' - 19-5-91) ராஜீவ் காந்தியின் கதையை முடிக்கக் கூடிய நிலைக்கும் அமெரிக்கா தயாராக இருந்தது என்பதைத் தான் இந்த தகவல்கள் உணர்த்துகின்றன.

- எனவே ராஜீவ் கொலையில் அமெரிக்க உளவு நிறுவனங்களுக்கு தொடர்பு இருக்கக் கூடிய வாய்ப்பை உறுதிப்படுத்தக் கூடிய அரசியல் காரணங்கள் வலிமையாக இருந்தாலும் இந்தக் கோணத் தில் எத்தகைய புலன் விசாரணையும் நடத்தப்படாமல் மூடி மறைக்கப்பட்டது ஏன் என்ற கேள்வி எழத்தானே செய்யும்?

படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்க சதியை மூடி மறைக்க அந்த வல்லரசு மற்றொரு சதியை அரங்கேற்றியதா? அந்த சதிவலையில் இங்குள்ள அரசும் அதன் சார்பு நிறுவனங்களும் சிக்கி விட்டனவா?

◆ இத்தனைக்கும் ராஜீவ் காந்திக்கு இப்படி ஒரு ஆபத்து வரக்கூடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து, எச்சரிக்கை செய்திருந்தார் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத். தனது இந்தியப் பிரதிநிதியிடம் இத்தகைய ஆபத்தை சுட்டிக்காட்டி, ராஜீவ் காந்தியிடம் எச்சரிக்குமாறும் அவர் பணித்திருந்தார். கொலை நடப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே பிப்ரவரி மாதத்தில் - ராஜீவை சந்தித்து, அராபத்தின் பிரதிநிதி, இந்த ஆபத்தை சுட்டிக் காட்டி எச்சரித்தார்.



திரு. யாசர் அராபத்

◆ ராஜீவ் கொலை நடக்கும் ஒரு வாரத்துக்கு முன்பு வெளி வந்த ஒரு செய்தி இது ''புதுடில்லியில் உள்ள அமெரிக்க தூதரகம் இந்தியாவின் பொதுத் தேர்தலில் அளவு கடந்த ஆர்வம் காட்டுகிறது. இந்த தூதரகத்தில் முதன்மை அரசியல் செயலாளராக இருப்பவர் பாரதிய ஜனதா கட்சிக்கு மிகவும் நெருக்கமானவர். ஆர்.எஸ்.எஸ். பற்றி புத்தகம் ஒன்றையும் எழுதி இருக்கிறார். ஓய்வு பெறவேண்டிய அவர், இத்தேர்தலுக்காக பணி நீட்டிப்பு பெற்றிருக்கிறார். அவர், நாளொன்றுக்கு ரூ.1200 ஊதியம் தந்து, இந்தியா முழுதும் 100 பிரதிநிதிகளை அனுப்பி தேர்தலுக்கு முந்தைய நிலவரம் பற்றிய கள -ஆய்வு அறிக்கைகளை (Spot Reports)யும் பெற்று வைத்திருந்தார். ('சண்டே' 12.05.91)

மேற்குறிப்பிட்ட தகவல்கள், இந்தியாவின் பல்வேறு இதழ்களில், ஏடுகளில் ஏராளமாக வந்திருக்கின்றன, உதாரணத்துக்காக சிலவற்றை மட்டுமே இங்கே சுட்டிக் காட்டினோம்; இந்தத் தகவல்கள் உணர்த்துகின்ற உண்மைகள் என்ன? ராஜீவ் காந்தி அமெரிக்க எதிர்ப்பு நிலையை உறுதியாக மேற்கொண்டு விட்டதால், அடுத்த பிரதமராக ராஜீவ் காந்தி வந்து விடக்கூடாது என்பதில் அமெரிக்கா, அளவு கடந்த ஆர்வத்தோடு இந்தியாவில் தலையிட்டு செயல்பட்டுக் கொண்டிருந்தது என்பதுதானே?

இவ்வளவுக்கும் பிறகு, அராபத் தனது ஆதரவாளர்களுடன் அமர்ந்து சி.என்.என். தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது, அதில் ராஜீவ் காந்தியின் நிகழ்ச்சியைப் பார்த்து திடுக்கிட்டார். போதிய பாதுகாப்பின்றி, மக்களிடம் மிகவும் நெருக்கமாக அவர் கலந்து

படிப்பகம்

www.padippakam.com



நின்றதைப் பார்த்த அராபத், உடனே தனது இந்தியப் பிரதிநிதியிடம் மீண்டும் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். வர இருக்கும் ஆபத்து பற்றி ராஜீவிடம் எச்சரிக்கவில்லையா என்று வினவினார். எச்சரித்து விட்டதாக அந்த அதிகாரி பதிலளித்தார். பிறகு ராஜீவ் காந்தியிடம் நேரடியாக அராபத்தே தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அவர் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு வரும்வரை தொலைபேசியைத் துண்டிக்காமல் காத்திருந்து ராஜீவுடன் பேசினார்.

''ஒரு அரசியல் கொலைக்காக மேற்கத்திய நாட்டிலிருந்து, ஒரு நுட்பமான வேதியல் வெடி மருந்துகள், இந்தியாவுக்குக் கடத்தப்பட்டுள்ளதோடு, சி.அய்.ஏ,மொசாத் (இஸ்ரேல் உளவு நிறுவனம்) உளவு நிறுவனங்களின் உளவாளிகள் அதிக எண்ணிக்கையில் இந்தியாவுக்குள் நுழைந்து தென்னாட்டில் ஊடுருவியிருக்கின்றனர் என்ற தகவல்கள்

## புலிகளுக்கு கொலை நோக்கம் இல்லை
## ஏ.பி. வெங்கடேசுவரன் பேட்டி

இந்தியா வெளியுறவுத் துறையின் செயலாளராக இருந்தவரான திரு. ஏ.பி. வெங்கடேசுவரன் கொழும்புவில் இருந்து வெளிவரும் 'வீரகேசரி' இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது.

கேள்வி : ராஜீவ் காந்தி கொலையில் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக இந்தியாவிலுள்ள பல அரசியல்வாதிகள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக ஊர்சிதப்படுத்தப்படுமானால் தென்னிந்தியாவிலேயே இலங்கைத் தமிழர்களுக்கெதிரான உணர்வுகள் கிளம்புமா?

பதில் : அது ஒரு கசப்பான நிலைமையாகவே இருக்கும். இலங்கையிலே இந்திய அமைதி காக்கும் படை இருந்த போது வடக்கு - கிழக்கு மாகாணங்களிலே இடம் பெற்ற நடவடிக்கைகள் குறித்து இந்தியா பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது என்பதை பலர் உணர்வார்கள் என்பது நிச்சயம். ஏனென்றால், ராஜீவ் கொலை போன்ற சம்பவத்தை தேவைக்கு அதிகமாக மிகைப் படுத்தி விவகாரங்களை பார்க்க கூடாது. அக்கொலை ஒரு படுபாதக குற்றச் செயலே. ஆனால் போரிலே ஈடுபட்டு ஆயிரக்கணக்கான மக்களை பலி கொடுத்த நாடுகள் மீண்டும் சமாதானம் செய்து கொண்டிருப்பதை அரசுகளுக்கிடையிலான உறவுகளில் நாம் கண்டிருக்கிறோம். இதை நாம் மறுத்தலாகாது. ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு சம்பந்தம் இருக்கிறது என எண்ணி நிலைமைகளை அளவுக்கு அதிகமாக பெரிது படுத்தக்கூடாது.

கேள்வி : ரஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கு புலிகளுக்கு ஏதாவது நோக்கம் இருந்தது என நீங்கள் நினைக்கிறீர்களா?

☞

படிப்பகம்

www.padippakam.com



***பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவு உயர் அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ளன என்ற விவரத்தை அராபத் தெரிவித்தார். ('புரோப்' பத்திரிகை - 1991 ஜூலை)***

அராபத் ராஜீவ் காந்தியிடம் இப்படி எச்சரித்த தகவல் பல பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. நாடாளுமன்றத்திலும் பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்படி சர்வதேசப் பின்னணியில் நடக்கும் அரசியல் படுகொலைகள் குறித்து, உண்மைக் குற்றவாளிகளை அடையாளம் காட்டாமல் மறைத்து அப்பாவிகள் சிலர் மீது, சந்தர்ப்ப சூழலைப் பயன்படுத்தி, குற்றவாளியாக்கி மரணதண்டனை விதித்த நிகழ்ச்சிகள், இந்தியாவில் கடந்த காலத்திலும் நடந்துள்ளன. மிக முக்கியமான இந்திரா காந்தி கொலையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

பதில் : சூழ்நிலைகளை அவதானிக்கும் போது காந்தியைக் கொலை செய்வதற்கு புலிகளுக்கு நோக்கம் எதுவும் இருப்பதாக தோன்றவில்லை. ஏனென்றால் அவர்கள் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தையில் இறங்கியிருந்தனர். ராஜீவ் காந்தியுடன் மார்ச்சில் பேச்சு நடந்தது எமக்குத் தெரியும். அத்துடன் அவர் புலிகளுடனான தொடர்புகளை புதுப்பிப்பதில் சாதகமான பதிலை அளித்துமிருக்கிறார்.

கேள்வி : அத்தகைய சந்திப்பொன்று இடம் பெற்றதற்கான பதிவுச் சான்று எதுவும் இல்லையென்று தோன்றுகிறது. புலிகள் தான் சந்திப்பு இடம்பெற்றதாக சொல்லியிருக்கிறார்கள்!

பதில் : இந்தியாவில் பெரிதும் மதிக்கப்படும் செய்திப் பத்திரிகைகளில் ஒன்றான "இந்து" இதை ஊர்சிதப்படுத்தியிருக்கிறது. ராஜீவ் காந்திக்கும் புலிகளுக்குமிடையே சந்திப்பு சந்திப்பு நடந்ததாகவே அது திட்டவட்டமாக கூறுகிறது. அதையே நாம் ஏற்க வேண்டியிருக்கிறது.

கேள்வி : ஆனால் புலிகள் இயக்கம் "துரோகப் பேர்வழியின் கும்பல்" என ராஜீவ் காந்தி வர்ணித்திருந்ததாக நான்கு நாட்கள் கழிந்து "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை செய்தியொன்று வெளியிட்டிருந்ததே?

பதில் : தனது கருத்தைக் கூறுவதற்கு காந்தி உரித்துடையவர். ஆனால், எனக்கு தெரிந்தவரை எந்தவொரு விவகாரத்திலுமே நிலையான அபிப்பிராயம் ஒன்றைக் கொண்டிருந்தவரென்ற பெயரை ராஜீவ் பெறவில்லை. மேலதிகமாக நான் எதையும் கூற விரும்பவில்லை. ஏனென்றால் இறந்து போனவரைப் பற்றி நாம் விரோதமாக பேசுவதில்லை. அவர் மரணமடைந்த பின்னர் அவருக்கு செய்யப்பட்ட பல புகழ் அஞ்சலிகள் இந்திய அரசியலுக்கு அவர் செய்த பங்களிப்புகள் பற்றிய அர்த்தமுடைய மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்தவையென்பதிலும் பார்க்க நல்லெண்ணங்களை அடிப்படையாகக் கொண்டே கூடுதலாக அமைந்திருந்தன. – வீரகேசரி

படிப்பகம்

www.padippakam.com



இந்திரா கொலையைப்பற்றி விசாரிக்க அமைக்கப்பட்டது தக்கர் கமிஷன். இந்தக் கமிஷன் அறிக்கை நாடாளுமன்றத்திலேயே வைக்கப்பட வில்லை. இதற்காக நாடாளுமன்ற விதிகளிலேயே திருத்தம் கொண்டு வந்து, இந்தக் கமிஷன் அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைக்காமல் தவிர்த்தார் அன்றைய பிரதமரும், இந்திராவின் புதல்வருமான ராஜீவ் காந்தி. ஆனாலும் மறைக்கப்பட்ட தக்கர் கமிஷன் அறிக்கையின் முக்கிய பகுதி களை, பத்திரிகைகள் வெளிக் கொணர்ந்தன. அந்த அறிக்கையில் என்ன கூறப்பட்டிருந்தது?

**''இந்திரா கொலையில் - அவரது இல்லத்துக்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன. அரண்மனை சூழ்ச்சி (*Palace Intrigue*) போன்ற பெரிய சதிகள் இதிலே அடங்கியுள்ளன. இந்தக் கொலையில் இந்திராவின் தனி செயலாளராக இருந்த ஆர்.கே.தவான் மீது சந்தேகம் எழுகிறது. இவரை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும்''** என்று அறிக்கை கூறியிருந்தாலும், மேல் நடவடிக்கை எதனையும் அரசு எடுக்கவில்லை. இந்தக் கொலை தொடர்பாக சிம்ரஞ்சித் சிங்மான், அஜிந்தர் பால்சிங், மற்றும் இரண்டு பம்பாய் பேராசிரியர்கள் மீது சதி வழக்கு போடப்பட்டது. ஆனால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பிறகு இந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது. இந்த வழக்குகள் அரசியல் உள் நோக்கம் கொண்டவை என்பதில் சந்தேகம் இல்லை'' **('சண்டே' - 3.2.91)**

- தக்கர் விசாரணை கமிஷன் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்ட ஆர்.கே. தவான் மீது எந்த நடவடிக்கையும் இல்லை (இப்போது நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இவர் டெல்லி தொகுதி ஒன்றில் - சோனியாவின் ஆதரவோடு காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டுத் தோற்றார்.) ஆனால் தக்கர் அறிக்கையில் பெயர் குறிப்பிடவேப்படாத சிம்ரஞ்சித் சிங்மான் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு 5 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திர வதை செய்யப்பட்டார். இதுபற்றி சிம்ரஞ்சித் சிங்மான் தெரிவித்த கருத்துக்களை சுட்டிக் காட்டியாக வேண்டும். **''இந்திராவை சுட்ட தாகக் கூறப்படும் பென்சிங் என்ற பாதுகாவலரை, காவலாளிகள் (அய்.டி.டி.பி பிரிவினர்) ஏன், உடனே சுட்டுக் கொன்றார்கள்? அவர் உயிருடன் இருந்தால் உண்மைகளை சொல்லி விடுவார் என்பதாலா? இந்திரா கொலையில் இத்தாலி நாட்டின் தொடர்பு இருக்கிறது; அந்நாட்டின் சர்வதேச கடத்தல் கும்பல் (*Maffia*) தொடர்பு இருப்பதால், இந்த வழக்கை மறு விசாரணை செய்யவேண்டும். இந்தக் கொலையில் சிறப்புப் புலனாய்வுக் குழு அப்பாவிகளுக்குத் தூக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து விட்டது'' என்றார் சிம்ரஞ்சித்சிங்மான் (தி இந்து - 1-4-1990)**

இந்திரா கொலை செய்யப்பட்டது பிரதமருடைய இல்லத்தில்தான். அப்போது வீட்டில் இருந்த அவரது ஒரே குடும்ப உறுப்பினர் சோனியா தான்; தக்கர் கமிஷன் கூறிய 'அரண்மனை சதி' என்பதன் பொருள் என்ன? அரண்மனைக்குள், அப்போது இருந்தது யார்? இந்த சதியில் அவர்களுக்

படிப்பகம்

www.padippakam.com



*கும் ஆர்.கே. தவானுக்கும் உள்ள தொடர்புகள் என்ன? இந்த உண்மைகளை மறைக்கவே தக்கர் கமிஷன் அறிக்கை, நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்கப்படாமலே முடக்கப்பட்டு, அப்பாவிகளுக்கு தூக்குத் தண்டனை தரப்பட்டது அதைப்போலவே, ராஜீவ் கொலை வழக்கிலும், அன்னிய நாட்டு சதிகளை மறைத்து, 26 அப்பாவித் தமிழர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு விட்டதா? என்ற நியாயமான கேள்வி எழத்தானே செய்யும்?*

*இந்த சர்வதேசகோணத்தில் இத்தகைய வழக்குகள் ஆராயப்படும் போது மற்றொரு கோணமும் இதில் இருக்கிறது. இலங்கை அரசே-இந்தக் கொலைச் சதியில் ஈடுபட்டிருக்குமா என்பதுதான் இந்தப் பார்வை! அதற்கான புறக்கணிக்கப்பட முடியாத காரணங்களை அடுத்துப்பார்ப்போம்!*

**அர்ஜுன் சிங்கின் ரகசியக் கடிதம்**

காங்கிரசு கட்சியின் காரியக்கமிட்டி உறுப்பினர் அர்ஜுன்சிங் பிரதமர் குஜ்ராலுக்கு 21.5.97 தேதியன்று ஒரு ரகசியக் கடிதம் எழுதியுள்ளார். அதில் ஜெயின் கமிசனுக்கு சில தகவல்களை அளிக்க வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார். அவை என்னவென்றும் கூறியுள்ளார்.

அவற்றில் சில:

1. ''ராஜீவ் காந்தி கொலைக்கு வெளிநாட்டுச் சதியும் காரணம்'' என சந்தேகம் எழுகின்றது. அந்தச் சந்தேகம் பாராளுமன்றத்திலும், ஜெயின் கமிசனிலும் அவ்வப்போது எழுப்பப்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கு நாடுகளில் எழுந்த பிரச்சினைகள் தொடர்பாக ராஜீவ் தெரிவித்த கருத்து என்ன என்பது பற்றியும் கமிசன் அறிந்து கொள்ள விரும்புகிறது. அந்தத் தகவல்களை அரசிடம் கமிசன் கோரியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இதுவரை அரசு தரப்பிலிருந்து எந்த பதிலும் கொடுக்கப்படவில்லை.
2. 'ராஜீவை பிரதமர் பதவியிலிருந்து அகற்ற 1985-லிருந்து சில உள்நாட்டு அரசியல் சக்திகள் முயன்றன'' என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உளவுத்துறை நிறுவனங்கள் அவற்றை கூர்ந்து கவனித்து நடவடிக்கை எடுத்து அவற்றை பதிவு செய்து வைத்திருக்கும். இப்படி நடவடிக்கை எடுத்த தகவல்களைப் பற்றிய ரிக்கார்டுகளை ஜெயின் கமிசனுக்கு கொடுக்க வேண்டும்.
3. 1990-91 காலகட்டத்தில் சந்திராசாமியின் நடவடிக்கைகள் பற்றி கமிசன் ஏற்கெனவே விசாரித்துள்ளது. அதனால் உளவுத்துறை, வருமான வரி இலாகா, அமலாக்கப் பிரிவு, வருவாய் அமலாக்கப் பிரிவு, பிரதமர் அலுவலகம் இப்படி பல இடங்களி ஏ சந்திராசாமி பற்றி உள்ள தகவல்களை கமிசனுக்கு கொடுக்க வேண்டும். - தமிழன் எக்ஸ்பிரஸ், [டிச.3.5.1997]

படிப்பகம்

www.padippakam.com

# 4. ராஜீவ் கொலையும் - சர்வதேச சதியும் II

ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த காலத்தில் எடுத்த மிகமோசமான நடவடிக்கை, இலங்கைப் பிரச்னையில் தலையிட இந்திய ராணுவத்தை அனுப்பியதாகும். அமைதிப்படை என்ற பெயரில் போய் அமளிப்படையாக மாறி - பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்து, பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி உடைமைகளை நாசப்படுத்தியது இந்திய ராணுவம். சர்வதேச அரங்கில் இந்தியாவுக்கு தலைக்குனிவை ஏற்படுத்திய அந்த நடவடிக்கை, கடைசியில் மோசமான தோல்வியில்தான் முடிந்தது இலங்கையின் அதிபரான பிரேமதாசா, இந்தியப் படைகளை வெளியேற 'கெடு' நிர்ணயித்து விட்டார். கடைசியில் ராணுவம் தோல்விகளை சுமந்து கொண்டு, வி.பி.சிங். ஆட்சிக்காலத்தில் வெளியேறியது. இந்த நிலையில் ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமராக வரக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டால், மீண்டும் ராஜீவ்காந்தி ராணுவ ரீதியான மோதல்களுக்கு தயாராகி விடுவார் என்ற அச்சம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டு, அதன் காரணமாக இந்தப் படுகொலை நடந்திருக்கலாம் என்று ஒரு சந்தேகம் எழுப்பப்படுகிறது; விசாரணையில் ஆராயப்பட வேண்டிய முக்கிய கோணங்களில் இதுவும் ஒன்று; ஆனால், இதுபற்றி எல்லாம், விசாரணைகளுக்கே எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதுதான் வேதனையான உண்மையாகும்.

டாக்டர் நோமன் பேக்கர் (Dr. Noman Baker) என்ற அமெரிக்க ஆய்வாளர் 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' ஆங்கில வார ஏட்டில் (ஆக 22-28, 1992) இந்தக் கோணத்தில் எழுதியுள்ள ஒரு விரிவான கட்டுரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதில் அவர் எழுப்பியுள்ள கேள்விகள் ஆழமான அர்த்தமுடையவை; எளிதில் புறக்கணித்து ஒதுக்கிட முடியாதவை; அந்த கட்டுரையின் முக்கிய கருத்துக்கள் இங்கே சுருக்கமாகத் தரப்படுகின்றன.

> ராஜீவ் கொலையை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக்குழு, விடுதலைப் புலிகள்தான் இந்தக் கொலையைச் செய்துள்ளனர் என்று முன்கூட்டியே முடிவு செய்து கொண்டு அந்த அடிப்படையில் புலனாய்வினைமேற்கொண்டது தவறானது. விடுதலைப் புலிகள் -

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கொலையுடன் சம்பந்தப்படவில்லை என்பதற்கான ஆதாரங்கள் இவர்களுக்குக் கிடைத்தும் கூட, விடுதலைப் புலி களை மட்டுமே இக்கொலையில் குற்றம் சாட்டுவதற்கு, இந்த ஆதாரங்களை எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதிலேயே கவன மாக இருக்கிறார்கள்.

- இந்தியப்படைகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டதை, ஆரம்பம் முதலே எதிர்த்து வந்த பிரேமதாசா, ஜனாதிபதியாக வந்தவுடன் இந்தியப்படைகளைத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். வாபஸ் ஆவது காலதாமதமான நிலையில், பிரேமதாசாவே, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி இந்திய ராணு வத்தைத் திருப்பித்தாக்கச் செய்தார். கடைசி யில் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை களில் இனி இந்தியா தலையிடாது என்று முடிவெடுத்து, அன்றைய பிரதமர் வி.பி.சிங். படைகளை திரும்பப் பெற்றார். இந்த நிலை யில் ராஜீவ் மீண்டும் பிரதமரானால், இலங் கைப் பிரச்சினையில் மீண்டும் ராணுவ ரீதி யாகத் தலையிடக்கூடும் என்ற அச்சம் பிரேம தாசாவுக்கு இருந்தது.


பிரேமதாசா

- புலிகள் இயக்கத்தால்தான் இப்படிப்பட்ட படு கொலைகளை செய்ய முடியும் என்ற ஒரு கருத்து இந்திய மண்ணில் பரப்பப்பட்டு வருகிறது. உண்மையில் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசுடன் சேர்ந்து புளாட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற குழுக்கள் ஆயுத பாணிகளாக செயல்பட்டு வருகின்றன. மாலத்தீவு அரசைக் கைப்பற்றி அதை எதிர்கட்சிகளிடம் ஒப்படைக்க - சில ஆண்டு களுக்குமுன் புளோட் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் கூலிப் படையாக செயல்பட்டு, அதில் தோல்வி அடைந்தனர். இவர் களைப் பயன்படுத்தி - ராஜீவ் படுகொலைக்கு பிரேமதாசா திட்ட மிட்டிருக்கலாம் அல்லவா? விடுதலைப்புலிகளின் ஆலோசகர் ஆன்டன் பாலசிங்கம் தங்கியிருந்த அவரது சென்னை வீட்டில் குண்டு வைத்து வெடிக்கச் செய்தது. கந்தசாமி நாயுடு என்ற இலங்கைத் தமிழர்தான். இவர் இலங்கை அரசின் உளவுத் துறை யில் பணியாற்றியவர்தான். இவர்மீது சென்னையில் தொடரப்பட்ட வழக்கு பிறகு விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டது.

- ராஜீவ் கொலைத் திட்டத்தின் மிக முக்கிய 'சூத்திரதாரி' என்று கூறப்படும் சிவராசனும் இலங்கை அரசு ஊழியர்தான். இந்திய ராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகக்

படிப்பகம்

www.padippakam.com



கூறப்படும் ஒரு பெண்ணைப் பயன்படுத்தி, இலங்கை அரசுக்காக சிவராசன் இந்தக் கொலையை செய்திருக்கலாமல்லவா?

- கொலை நடந்த சில நாட்களில் இந்தியாவின் விசாரணைக் குழு ஒன்று இலங்கைக்கு வந்து - புலிகளின் எதிரி அமைப்புகளாக செயல்பட்ட இலங்கை அரசு, ஈ.பி. ஆர்.எல்.எப். புளோட், டெலோ ஆகியவற்றிடம் சிவராசனைப் பற்றி விசாரித்தது. இவர்கள் தங்களின் பரம எதிரிகளான விடுதலைப்புலிகளுடன் சிவ ராசனைத் தொடர்பு படுத்தாமல் விடுவார்களா? அதே நேரத்தில், உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவி செய்வதற்காக விடுதலைப்புலிகள் முன்வந்த போதும், இந்த உதவியை விசாரணைக் குழு நிராகரித்து விட்டது. விடுதலைப் புலிகள் இந்தக் கொலையைச் செய்தனர் என்பதற்கு தடயம் எதுவும் கிடைக்காத, விசாரணையின் துவக்க காலத்திலேயே, விசாரணைக் குழுவினர் இப்படிச் செயல்பட்டது, ஒரு சார்பானது அல்லவா?

- சிவராசன் இலங்கை அரசுக்காகப் பணியாற்றியவர். இவரது புகைப்படங்களை கிழக்கு மாநிலத்தில் உள்ள அரசு அலுவலகங் களுக்கு எல்லாம் வினியோகித்த இலங்கை அரசு, இவர் இலங்கை அரசுக்காகப் பணியாற்றிய விவரத்தைத் தெரிவிக்காமல் மறைத்து விட்டது. தன்னிடம் பணியாற்றிய கந்தசாமி நாயுடுவை பால சிங்கத்தைக் கொலை செய்வதற்காக, தமிழகத்துக்கு அனுப்பிய இலங்கை அரசு, ராஜீவ் கொலைக்காக சிவராசனை ஏன் அனுப்பி இருக்கக் கூடாது என்ற கோணத்தில் புலனாய்வுத்துறை விசாரணை நடத்தவே இல்லை.

- புலிகளின் ஐரோப்பிய வங்கித் தொடர்புகளை ஆராய்ந்து, அதன் மூலம் அவர்களுக்கும் வெளிநாட்டு அரசுகளுக்கும் தொடர்புகள் இருக்கிறதா என்பதை ஆராய முனைந்த புலனாய்வுக்குழு, டெலோ, ஈபி.ஆர்.எல்.எப். புளோட் அல்லது வேறுகூலிப் படை களுக்கு இலங்கை அரசு பொருளாதார உதவிகள் செய்ததா என்பதை ஏன் ஆராயவில்லை?

- தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதற்கு விடுதலைப் புலிகளைத்தான் தமிழ்நாட்டு எதிர்கட்சித் தலைவர்களான ஜெயலலிதாவும், வாழப் பாடி ராமமூர்த்தியும் பயன்படுத்திக் கொண்டனர். பிறகு தமிழ் நாட்டில் ஜெயலலிதா ஆட்சியில் அமருவதற்கும், ராஜீவ் கொலையை விடுதலைப்புலிகளே செய்தனர் என்று கூறி அதில், தி.மு.கவை தொடர்புபடுத்திப் பேசினர். இலங்கை பாதுகாப்பு அமைச்சர்,புலிகள்தான் இந்தக் கொலையைச் செய்ததாகக் கூறிய தாக, இந்திய சட்டத்துறை அமைச்சர் சுப்ரமணியசாமியும், பிரதம ராக இருந்த.சந்திரசேகரும் எந்த ஆதாரமும் இன்றி பேசினார்கள். இலங்கை அரசு, இதில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என்ற

படிப்பகம்

www.padippakam.com



சந்தேகத்தைக் கூட அவர்கள் எழுப்பத் தயாராக இல்லை. இந்தக் கொலையில் இலங்கை அரசுக்குத் தொடர்பு உண்டு என்பது நிருபணமாகி விட்டால் நாடுகளுக்கிடையே பிரச்சினையும், ஆட்சிக்கு நெருக்கடியும் ஏற்படும் என்று ஆட்சியில் இருந்தவர்கள் கருதி, பழியை புலிகள் தலைமீது போட்டுவிடலாம் என்று முடிவு செய்தனர், அரசியல் ஆதாயத்துக்கு இதைப் பயன்படுத்த நினைத் தவர்களும், இதையே விரும்பினர். அதிகாரத்தில் இருக்கும். மேல் மட்டத் தலைவர்கள் உருவாக்கிவரும் கருத்துக்கேற்ப செயல்படு வதையே புலனாய்வுத்துறையும் விரும்பியது. ஆளும் கட்சியின ரும், முக்கிய தலைவர்களும் விரும்பியவாறு செயல்பட்டு, தங்கள் பதவிகளையும், பதவி உயர்வுகளையும் தக்க வைத்துக் கொள்வதி லேயே விசாரணைக் குழுவில் இடம் பெற்றிருந்தவர்கள், கவனம் செலுத்தி செயல்பட்டனர்.

- சிவராசனிடம் புகைப்பிடிக்கும் பழக்கம், குடிப்பழக்கம் உண்டு என்பதற்கு விசாரணைக் குழுவிடம் தகவல்கள் இருந்தும் அதை வெளியிட வில்லை. காரணம் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருப்பவர்களுக்குக் கண்டிப்பாக இப்பழக்கங்கள் இருக்கக் கூடாது. என்பது புலனாய்வுக் குழுவுக்குத் தெரிந்திருந்தும், இதுபற்றிக் கவலைப்படவில்லை. புலிகள் அல்லாத வேறு குழுக் களின் பிரதிநிதியாக சிவராசன் செயல்பட்டாரா என்பது பற்றி ஆராய விசாரணைக்குழு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.



**சிவராசன், சுபா**

படிப்பகம்

www.padippakam.com



## கார்த்திகேயன் செய்த தவறுகள்

''சிறப்புப் புலனாய்வுக் குழுவின் எஸ்.ஐ.டி. அதிகாரிகள், ராஜீவ் கொலை வழக்கில் செய்த விசாரணையின் அனைத்து விவரங்களை யும் ஜெயின் கமிஷன் பெற்றுக் கொண்டது. குற்றவாளிகள் மீதான விவரங்கள், வாக்குமூலங்கள் மற்றும் பல்வேறு வகையான ஆதாரங் களையும் அவர்களிடம் நாங்கள் பெற்றுக்கொண்டோம். எஸ்.ஐ.டி. யின் தலைவர் கார்த்திகேயனிடமும் கமிஷன் விசாரணை நடத்தியது. விசாரணையில் அவர்கள் செய்த தவறுகளையும் சுட்டிக் காட்டினோம்!'' என்று சொல்லிவிட்டு, சி.பி.ஐ. விசாரணையில் நடந்த குளறுபடிகளை நீதிபதி ஜெயின் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் எடுத்து வைக்கின்றன.

''ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையில் என்ன சொல்லப்பட்டது? 'பத்மநாபா கொலை வழக்கிலும் சிவராசன் சம்பந்தப் பட்டிருந்தார். பத்மநாபாவைக் கொலை செய்த சமயத்திலேயே சிவராசனை பிடித்திருந்தால் ராஜீவ் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால், தி.மு.க. அரசு பத்மநாபாவைக் கொன்ற குற்றவாளிகளைத் தப்பவிட்டது' உண்மை தானே... அதற்கான ஆதாரம் ஜெயின் கமிஷனுக்குக் கிடைத்திருக்கிறதே? எஸ்.ஐ.டி-யினர் இது பற்றி ஏன் விசாரிக்கவில்லை?

சரி. எஸ்.ஐ.டி-யினர் முடிவெடுத்துச் சென்ற பாதையில்தான் வழக்கின் விசாரணை வெற்றிகரமாகப் போய் உள்ளதா? அப்படியும் சொல்ல முடியாது.

ராஜீவ் கொலையில் விடுதலைப்புலிகளுக்கு உள்ள தொடர்பு களைப் பற்றி சி.பி.ஐ.யின் குற்றப்பத்திரிகையில் தெளிவாக சொல்லப்படவில்லை. இதற்குக் காரணம் பிரபாகரன், பொட்டு அம்மான் மற்றும் புலிகளின் பெண்கள் படைத் தலைவி அகிலா ஆகிய மூன்று பேரை சி.பி.ஐ-யால் கைது செய்ய முடியவில்லை. இவர்கள் கைது செய்யப்பட்டால்தான் இதுபற்றிய வாதங்களை கோர்ட்டில் வைக்க முடியும் என்பதால், மிகமிக முக்கியமான இந்த மூன்று பேரையும் தங்கள் வழக்கில் இருந்து தனியாகப் பிரித்து விட்டது சி.பி.ஐ.!''

– ஜூனியர் விகடன் (10.12.97)

படிப்பகம்

www.padippakam.com



- கொலை நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் சிவராசன் சுவீடன், சிங்கப்பூர், சவூதி அரேபியா, அரேபிய கூட்டமைப்பு நாடுகளுக்கு பயணம் செய்திருக்கிறார். விடுதலைப்புலிகள் இயக்கத்துக்காக சிவராசன் இந்தக் கொலையினைச் செய்திருந் தால், இந்த நாடுகளுக்கு பயணம் செய்து அங்குள்ள நிறுவனங் களை சந்திக்கவோ, அல்லது பணம் வசூல் செய்யவோ அவசியம் இருந்திருக்காது. காரணம் இந்நாடுகளில் உள்ள புலிகளின் அமைப்புகள் ஒரு இணைப்பாக செயல்பட்டு, இந்தப் பணிகளை செய்து முடிக்கக்கூடிய திறமை பெற்றவை. எனவே புலிகள், சிவ ராசனை நேரடியாக இந்தநாடுகளுக்கு அனுப்ப வேண்டிய அவசியமே இல்லை; ஏதோ ஒரு கூலிப் படைக்காக சிவராசன் செயல்பட்ட காரணத்தால்தான், இந்த நாடுகளுக்கு நேரடியாகச் சென்றிருக்கிறார் என்று கருத இடமிருக்கிறது. ஆனால் சிவ ராசனின் இந்தப் பயணத்தை புலிகளுக்கு எதிராகப் பயன் படுத்தவே புலனாய்வுக்குழு முயன்றிருக்கிறது. விடுதலைப் புலி களுக்காக இந்தக் கொலைத் திட்டத்தினை வகுத்துக் கொடுத்த சிவராசன், புலிகளுக்குத் தெரியாமலேயே, ஒரு வெளிநாட்டு அரசுடன் ரகசிய ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருந்ததாக ஆய்வுக் குழுவினர் கதை ஜோடிக்கிறார்கள். புலிகளுக்குத் தெரியாமல், ஒரு நாட்டோடு, புலிகள் இயக்கப் பிரதிநிதி, ரகசியமாக ஒப்பந்தம் போட முடியும் என்ற கதையை யார்தான் நம்ப முடியும்? சிவராசன் புலிகளுக்காக செயல்படவில்லை என்பதற்கான ஆதாரங்களைக் கூட இப்படி புலிகளுக்கு எதிராகவே புலனாய்வுக்குழு பயன்படுத்தி யிருக்கிறது.
- 1991 ஆகஸ்டில் பெங்களூரில் தற்கொலை செய்து கொள்கிறார் சிவராசன். அதற்கு ஒரு மாதத்துக்குப்பிறகு செப்டம்பர் 2ம் தேதி மதுரை அவனியாபுரம் அகதிகள் முகாமில் ராசாராம் என்ற ஒற்றைக்கால் இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். இவருக்கும் சிவராசனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று கூறினார்கள். ஆனால் உண்மையில் கைது செய்யப்பட்டவர் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பைச் சேர்ந்தவர் என்பது பிறகு தெரியவந்தது. கிடைக்கக் கூடிய ஆதாரங்கள் எல்லாவற்றையும் புலிகளுக்கு எதிராகவே புலனாய்வுக் குழு பயன்படுத்தத் துடித்தது என்பதையே இது காட்டுகிறது. அந்த ஒற்றைக்கால் ராசாராம் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சார்ந்தவர் என்பது மட்டும் தெரியாவிட்டால், அவரின் கதி என்ன ஆகி இருந்திருக்கும்? (அவரும் 27 வது குற்றவாளியாக, சிறப்பு நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பார் - ஆர்)

- இவைகள்தான் டாக்டர் நோமன் பேக்கர் 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி' வார ஏட்டில் எழுதியுள்ள கட்டுரைகளின் மையக் கருத்துக்கள். கொலைச் சதியில் - இலங்கை அரசு ஈடுபட்டிருக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதை

படிப்பகம்

www.padippakam.com




இந்தக் கருத்துக்கள் அழுத்தமாக விளக்குகின்றனவே! இந்தக் கோணத் திலும் - புலனாய்வு விசாரணைகள் நடைபெற்றிருக்க வேண்டாமா. என்பதே நாம் எழுப்பும் கேள்வி!

ஜெயின் கமிஷன் முன் ஆஜராகும்படி தமிழர் தேசிய இயக்கத்தலைவர் **பழ. நெடுமாறன்**, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் **கி.வீரமணி**, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வைகோ, கோவை. கு. இராம கிருட் டிணன்** ஆகியோர் அழைக்கப்பட்டனர். எப்போது என்பதுதான் முக்கிய மானது. ஜெயின் தனது இடைக்கால அறிக்கையை அளித்த பிறகு கமிஷன் இவர்களை அழைத்தது.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை மட்டும் இரகசிய விசாரணை யாக நடத்தப்பட்டது. ஏனெனில் இவர்கள் நால்வரும் புலிகளின் ஆதர வாளர்கள். எனவே இவர்கள் கூறும் தகவல்கள் வெளியில் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக இரகசிய விசாரணை என்று திட்டமிட்டுச் செய்தார் கள். அப்படி இருந்தாலும் **''நக்கீரன்''** வார இதழ் எவ்விதமோ துப்புத் துலக்கி பழ. நெடுமாறன் அளித்த சாட்சியத்தின் ஒரு பகுதியை பிரசுரித்தது.

இலங்கை அரசே - இந்தக் கொலைக்கு காரணமாக இருக்கலாம் என்ற, கோணத்தில் பழ. நெடுமாறன் அவர்களின் சாட்சியம் அமைந்திருந்தது. இதுபற்றி நக்கீரன் வெளியிட்ட செய்தியை இங்கு தருகிறோம்.

''குறிப்பாக இலங்கையின் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரேம தாசாவுக்கும் இந்தக் கொலைக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? என்ப தைப் பற்றி புலனாய்வுத்துறை சிந்திக்கவே இல்லை. இலங்கை அரசியலில் இந்திய ஆதரவு நிலை அரசியல்வாதிகள், இந்திய எதிர்ப்புநிலை அரசியல்வாதிகள் என இரண்டு வகையினர் உண்டு. இந்திய எதிர்ப்புநிலை அரசியல் வாதிகளுக்குத் தலைமை தாங்கியவர் பிரேமதாசா ஆகும்.



ராஜீவ் தாக்கப்படுதல்

1987-ஆம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்பாட்டில் கை யெழுத்திட பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பு சென்ற போது அந்நாட் டின் பிரதமர் என்ற முறையில் பிரேம தாசா அவரை வர வேற்க வந்திருக்க வேண்டும். ஆனால் பிரேமதாசாவும் மற்றும் 11 அமைச்

படிப்பகம்

www.padippakam.com



சர்களும் ராஜீவுக்கு எதிராக கண்டன அறிக்கை வெளியிட்டு வரவேற்பைப் புறக்கணித்தார்கள். கொழும்பு நகரில் பிரேமதாசா ஆதரவாளர்கள் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

விமான நிலையத்தில் பிரதமர் வழியனுப்பு நிகழ்ச்சியின்போது பிரதமர் ராஜீவ்காந்தியை சிங்களச் சிப்பாயான விஜயமுனி விஜித ரோகண டி. சில்வா என்பவன் துப்பாக்கி கட்டையால் தாக்கினான். ஆனால் அவன் மனநிலை சரியில்லாதவன் என்று கூறி சிங்கள அரசு மழுப்பியது.

குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரேமதாசா போட்டியிட்டபோது, தான் பதவி ஏற்றவுடன் இந்தியப் படையை உடனடியாக வெளியேற்றுவதாக வாக்குறுதி கொடுத்தார். அதைத் தொடர்ந்து 1989- ஆம் ஆண்டில் அவர் பதவி ஏற்றவுடன் இந்திய அமைதிப்படையை உடனடியாக திரும்பப் பெறவேண்டும் என பிரதமர் ராஜீவுக்குக் கடிதம் எழுதினார். அதுமட்டு மல்லாமல் அந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் கொழும்புவில் நடைபெற விருந்த சார்க் மாநாட்டினை நடத்துவதற்கான நிபந்தனையாக இந்தியப் படை வெளியேற வேண்டும் என்று கூறினார். இந்தியப் படை தொடர்ந்து இருப்பது இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அத்துமீறிய தலையீடு என்றும், சர்வதேச சட்டங்களையும் மரபுகளையும் அப்பட்டமாக மீறும் செயல் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ராஜீவ் மீது இருந்த தனது வெறுப்பை அப்பட்டமாக வெளிக்காட்டும் வகையில் ராஜீவை தாக்கிய சிங்கள சிப்பாய் விஜயமுனியை சிறை யிலிருந்து விடுதலை செய்தார். அது மட்டுமல்ல. தென்மாகாண சட்டமன்ற உறுப்பினராகவும் அவனைத் தேர்ந்தெடுக்க உதவினார்.

விடுதலைப் புலிகளுடன் பிரேமதாசா நடத்திய பேச்சுவார்த்தை முறிந்து விட்ட கட்டத்தில் ஈழக் கவிஞர் காசி ஆனந்தன் பிரதமர் ராஜீவ் காந்தியை சந்திக்க அனுமதி கேட்டார். விடுதலைப் புலிகள் மீது ராஜீவ் கொண்டிருந்த கருத்து அடியோடு மாறியிருந்த காரணத்தால் அவரைச் சந்திக்க உடனடி யாக சம்மதித்தார். அதன்படி. 5.3.91ல் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது கடந்த காலத்தில் விடுதலைப்புலிகள் விஷயத்தில் தான் தவறு செய்துவிட்டதாக ராஜீவ்காந்தி கூறினார். அதுமட்டுமல்லாமல் தான் மீண்டும் பதவிக்கு வந்த பிறகு விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகவும் அதுவரை போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும்படியும் கூறினார். ராஜீவ் - காசி ஆனந்தன் சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட அத்தனை விஷயங்களும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டன. அவரும் அதுகேட்டு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

அதற்கு அடுத்த ஏப்ரல் மாதத்தில் இலண்டனைச் சேர்ந்த ஈழத் தமிழர் அர்ச்சனா சிற்றம்பலம் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார். அவரிடமும் ராஜீவ் காந்தி மனம்விட்டுப் பேசினார். இந்தச் செய்திகளைக் கண்டு இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா அதிர்ச்சியடைந்தார். ஏற்கெனவே ராஜீவ் மீது கடும் வெறுப்பு கொண்டிருந்த அவர், புலிகளுடன் ராஜீவ் சமரசமாகப் போகக்கூடிய சூழ்நிலைகண்டு திடுக்கிட்டார். மீண்டும் ராஜீவ் பிரதமர் ஆகி விடுதலைப்புலிகளுக்கு உதவுவதன் மூலம் தனக்கு நெருக்கடி ஏற்படலாம் என அஞ்சினார்.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கை அரசியலில் தனது எதிரிகளைத் தீர்த்துக் கட்டியவர் பிரேம தாசா என்பதை மறந்துவிடக் கூடாது. பிரேமதாசா அமைச்சரவையில் முக்கிய பொறுப்பு வகித்த அதுலத் முதலி அமைச்சர் பதவியில் இருந்து விலகி பிரேமதாசாவுக்கு எதிராக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். 1993-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேர்தல் பிரச்சார மேடையில் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலைப் பழி விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்டது. அதுலத் முதலி கொலைபற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு அளித்த அறிக்கையில் அதுலத் முதலியைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தவர் பிரேமதாசா என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இந்தப் படுகொலையில் அவருக்கு நேரிடையான தொடர்பு உண்டு. இக்கொலைப்பழியை விடுதலைப்புலிகள் மீது சுமத்தியது மற்றொரு தவறு ஆகும் இக்கொலைக்கும் விடுதலைப் புலி களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று விசாரணைக்குழுவின் அறிக்கையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போதைய குடியரசுத்தலைவர் சந்திரிகாவின் கணவர் விஜயகுமார ரணதுங்காவின் கொலைக்கும் பின்னணியில் பிரேமதாசா இருந்தார் என்பதும் பின்னாளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, பிரதமர் ராஜீவின் கொலை யிலும் பிரேமதாசாவின் கைவண்ணம் இருக்குமோ என்ற கேள்விக் குறியை எளிதில் மறுத்துவிட முடியாது. புலிகளுக்குப் போட்டியான தமிழ்க் குழுக் கள் பிரேமதாசாவின் அரவணைப்பில் இருந்தன. அவைகளில் ஏதாவது ஒன்றை தனது தீய நோக்கத்திற்கு பிரேமதாசா பயன் படுத்திக் கொண்டிருக் கலாம். ராஜீவ் கொலை திட்டமிட்டு தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு அந்தப் பழி விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்படுவதின் மூலம் தமிழ்நாட்டு மக்க ளின் வெறுப்புக்கு புலிகளை ஆளாக்கி அரசியல் ஆதாயம் தேடுவதற்கு பிரேம தாசா திட்டமிட்டு இருந்திருக்கலாம். ஏனெனில் ராஜீவ்காந்தி கொலை யினால் முழுக்க முழுக்க ஆதாயம் அடைவது பிரேமதாசாதான். இந்தக் கோணத்தில் இந்தப் படுகொலையை புலன் விசாரணை நடத்த சி.பி.ஐ. முன்வரவே இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## அமெரிக்க இராணுவம் தந்த குண்டு?

**ஆர்.டி.எக்ஸ் வெடி சாதனத்தைச் சர்வதேசத் தீவிரவாதக் குழுவால் மட்டுமே உருவாக்க முடியும். மிகவும் சக்தி வாய்ந்த இந்த வெடி பொருள், பொதுவாக இராணுவ நடவடிக்கையின்போது மட்டுமே பயன்படுத்தப்படும். இந்தக் குண்டு அமெரிக்க இராணுவத்தில் பயன்படுத்தப்படும் வகையைச் சேர்ந்தது என்று தமிழக அரசின் தடய அறிவியல்துறை இயக்குநர் டாக்டர் பி. சந்திர சேகரன் கூறினார்.**

***(தினமணி 25-5-91)***

படிப்பகம்

www.padippakam.com

# 5. ஆர். கே. தவான் - மிரட்டல்? மர்மம் என்ன?

1977 ஆண்டு இந்திரா காந்தி பதவியிழந்த போது அவரிடம் ஒரு சாதாரண உதவியாளராக ஆர்.கே. தவான் வேலையில் சேர்ந்தார். இந்திரா காந்தியின் நம்பிக்கைக்குரிய யஷ்பால் கபூர் என்பவரின் உறவினரே ஆர்.கே. தவான் ஆவார். யஷ்பால் கபூரின் தயவில் இந்திரா காந்தியிடம் வேலைக்குச் சேர்ந்தவர் 1980ல் இந்திரா காந்தி பிரதமரானபோது அவரின் தனி உதவியாளர்களில் ஒருவராக தவான் நியமிக்கப்பட்டார். நாளடைவில் இந்திராவின் மிக நம்பிக்கைக்கு உரியவரானார்.

இந்திரா காந்தி கொலை பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட தக்கர் கமிசன் தனது அறிக்கையில் இந்திரா கொலையில் அவரது இல்லத்திற்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பெற்று அரண்மனை சூழ்ச்சி போன்ற பெரிய சதிகள் இதில் அடங்கியுள்ளன என்று குறிப்பிட்டுள்ளது. இந்த கொலையில் இந்திராவின் தனி உதவியாளர் ஆர்.கே. தவான் மீது சந்தேகம் எழுகிறது. இவரையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று இவ்வறிக்கையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது.

ஆனாலும் தவானின் மீது எவ்விதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்திரா காந்தி உயிரோடு இருந்தவரை காங்கிரசு கட்சிக்கும் ஆர்.கே. தவானுக்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது. இந்திராவை சந்திக்க வருகிற காங்கிரசு தலைவர்களை வரவேற்று அவர்கள் இந்திராவை சந்திக்க அழைத்துச் செல்வதுதான் இவரது வேலையாகும். இப்படியொரு சாதாரண வேலையிலிருந்த ஆர்.கே. தவான் இந்திராவின் மறைவிற்கு பிறகு காங்கிரசு தலைவராக திடீரென உயர்ந்தது எப்படி? காங்கிரசு செயற்குழு உறுப்பினராகவும் இவர் ஆக்கப்பட்டார். கேசரி காங்கிரசு தலைவராக இருந்தபோது காங்கிரசு பொதுச் செயலாளர்களில் ஒருவராகவும் இவர் நியமிக்கப்பட்டார். 1998ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் டெல்லி தொகுதி ஒன்றில் போட்டியிடுவதற்கு வேட்பாளராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியா முழுவதற்கும் அறிவிக்கப்பட்ட காங்கிரசு வேட்பாளர் பட்டியலில் முதலாவதாக அறிவிக்கப்பட்ட பெயர் இவரது பெயரேயாகும். தேர்தலில் தோற்று போனார் என்பது வேறு விஷயம். ஒருவேளை காங்கிரசு வெற்றிப் பெற்று சோனியா பிரதமராகயிருந்தால் ஆர்.கே. தவான் மத்திய அமைச்சராகி இருப்பார்.

இந்திராவின் கொலையில் சம்பந்தப்பட்டவர் என்று தக்கர் கமிசனால்

படிப்பகம்

www.padippakam.com



*கடுமையாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு காங்கிரசு கட்சி பெரும் பதவிகளை அளித்தது ஏன்?*

*இந்திரா மறைவிற்கு பிறகு ராஜீவ் காந்தி பிரதமரானபோது சிறிது காலம் ஆர்.கே. தவானை ஒதுக்கி வைத்திருந்தார் என்பது உண்மையே. ஆனாலும் மிக விரைவிலேயே தவான் காங்கிரசு வட்டாரத்தில் ராஜீவ் குடும்பத்திற்கு மிக நெருக்கமான புள்ளியாக மாறியது எப்படி?*

*கொலைகாரப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய தவான் காங்கிரசு பொதுச் செயலாளர் பதவி வகிக்க பின்னணியிலிருந்து உதவியவர் யார்?*

*ராஜீவ் குடும்பத்தில் மிக முக்கியமான ஒருவர்தான் இவ்வாறு தவானுக்கு உதவி செய்திருக்க முடியும். அதுவும் ராஜீவ் மரணமடைந்தபிறகு பி.வி. நரசிம்மராவ் காலத்தில்தான் காங்கிரசு செயற்குழு உறுப்பினராகவும்,கேசரி காலத்தில்தான் காங்கிரசு பொதுச் செயலாளராகவும் பதவிகளை பெற முடிந்தது. ராஜீவ் காந்தி காலத்தில் இவருக்கு மீண்டும் உதவியாளர் பதவி கொடுக்கப்பட்டதே தவிர காங்கிரசு கட்சியில் உறுப்பினராகக் கூட இவரைச் சேர்க்கவில்லை. அப்படியானால் சோனியா தயவினால்தான் இவருக்கு பெரும் பதவிகள் கிடைத்திருக்கின்றன. தனது மாமியாரின் படுகொலையில் சம்மந்தப்பட்டவர் என்று குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு சோனியா உதவி செய்ததின் மர்மம் என்ன? அரண்மனை சூழ்ச்சியால்தான் இந்திரா படுகொலை செய்யப்பட்டார் என தக்கர் கமிசன் சாட்டிய குற்றச்சாட்டின் பின்னணி என்ன? அரண்மனை சூழ்ச்சி என்றால் இந்திரா குடும்பத்தைச் சேர்ந்த சிலரே இந்தக் கொலையில் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்பதுதான் பொருள். இந்திரா குடும்பத்தில் ராஜீவ் காந்தி, சோனியா, சஞ்சய் காந்தியின் மனைவியும், மற்றொரு மருமகளுமான மேனகா ஆகிய மூவருமே இருந்தனர். மற்றவர்கள் குழந்தைகள் இவர்கள் இந்த சூழ்ச்சியில் சம்பந்தப்பட்டிருக்க முடியாது. இந்திரா இருந்த காலத்திலேயே அவரது வெறுப்புக்கு ஆளாகி குடும்பத்திலிருந்து மேனகா வெளியேற்றப்பட்டார். எனவே எஞ்சியுள்ள ராஜீவ், சோனியா ஆகிய இருவரோ அல்லது இருவரில் ஒருவரோ இந்த சதியில் சம்பந்தப் பட்டிருக்க வேண்டும். அப்படி சம்பந்தப்பட்டவர் யார் என்பது ஆர்.கே. தவானுக்கு முழுமையாக தெரிந்திருக்க வேண்டும் அல்லது இந்த சூழ்ச்சியில் சம்பந்தப்பட்டவருடன் தவானும் சேர்ந்து சூழ்ச்சி செய்திருக்க வேண்டும். ராஜீவ் மறைவிற்கு பிறகு சோனியாவின் தயவால் காங்கிரசில் பெரும் பதவிகள் பெறுவதற்கு ஆர்.கே. தவானால் முடிந்திருக்கிறது என்பது ஆழமான பொருள் கொண்டதாகும். சோனியாவின் கருணைக்கு தவான் பாத்திரமானதின் பின்னணி என்ன? கொலை சதியில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அதிலிருந்து மீள்வதற்கு உதவி செய்தும் காங்கிரசு கட்சியில் பெரும் பதவிகளை அடுக்கடுக்காக வழங்கியும் உதவ வேண்டிய கட்டாயம் என்ன? இவ்வாறு உதவாவிட்டால் அரண்மனை சூழ்ச்சிகள் அம்பலமாகிவிடும் என்ற அச்சம் காரணமா?*

***இதுபோன்ற அடுக்கடுக்கான கேள்விகள், சந்தேகங்கள் எழுகின்றன. ஆனால் இவற்றிக்குப் பதில்தான் இதுவரை கிடைக்கவில்லை.***

படிப்பகம்

www.padippakam.com



## ராஜீவ் படுகொலை- புகார்களுக்கு மறுப்பு

ராஜீவ் படுகொலைக்கும் தமது இயக்கத்திற்கும் எள்ளவும் தொடர்பில்லை என்றார் தளபதி கிட்டு.

லண்டனில் இருக்கும் விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு அளித்த பேட்டி:

ராஜீவ்காந்தி படுகொலைக்கும் எங்கள் இயக்கத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. நாங்கள் ஒருபோதும் இந்திய அரசியலில் தலையிட்டது இல்லை.

நாங்கள் இதில் தலையிடவே இல்லை. காலம் வரும்போது இதை புரிந்து கொள்வீர்கள்.

**கேள்வி :** இலங்கைக்கு ராஜீவ் அமைதிப்படையை அனுப்பியதைக் கண்டித்து விடுதலைப்புலிகள் புகார் கூறுகிறார்களே?

**பதில்:** இந்தியாவிலேயே பல பிரச்சினைகள் உள்ளன.

**கேள்வி :** தி.மு.க. ஆட்சிக் கலைப்பைக் கண்டித்து இந்த சம்பவம் நடந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறதே?

**பதில் :** தி.மு.கவிற்காக செயற்பட நாங்கள் ஒன்றும் கூலிப்பட்டாளங்கள் அல்ல மேலும் தி.மு.க. மீது தனிப்பட்ட அக்கறை எதுவும் எங்களுக்குக் கிடையாது. எனவே, இந்த சம்பவத்தில் எங்களுக்கும் தி.மு.க.விற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. நீண்ட நாட்களாகவே இந்தியாவில் உள்ள அரசியல் காரணமாக எதற்கு எடுத்தாலும் எங்கள் மீது புகார் கூறுகின்றனர்.

**கேள்வி :** கலிபோர்னியாவில் ஒருவர் பத்திரிக்கை அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு விடுதலைப்புலிகள் சார்பில் பேசியுள்ளார். நாங்கள் தான் ராஜீவைக் கொன்றோம் என்று கூறியுள்ளாரே?



கிட்டு

**பதில் :** ஒரு பத்திரிகை ஆபீசுக்கு போன் செய்து யாரும் எதுவும் கூறலாம். அப்படிப்பட்ட முட்டாள்கள் கலிபோர்னியாவில் அதிகம் பேர் உள்ளனர். ஆனால் பத்திரிக்கையாளர்கள் முட்டாள்கள் இல்லை. எனது குரல் பல பத்திரிக்கைகள் காதுக்கு நன்றாகத் தெரியும் என்றார் கிட்டு. மேலும், தனது பேட்டியில் நான் அழைப்பு விடுத்தும் இந்திய அரசு சார்பில் தங்களை யாரும் சந்திக்கவில்லை என்றும், தமிழ் நாட்டில் நிறைய தமிழ் குழுக்கள் பயிற்சி பெற்றிருப்பதாகவும் இந்தியாவிலேயே விலை குறைவாக ஆயுதம் கிடைக்கிறது என்றும் கூறியுள்ளார். [சண்டே 23-6-91]

படிப்பகம்

www.padippakam.com

# 6. கமிஷன்களின் கதை

ராஜீவ் கொலை வழக்கில் - சி.பி.அய். சார்பில் சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று விசாரணை நடத்திய தோடு, இரண்டு விசாரணைக் கமிஷன் களும் விசாரணை நடத்தின. டி.ஆர். கார்த்திகேயன் தலைமையில் விசா ரணை நடத்திய சி.பி.அய்.யின் சிறப்பு புலனாய்வுக்குழு விடுதலைப் புலிகள் இயக்கம்தான் ராஜீவ் கொலைக்கு காரணம் என்றும், அதன் தலைவர் வே.பிரபாகரன்தான் இந்தக் கொலைக்கு உத்தரவிட்டார் என்றும் தனது விசாரணையில் தெரிவித்தது. 41 பேர் மீது குற்றம் சாட்டி, இந்தக்குழு, 1992ம் ஆண்டு மே 20ம் தேதி 'தடா' நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், புலி களின் புலனாய்வுப் பிரிவு தலைவர் பொட்டு அம்மான், புலிகள் பெண்கள் உளவுப் பிரிவின் துணைத் தலைவர் அகிலா ஆகியோர் முதன்மையானக் குற்றவாளிகளாக இந்தக் குற்றப்பத்திரிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தனர். (இவர்கள் எவரையுமே சிறப்புப் புலனாய்வுக் குழு சந்திக்கவோ, விசா ரணை நடத்தவோ இல்லை) இந்த மூவரும் தலைமறை வாகி விட்ட குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்தினார் கள். இது தவிர குற்றம் சாட்டப்பட்டவர்களில் 12 பேர் இறந்துவிட்டனர். மீதம் 26 பேர் மீதும் 'தடா' சட்டத் தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக் கல் செய்யப்பட்டது. 288 பேர் சாட்சிகளாக விசாரிக்கப் பட்டனர் இந்த வழக்கில் 75 சதவீத பகுதியை ஒரு நீதிபதி யும், 25 சதவீத பகுதியை மற் றொரு நீதிபதியும் விசாரித் தனர். கடந்த ஜன. 28ந் தேதி



நீதிபதி ஜெயின்

படிப்பகம்

www.padippakam.com



நீதிபதி அளித்த தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் தூக்குத் தண்டனை அளித்து விட்டார்.

ஜே.எஸ். வர்மா தலைமையில் 1991 - மே 27ம் தேதி அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் ராஜீவ்காந்திக்கு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடு களைப்பற்றி மட்டும் விசாரணை நடத்தி, 1992 - ஜூன் மாதம் தனது பரிந்துரையை அரசிடம் சமர்ப்பித்தது. நரசிம்மராவ் தலைமையிலிருந்த காங்கிரஸ் ஆட்சி கமிஷன் பரிந்துரையை நாடாளுமன்றத்தில் சமிர்ப்பித்து, அதன் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது. மத்திய, மாநில அரசுகளின் புலனாய்வுப் பிரிவுகளையும் தமிழக போலீசாரின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இக்கமிஷன் கடுமையாகக் குறை கூறியதோடு திருபெரும்புதூர் கூட்டத்துக்குத் திரண்டிருந்த காங்கிரஸ் கட்சியினர், பொறுப்பில்லாதவர்களாகவும், ஒழுங்கற்றவர்களாகவும் நடந்து கொண்டனர் என்றும் சுட்டிக் காட்டியது.

மூன்றாவது விசாரணைக் கமிஷன் - நீதிபதி ஜெயின் விசாரணைக் கமிஷன். ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதற்கான பின்னணிகள் கொலை செய்வதற்கான காரணங்கள்; சம்பந்தப்பட்டுள்ள நபர்கள், நிறு வனங்கள், அதில் அடங்கியிருந்த சதிகள் பற்றி இந்த விசாரணைக் கமிஷன் விசாரணை நடத்தியது. 1981 முதல் 1991 வரை நடந்துள்ள நிகழ்வுகள், தொடர்பான தனது அறிக்கையை இந்தக்கமிஷன் இடைக்கால அறிக்கை யாக, மத்திய அரசிடம் சமர்ப்பிக்க அது இந்திய அரசியலில் கடும் புயலைக் கிளப்பியது. ராஜீவ் படுகொலைக்கு - விடுதலைப்புலிகள் - தி.மு.க. ஆட்சி - தமிழ்நாட்டு மக்கள் ஆகிய மூவரையும் கமிஷன் குற்றம் சாட்டியது. இதனால், மத்தியில் நடந்து வந்த ஐக்கிய முன்னணிக்கு காங்கிரஸ் தந்துவந்த ஆதரவை விலக்கிக் கொண்டு ஆட்சியைக் கவிழ்த்தது. நாடாளுமன்றத்திற்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுவிட்ட, நிலையில் 6 ஆண்டுகளில் 12 முறை கால நீட்டிப்பு பெற்று செயல்பட்டு வந்த இந்தக் கமிஷன், மேலும் 3 மாதகாலம் நீட்டிப்பு கேட்டது. ஐக்கிய முன்னணி ஆட்சி கால நீட்டிப்பைத்தரவில்லை, எனவே கமிஷன் முழுமையாக விசாரணையை முடிக்காத நிலையிலே, தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்து விட்டு பதவி விலகியது. கமிஷன் அறிக்கையை - இன்னும் வாஜ்பாய் ஆட்சி வெளியிடவில்லை என்றாலும்; இதில் சி.பி.அய். தொடர்பு இருக்கலாம் என்று கமிஷன் சந்தேகிப்பதாக பத்திரிக்கைகளில் செய்திகள் வந்துள்ளன.

ஆனால், ஜெயின் கமிஷன் விசாரணையின் போது ராஜீவ் கொலை சதிபற்றி பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன. ராஜீவ் காந்தி கொலை யில் வெளிவராமல் இருந்த பல அம்சங்கள் வெளிச்சத்துக்கு வந்தன; ஆனால் நீதிபதி ஜெயின் தனது இடைக்கால அறிக்கையில் புலனாய்வுத் துறையைப் போலவே ஒரு சார்பாக - ஏற்கெனவேதான் செய்து கொண்ட

படிப்பகம்

www.padippakam.com



முடிவுக்கு ஏற்பவே பரிந்துரைகளை வழங்கினார். அறிக்கையின் முதல் அத்தியாயத்தின் - முதல் பக்கத்தில் ராஜீவ் காந்தியின் முழுமையான வண்ணப்படத்தை வெளியிட்டு - அந்த அத்தியாயம் முழுமையிலும் - ராஜீவுக்குப் புகழாரம் சூட்டியிருந்தார் நீதிபதி ஜெயின். விசாரணைக் கமிஷன் மரபிலே இதுவரை, எந்த நீதிபதியும் இப்படிப்பட்ட ஒரு முறையைப் பின்பற்றிய வரலாறே கிடையாது. நீதிபதி ஜெயின், ஒரு அரசியல் வாதியாகவே தனது பரிந்துரையைத் தந்த போதிலும், விசாரணையில் பல உண்மைகள் வெளிவராமல் - மறைக்கும் முயற்சிகளையும் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியும் - உளவு நிறுவனங்களும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தன; இதை வலிமையான சான்றுகள் மூலம் நிறுவிட முடியும்.

பிரதமர் நரசிம்மராவின் அலுவலகத்திலிருந்து முக்கிய கோப்புகள் மறைக்கப்பட்டு அழிக்கப்பட்டதை - புதுடில்லியிருந்து வெளிவரும் 'அவுட்லுக்' வார ஏடு (24.11.1997) ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டியிருக்கிறது. இதற்கு அரசாங்கத் தரப்பிலோ, உளவுத்துறை தரப்பிலோ இதுவரை எந்த மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். அந்த அதிர்ச்சியூட்டும் தகவல்கள் அடுத்த அத்தியாயத்தில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## சிவராசன் - வாழப்பாடி புகைப்படம் மறைப்பு

ஜஸ்டிஸ் வர்மா கமிஷன் விசாரணையின் போது கீழ்க்கண்ட உண்மைகள் வெளியாயின [மார்ச்/ஏப்ரல் 92]

ராஜீவ் காந்தியின் கொலைக்குத் திட்டமிட்ட சிவராசன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு இருந்தார். அவருடன் புகைப்படமும் எடுத்திருந்தார். இந்த புகைப்படத்தை சி.பி.ஐ அடியோடு மறைத்து விட்டது. புதுடெல்லியில் இருந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைமை அலுவலகத்தில் இருந்த ஒரு நபருடனும் சிவராசனுக்குத் தொடர்பு இருந்தது.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான பாக்கியநாதன் என்பவர் சிறப்பு நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் 'விசாரணையின்போது தன்னிடம் சி.பி.ஐ. சிவராசனின் டைரியைக்காட்டி பல கேள்விகளைக் கேட்டதாகவும் அந்த டைரியில் சென்னையில் உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமை அலுவலகத்தில் வாழப்பாடி இராமமூர்த்தியை சிவராசன் அடிக்கடி சந்தித்ததாகவும் கூறப்பட்டுள்ளது: ஆனால், இந்த விஷயங்கள் யாவும் அடியோடு மறைக்கப்பட்டுவிட்டன.

படிப்பகம்

www.padippakam.com



## மரகதத்திடம் முறையான விசாரணை இல்லை

ராஜீவ் கொலையுண்ட இடத்தில் இருந்த மரகதம் சந்திரசேகரின் மகன் லலித் சந்திரசேகர், 'அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்க்கப் போய் விட்டேன்' என்று சொன்னார். ஆனால் ஆஸ்பத்திரிக்கு அவர் போகவில்லை. ஒரு காங்கிரஸ்காரர்தான் மரகதம் சந்திரசேகரை ஆஸ் பத்திரியில் சேர்த்தார் என்பது பிறகு தெரிந்தது.லலித் சந்திர சேகரின் இந்தத் தவறான வாக்குமூலத்தை மேலும் விசாரிக்க வில்லை. இந்த முரண்பாடுகள் குறித்து நான்கூட கேட்டேன்.

ஆனால், யாரும் அதை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. முதலில் பார்க்கும்போது அடிபடாமல் இருந்திருக்கிறார் லலித் சந்திர சேகர். பிறகு நான்கு நாள்கழித்து காலில்பெரிய கட்டுப்போட்டுக்கொண்டு இருந்திருக்கிறார்.

இந்த நேரத்தில் 'மல்லிகை' ஆஃபீஸ் முன்பு சந்தேகத்திற்கிட மான முறையில் நின்ற ஒருவனைப் பிடித்தோம்.

அவனை விசாரித்ததில், 'அமெரிக்காவில் ஒரு அம்மா 'மல்லிகை' [அதாவது எங்கள் அலுவலகம் செயல்பட்ட மாளிகை] முகவரியைக் கேட்டார்கள். அதனால் முகவரியைக் குறிக்க வந்தேன்' என்றான்.

அமெரிக்காவிலிருந்த இந்த பெண்மணியின் கணவர் பெயர் டேனியல் பீட்டர். இவர் லலித் சந்திரசேகருடன் திருப்பெரும்புதூர் வந்து, அங்கு நடந்த விபத்தில் பலியானவர்.

பிடிபட்டவனின் வீட்டைச் சோதனை செய்தோம். அங்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில், "இந்த லலித்தால்தான் இந்த நிலைமை. இந்த கார்த்திகேயனிடம் சொல்லணும்" என்று அமெரிக்காவி லிருந்த பெண்மணி குறிப்பிட்டிருக்கிறார். இதற்காகத்தான் எங்கள் முகவரியையும் கேட்டிருக்கிறார். எங்கள் ஐ.ஜி. ஸ்ரீகுமாரும், இன்னொரு அதிகாரி ரகோத்தமன் என்பவரும் அமெரிக்காவில் இருந்தனர். உடனே இந்தக் கடிதங்களை அவர்களுக்கு அனுப்பி விசா ரித்து விடலாம் என்று பேச்சு எழுந்தது.

அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த ரகோத்தமனிடம், இது பற்றி கேட்டேன். அதற்கு அவர் "எனக்கு இந்தக் கடிதம் பற்றி ஒன்றுமே தெரியாது" என்றார்.

பிடிபட்ட கடிதங்கள் அடங்கிய கோப்பு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பிறகுதான் என்னிடம் திரும்பி வந்தது. ஆனால் அந்தக் கோப்பில், அமெரிக்காவிலிருந்த அந்தப் பெண்மணி எழுதியதாகச் சொல்லப்படும் முக்கியமான கடிதம் இல்லை. லலித் சந்திரசேகர், டேனியல் பீட்டர் மனைவி, மரகதம் சந்திரசேகர் ஆகியோர் விவகாரம் முறையாக விசாரிக்கப்படவில்லை.

*- மோகன்ராஜ், சி.பி.ஐ. இன்ஸ்பெக்டர் கூறியது.(தமிழன் எக்ஸ்பிரஸ் 3.9.97.)*

படிப்பகம்

www.padippakam.com

# 7. காணாமல் போன கோப்புகள்

பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியில் பல முக்கிய அரசாங்கக் கோப்பு கள் காணாமல் போய்விட்டன; அந்தக் கோப்புகள் விவரம்:

1. கோப்பு எண் 8-1-WR/JSS/90/Vol. III நவம்பர் 89லிருந்து - ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அதிகாரிகள் எழுதிய குறிப்புகளைக் கொண்ட கோப்பு; பிரதமர் அலுவலகத்திலிருந்து 1991ம் ஆண்டில் இது காணாமல் போய் விட்டது. பிறகு இந்தக் கோப்பை சரிப்படுத்தி ஒட்டு வெட்டு வேலைகளைச் செய்து ஜெயின் கமிஷன் முன் நரசிம்மராவ் ஆட்சி சமர்ப்பித்தது (இப்படி கோப்புகளைத் திருத்தி அமைப்பது சட்ட விரோதமான நட வடிக்கையாகும்.)

2. கோப்பு எண் 1/12014/5/911 - A.S./DIII நீதிபதி வர்மா மற்றும் நீதிபதி ஜெயின் கமிஷன்களின் விசாரணை வரம்புகள் பற்றிய இந்தக் கோப்பு, 1995 முதல் காணவில்லை.

3. சந்திராசாமி, மற்றும் ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணியசாமி ஆகி யோருடன் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் தொடர்பு கொண்டு பேசிய போது இடைமறித்துக் கேட்கப்பட்ட தகவல்களைக் கொண்ட இந்தக் கோப்பை, பிரதமர் அலுவலக மூத்த அதிகாரிகளே அழித்து விட்டனர்.

4. 1987ல் ராஜீவ் காந்தியைக் கவிழ்க்க - அன்றைய குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் - சந்திராசாமி ஆகியோர் மேற்கொண்ட நட வடிக்கைகள் பற்றி இந்திய உளவு நிறுவனம் (1.B) கண்டறிந்த உண்மைகளும், பரிந்துரைகளும் அடங்கிய இந்த கோப்பு காண வில்லை.

5. ராஜீவ் கொலைபற்றி உளவு நிறுவனங்கள் உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவானிடம் தெரிவித்த கருத்துக்கள், இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோப்பு காணப்பட வில்லை.

படிப்பகம்

www.padippakam.com



6. ராஜீவை சென்னையில் கொலை செய்யலாமா? அல்லது டில்லியில் கொலை செய்யலாமா? என்ற உள் கேள்விகளோடு, 1991 ஏப்ரல் 20ம் தேதி பரிமாறிக் கொள்ளப்பட்ட ஒரு ஒயர்லெஸ் தகவலை உளவுத்துறை இடைமறித்துப்பதிவு செய்தது. இந்த விவரங்கள் அடங்கிய கோப்பு காணவில்லை.

7. நரசிம்மராவ் அரசாங்கமே - ஜெயின் கமிஷன் விசாரணையை நிறுத்தி விடுவதற்கான முயற்சிகளில் இறங்கியது. இதுபற்றிய விவரங்களடங்கிய கோப்பும் காணவில்லை.

## முரசொலி மாறன் வெளியிட்ட உண்மை

மத்திய தொழில்துறை அமைச்சராக இருந்தவரும், தி.மு.க. முக்கிய தலைவர்களில் ஒருவருமான முரசொலி மாறன் பல திடுக்கிடும் விவரங்களை வெளியிட்டார். இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போதே அதை எதிர்த்தவர் பிரேமதாசா. இவர் இலங்கை அதிபர் ஆனதும் இந்திய அமைதிப்படையை வெளியேற்றச் சொன்னார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு இந்திய படைக்கு எதிராக புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார். பிரபாகரன் பிரேம தாசா நெருக்கம் ஏற்படுவதை கண்ட இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி என்னை அழைத்துப் பேசினார். பிரபாகரனுக்கு நாம் உதவிகள் செய்யலாம். புலிகள் பற்றி உண்மை நிலவரம் எனக்கு தெரியாமல் போய் விட்டது. எனவே தமிழக முதல்வர் கருணாநிதியை புலிகளுடன் பேசச் சொல்லுங்கள். சுதந்திர தனி ஈழ மாநிலம் அமைக்க நாம் உதவலாம் என்று கூறினார். நான் இப்போதே அவர்கள் சுதந்திர தனி மாநிலமாகத்தான் உள்ளனர். வரிவசூல் முதல் நீதிமன்றம் வரை நிர்வாகம் செய்கிறார்கள் என்றேன். உடனே ராஜீவ் காந்தி சிரித்தபடி தமிழ் ஈழத்தின் பிதாமகர் தி.மு.க.தான் என்றார்.


இக்கால கட்டத்தில்தான் நான், வை. கோபால்சாமி, கந்தப்பன் ஆகிய 3பேர் குழு யாழ்ப்பாணம் சென்று பிரபாகரனை சந்தித்துப் பேசுவது. பின் இலங்கை தமிழ்க் குழுக்கள், அரசுத் தலைவர்களைச் சந்திப்பது என முடிவானது. ஆனால் திடீரென வை. கோபால்சாமி யாழ்ப்பாணம் சென்று பிரபாகரனைச் சந்தித்தார். இதனால் இம் முயற்சி நடைபெறாமலே போய்விட்டது.

ராஜீவ் காந்தி புலிகளுக்கு உதவும் எண்ணத்தில் தான் இருந்தார். பிரபாகரனுக்கு குண்டு துளைக்காத சட்டை [புல்லட் புரூப் ஜாக்கெட்] எல்லாம் கொடுத்தார். பிரபாகரன் சார்பில் பிரதிநிதிகள் ராஜீவ் காந்தியை சந்தித்துப் பேசினர் என்று மாறன் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். [இந்தியன் எக்ஸ்பிரஸ் 18.12.1997]

படிப்பகம்

www.padippakam.com





சூத்திரதாரி - சந்திரசாமி

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கோப்புகள் அனைத்தும் மிக முக்கிய தகவல்களைக் கொண்டவைகளாக இருந்தாலும், ஜெயின் கமிஷன் முன் - நரசிம்மராவ் அரசு, இவைகளை சமர்ப்பிக்கவில்லை. அதோடு இந்தக் கோப்புகள் - சர்வதேச அரசியல் தரகராகத் திகழும் சந்திராசாமிக்கு, ராஜீவ் கொலையில் இருந்த தொடர்புகளை அம்பலப்படுத்தும் கோப்புகளாகும்.

ராஜீவ் கொலை தொடர்பாக நடந்த பல்வேறு சதி முயற்சிகள் வெளியே தெரிய வேண்டாம் என்ற நோக்கத்தோடுதான், இந்தக் கோப்பில் அடங்கியிருந்த முக்கிய சாட்சியங்கள் மறைக்கப்பட்டன என்று, உளவுத் துறை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பேசும்போது ஒப்புக் கொள்கிறார்கள்.

குறிப்பாக சர்வதேச ஆயுத வியாபாரிகளுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்கும் சந்திராசாமியைக் காப்பாற்றும் நோக்கத்தோடுதான் ராவ் அரசு இதைச் செய்தது என்று தனது செய்தியாளரிடம் அய்.பி., ரா மற்றும் சி.பி.அய்யின் உயர்துறை அதிகாரிகள் ஒப்புக்கொண்டதாக அவுட்லுக் பத்திரிகை (24.11.97) எழுதியிருக்கிறது.

◆ காணாமல் போன கோப்புகளில் என்ன இருந்தது? ராஜீவ் கொலை நடந்த அன்று சந்திராசாமியும், சுப்பிரமணியசாமியும் எங்கே போனார்கள், என்ன செய்தார்கள் என்ற விவரங்கள் இருந்தன. கொலையாளிகளுக்கு, தேவையான பணத்தை சந்திராசாமியே கொடுத்தார் என்பதற்கான ஆவணங்கள் இருந்தன.

வி.பி.சிங் ஆட்சியில் அமைச்சரவை செயலாளராக இருந்த வினோத் பாண்டே ஜெயின் கமிஷன்முன் சாட்சியமளித்தபோது, தான் எழுதியதாகத் தன்னிடம் காட்டப்பட்ட கோப்பு, திருத்தப்பட்டுள்ள ஒன்று என்றார். ராஜீவ் காந்தி பாதுகாப்பு பற்றி தாம் எழுதிய குறிப்புகள் திருத்தப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார். இந்தக் கோப்பைத் தேட முடியாத நிலையில், புதிதாக உருவாக்கப்பட்டது

**காங்கிரசின் முதலைக் கண்ணீர்!**

ராஜீவ் காந்தி உயிருக்கு ஆபத்து என்று எடுத்துக் கூறப்பட்டாலும், பல காங்கிரஸ் முக்கிய புள்ளிகள் வற்புறுத்தியதால்தான் ராஜீவ் திருப்பெரும்புதூருக்கு வந்தார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஒருவர் - ராஜீவ் அன்று இரவு ஸ்ரீபெரும்புதூரில் ஒரு பணக்கார காங்கிரஸ்காரர் வீட்டிலேயே தங்க வைக்க விரும்பினார். ஆனால் - தங்க இருந்த படுக்கை அறைக்கு நேர் கீழே வெடி மருந்துகளைச் சேகரித்து வைக்கும் கிடங்கு இருந்தது. இதை சுட்டிக் காட்டிய பிறகுதான் ராஜீவ் சென்னை திரும்புவது என முடிவாயிற்று. இத் தகவலை மூத்த புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டினார். இன்று ராஜீவ் மரணத்துக்காக முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டு உரத்த குரலில் பேசிவரும் பல காங்கிரஸ் தலைவர்கள், அன்று ராஜீவ் திருப்பெரும்புதூர் போக வேண்டும் என்பதில் பிடிவாதம் காட்டியவர்கள்தான். அதில் மார்கரெட் ஆல்வாவும் ஒருவர். – 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு – 18.11.97.

படிப்பகம்

www.padippakam.com



உண்மைதான் என்று கமிஷன் முன், அன்றைய உள்துறை துணை அமைச்சர் ப. சிதம்பரம் ஒப்புக் கொண்டார்.

ராஜீவ் கொலை செய்யப்பட இருக்கிறார் என்ற தகவல்கள் - உளவுத் துறை மூலம் முன்கூட்டியே மத்திய அரசுக்குக் கிடைத்துள்ளன என்பதற்கு பல கோப்புகள் சான்றாக உள்ளன. பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்தும், அன்றைய பிரதமர் சந்திரசேகரிடம், முன்கூட்டியே எச்சரித்திருக்கிறார்.

இவை எல்லாம் 'அவுட்லுக்' பத்திரிகை தனது புலனாய்வு மூலம் வெளிக்கொண்டு வந்திருக்கும் உண்மைகளாகும். ராஜீவ் கொலைக்கு சதித்திட்டம் தீட்டி, கொலை செய்தவர்களுக்கு பணம் கொடுத்த பெரிய புள்ளிகளை - மத்திய அரசாங்கமே காப்பாற்றியிருக்கிறது; அது தொடர்பான கோப்புகளை சட்ட விரோதமாக அழித்திருக்கிறது; இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளாத சிறப்பு நீதிமன்றம் அப்பாவித் தமிழர்கள் 26 பேருக்கு தூக்கு தண்டனை விதித்துள்ளது.

நரசிம்மராவ் ஆட்சியில் இப்படி கொடிகட்டிப் பறந்த இந்த சந்திராசாமி யார்? நரசிம்மராவின் 25 ஆண்டுகால நெருங்கிய நண்பர், பிரதமராக இருந்த சந்திரசேகருக்கும் இவரே வழிகாட்டி; சர்வதேச ஆயுத விற்பனையாளரும் உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவருமாகிய கசோகியுடன் நெருக்கமானவர், வி.பி.சிங். மகனுக்கு செயின்ட் கிட்ஸ் தீவில் உள்ள வங்கியில் ரகசியக் கணக்கு இருப்பதாக போலி ஆவணங்களைத் தயாரித்தவர்; அன்னியச் செலாவணி மோசடி உட்பட அவர்மீது பல வழக்குகள் இருக்கின்றன. ராஜீவ் பிரதமரானவுடன் இந்தியாவை விட்டு வெளியேறியவர் சந்திரசேகர் பிரதமரான அடுத்த சில நாட்களிலேயே இந்தியாவுக்கு வந்தார், வந்த ஒருவார காலத்துக்குள் - பிரதமர் சந்திரசேகருடன் மூன்று முறை விருந்தில் கலந்து கொண்டவர். ராஜீவ் கொலையில் இவரை முக்கிய சாட்சியாக ஜெயின் கமிஷன் விசாரித்தது. ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தற்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஜே. ரங்கநாத் - ஜெயின் கமிஷன் முன் அளித்த சாட்சியத்தில் சிவராசனுக்கும் - சந்திராசாமிக்கும் உள்ள தொடர்பை அம்பலப்படுத்தி இருக்கிறார். இந்த உண்மைகளை வெளியே சொல்லக் கூடாது என்று சி.பி.அய். தலைவர் கார்த்திகேயன் தன்னை மிரட்டியதாக வும் அவர் கூறி இருக்கிறார். ரெங்கநாத் - அளித்த சாட்சியத்தின் ஒரு பகுதியை கீழே தருகிறோம்.

''சிவராசனும் சுபாவும் என் வீட்டில் தங்கியிருந்தபோது, ராஜீவின் சுற்றுப்பயண விவரத்தையும், அவர் ஸ்ரீபெரும்புதூர் வர இருக்கும் தேதியையும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவரான திருமதி மார்கரெட் ஆல்வாதான் தன்னிடம் தெரிவித்ததாக, சிவராசன் என்னிடம் கூறினார். சந்திராசாமி, மார்கரெட் ஆல்வா, அஸ்வத் நாராயணா (கருநாடக

படிப்பகம்

www.padippakam.com



காங்கிரஸ் தலைவர்) ஆகியோருடன் தனக்கு நெருக்கமான தொடர்பு உண்டு என்று சிவராசன் அடிக்கடி கூறுவார். பெங்களூரிலிருந்து தப்பித்துச் செல்ல சந்திராசாமியிடமிருந்து தகவலை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதாகவும், சந்திராசாமி என்னை டெல்லிக்கு அழைத்துப் போய், அங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுவார் என்றும் அவர் என்னிடம் கூறினார்''. இது ரெங்கநாத் - ஜெயின் கமிஷன் முன் தந்த வாக்கு மூலம்.

நரசிம்மராவ் அரசு ராஜீவ் கொலை தொடர்பான தடயங்களைத் திருத்தியதோடு முக்கிய தகவல்களை மறைத்து விசாரணைக்கு முட்டுக் கட்டை போட்டதையும் சாட்சியங்கள் காட்டுகின்றன. இதுபற்றி 'இந்தியா டுடே' பின்வருமாறு எழுதியது.

''ஜெயின் கமிஷன் ராஜீவ் கொலையில் நடந்த சதித்திட்டங்கள் பற்றி ஆராய்வதற்கு நரசிம்மராவ் கடுமையாக எதிர்த்தார் என்பது கமிஷனிடம் இருக்கும் ஆவணங்களிலிருந்து தெரிகிறது. கமிஷனையே கலைத்து விடலாம் என்று 1994, பிப்ரவரியில் ராவ் யோசனை தெரிவித்ததும் தெரிய வருகிறது'' என்று குறிப்பிட்ட அந்த பத்திரிகை திருத்தப்பட்ட, அழிக்கப்

## குற்றவாளி சாட்சியாக மாறிய பின்னணி என்ன?

சிவராசன், சுபா ஆகியோர் பற்றிய தகவல் தருவோருக்கு 15 இலட்சம் ரூபாய் பரிசளிக்கப்படும் என்று சி.பி.ஐ. சிறப்பு புலன் விசாரணைக் குழு அறிவித்தது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள புட்டனஹல்லி என்னும் ஊரில் வாழ்ந்த ரங்கநாதன் என்பவரும் அவருடைய துணைவியார்மிருதுளா என்பவரும் சிவராசனையும் சுபாவையும் 12 நாட்கள் தங்கள் வீட்டில் மறைத்து வைத்திருந்து அதற்குப் பின்னர் பெங்களூருக்கு அருகில் உள்ள குனன் குண்டே என்னும் இடத்தில் வீட்டை வாடகைக்கு அமர்த்தி அங்கு அவர் களை மாற்றினார்கள். மூன்று மாத காலத்திற்கு மேல் அவர்கள் அங்கு மறைந்து இருந்தார்கள். இறுதியில் ஒரு பெண் மணி கொடுத்த தகவலின் பேரில் 1991ம் ஆண்டு ஆகஸ்டு 20ம் தேதி சிறப்பு புலன் விசாரணைக் குழு இந்த வீட்டைச் சுற்றி வளைத்தபோது சிவராசன், சுபா மற்றும் 5 புலிகள் நச்சுக் குப்பிகடித்து இறந்து கிடந்தனர்.இதைத்தொடர்ந்து ரங்கநாதன் மிருதுளா தம்பதிகள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் திடீர் என்று முக்கிய சாட்சிகள் பட்டியலில் மிருதுளாவின் பெயர் இடம் பெற்றது. இத்துடன் நிற்கவில்லை. சிறப்பு புலன்விசாரணைக் குழு அறிவித்த பரிசை பெறுவதற்கு மிருதுளா வின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டு இருக்கிறது. இதுபல சந்தேகங்களை கிளப்பியுள்ளது. கொலையாளிகளுக்கு இடம் கொடுத்து ஆதரித்ததாக குற்றம் சாட்டப்பட வேண்டியவர்களுக்கு பரிசு வழங்குவதற்கு பின்னணியில் ஏதோ முக்கியமான காரணம் இருக்கிறது.

*(கே. முத்தையா, திருநெல்வேலி. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் எழுதிய கடிதம் - 13.6.92.)*

படிப்பகம்

www.padippakam.com



பட்ட கோப்புகளையும் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறது. சந்திரா சாமி பற்றிய மேலும் பல தகவல்களையும் ஜெயின் கமிஷன் விசாரணை யிலிருந்து அந்த பத்திரிகை அம்பலப்படுத்தி இருக்கிறது'' சந்திராசாமியின் அடியாளாக இருந்தவரும் கடைந்தெடுத்த கிரிமினலுமான பப்லு ஸ்ரீவத் சவா என்பவர், ஜெயின் கமிஷன் முன்பு சென்ற ஆண்டு அளித்த சாட்சியம் பல விஷயங்களை அம்பலப்படுத்துகிறது. தில்லியில் சந்திரா சாமியின் ஆசிரமத்தில் நடந்த நிகழ்ச்சிகளை விவரித்த பப்லு, ராஜீவ் கொலையுண்ட செய்தியைக் கேட்டதும், சந்திராசாமி ''மகிழ்ச்சியில் கூத்தாடினார்'' என்றார். ராவைப் பிரதமராக்கப் போகிறேன் என்ற சந்திராசாமி, மோதிலால் நேரு சாலையில் இருந்த நரசிம்மராவுக்கு போன் செய்து அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார் என்று பப்லு சாட்சிய மளித்தார்'' என்று எழுதுகிறது. 'இந்தியா டுடே' (பிப் 21-மார்ச் 5, 1997)

சந்திரசாமிக்கு - ராஜீவ் கொலை வழக்கில் தொடர்பு உண்டு என்று மேலும் 2 சாட்சிகளும் கமிஷன் முன் மனுத்தாக்கல் செய்து இருந்தனர். இதிலே ஒருவர் - அரியானா மாநிலத்தைச் சார்ந்த பா.ஜ.க. அரசியல்வாதி யான ரமேஷ்தலால். கமிஷன் முன் சாட்சியமளித்த சந்திராசாமி பல பொய்களைக் கூறியிருக்கிறார் என்று கூறிய அவர், சந்திராசாமியுடன் மிகவும் நெருக்கமாக 10 ஆண்டுகளுக்கு மேல் தான் பழகியவன் என்றும், ராஜீவ் கொலையில் இவருக்கு முக்கிய பங்கு உண்டு என்பது தனக்கு உறுதியாகத் தெரியும் என்றும் அவர் கூறினார். சந்திராசாமி என்னை அவர் வீட்டுக்கு அழைத்து ''ராஜீவ் கொலையில் எனக்குள்ள தொடர்பை வெளியே சொல்லக் கூடாது என்று என்னை மிரட்டினார்'' என்று அவர் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்தார். ''ராஜீவ் கொலை செய்யப்படு வதற்கு முன்பே, 1991 மார்ச் மாதத்திலேயே, ராஜீவ் கொலை செய்யப் படுவார். காங்கிரஸ் இரண்டாக பிளவுபடும், தேர்தலுக்குப்பிறகும் சந்திர சேகர் அரசு தொடர்ந்து நீடிக்கும் என்று என்னிடம் கூறினார். அப்போதே சந்திராசாமியின் இந்த ரகசிய நடவடிக்கைகள் பற்றி உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் மூலம் தெரிவித்தேன்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார். சாட்சியமளித்த மற்றொருவரான ஏ.சிமன்லால் என்பவரும், ராஜீவ் காந்தி கொலையில் சந்திராசாமிக்கு பங்கு உண்டு என்று கூறினார். **(தி-இந்து - 5.12.95)**

சிறப்புப் புலனாய்வுக்குழு தலைவர் டி.ஆர். கார்த்திகேயனும், இந்த கொலை வழக்குச் சதியில் ஈடுபட்டவர்களை அம்பலப்படுத்துவதில் முட்டுக்கட்டை போட்டு வந்திருக்கிறார் என்பதற்கும் ஏராளமான சாட்சி யங்கள் சான்றுகள் இருக்கின்றன. அய்க்கிய முன்னணி ஆட்சியில் பிரதம ராக இருந்த தேவகவுடாவுக்கு, நேரு குடும்ப விசுவாசியும், காங்கிரசின் மூத்த தலைவருமான அர்ஜுன் சிங் ஒரு கடிதம் எழுதினார். அதில் சிறப்புப் புலனாய்வுக் குழு தலைவர் டி.ஆர். கார்த்திகேயன், சதிபற்றி விசாரிக்கும் விசாரணைக் கமிஷனுக்கு சதிபற்றிய உண்மைகளை தராமல்

படிப்பகம்

www.padippakam.com



தடுக்க முயற்சி செய்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளதை, 'இந்தியா டுடே' பத்திரிகை, எடுத்துக் காட்டியிருக்கிறது. அதோடு - இந்த வழக்கு விசாரணையின் டயரியையோ அல்லது தன் வசமிருந்த ஆவணங்களையோ, விசாரணைக் கமிஷனிடம் சிறப்புப் புலனாய்வுக் குழு தலைவர் கார்த்திகேயன், காட்ட மறுத்து விட்டார். இதைக் குறிப்பிட்ட நீதிபதி ஜெயின் சதி விசாரணைக்கு இந்த சிறப்பு புலனாய்வுக் குழு மிகவும் தொல்லை கொடுத்து வருகிறது''என்றார். (தி இந்து 5.12.95)

ஆக ராஜீவ் கொலையில் சதித்திட்டம் தீட்டிய முக்கியப்புள்ளிகள் பற்றிய உண்மைகளை மறைக்க, மத்திய அரசும், உளவு நிறுவனங்களும், அதிகாரிகளும் திட்டமிட்டு சட்ட விரோதமாக செயல்பட்டிருக்கிறார்கள் என்பதையே மேற்குறிப்பிட்ட தகவல்கள் உணர்த்துகிறதா? இல்லையா? நடுநிலையோடு சிந்திக்க வேண்டுகிறோம்! இந்தக் கொலை வழக்கில் மற்றொரு கவனிக்கத்தக்க முக்கியமான நபர் இருக்கிறார்; அவர்தான் சுப்ரமணியசாமி! சுப்பிரமணியசாமியின் திருவிளையாடல்கள் என்ன?

### ராஜீவின் பார்வைக்கு வராத செய்தி?

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது மே 21, 1991 அன்று. அப்போது தமிழ்நாடு காங்கிரசு தலைவராக இருந்தவர் வாழப்பாடி ராமமூர்த்தி.

மே 19ம் தேதியன்று, தமிழகச் சுற்றுப்பயணம் பற்றி ராஜீவுக்கு சில விவரங்களைத் தெரிவிப்பதற்காக ஒரு ஃபேக்ஸ் செய்தியை அனுப்பினார் வாழப்பாடி.

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் தங்கும் அளவுக்கு வசதி இல்லை என்றும் அவர் சென்னையில் தங்குவதுதான் நல்லது என்றும் அந்தச் செய்தியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி ராஜீவ் பார்வைக்குச் சென்றதா என்பது தெரியவில்லை.

ஆனால், வசதி குறைவாயிருக்கிறது என்ற வாசகத்துக்கு நேரே So What? [வசதி குறைவாயிருந்தால் என்ன?] என்று குறிப்பிட்டிருக்கிறது.

இப்படி எழுதியது யார்? இந்தக் கடிதம் ராஜீவின் பார்வைக்குப் போனதா என்பதெல்லாம் தொக்கி நிற்கும் கேள்விகள்.

– தமிழன் எக்ஸ்பிரஸ் [டிச.3.9.1997]

படிப்பகம்

www.padippakam.com

# 8. சுப்ரமணிய சாமியும் சேஷனும்

ராஜீவ் கொலை நடந்த போது - சந்திரசேகர் அமைச்ச ரவையில் சட்ட அமைச்சராக இருந்தவர் சுப்ரமணியசாமி. சுப்ரமணியசாமிக்கும் - சந்திர சாமிக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. இருவருமே - சர்வதேச ஆயுத வியாபாரியான ஆண்டன் கசோகியின் நண்பர்கள். இருவருமே சர்வதேச உளவு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டவர்கள். சுப்ரமணிய சாமியுடன் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் தொடர்பு கொண்டு பேசியதை, இந்திய உளவு நிறுவனம் இடைமறித்துக் கேட்டு, அதைக் கோப்புகளில் பதிவு செய்தது. நரசிம்மராவ் ஆட்சியில் 'மாயமாய்' மறைந்து போன கோப்புகளில் இதுவும் ஒன்று; ராஜீவ் கொலை செய்யப்படும் ஆபத்துகள் இருப்பதை, பாலஸ்தீன விடுதலை இயக்கத் த்லைவர் அராபத், பிரதமர் சந்திரசேகரிடம் முன் கூட்டியே எச்சரித்த போதும் அவரது அமைச் சரவை யில் சுப்ரமணியசாமி தான் சட்ட அமைச்சர். ஜெயின் கமிஷன் முன் சாட்சியமளித்த சுப்ரமணியசாமி, அப்போது அவரது அரசியல் எதிரியாகத் திகழ்ந்த ஜெயலலிதாவை, ராஜீவ் கொலையுடன் தொடர்புப் படுத்தி வாக்கு மூலம் அளித் தார். ராஜீவ் கொலை நிகழ்ச் சியை - அரசியல் ஆதாயத் துக்குப் பயன்படுத்திக் கொள்ள - இங்குள்ள அரசி யல் கட்சிகள் அற்பத்தன மாகப் போட்டி போட்டுக் கொண்டு நின்றன என்பது உண்மை; ராஜீவ் கொலைக்கு தி.மு.க. தான் காரணம் என்று வாழப் பாடி ராமமூர்த்தி தலைமை



ஆண்டன் கசோகி

படிப்பகம்

www.padippakam.com



யிலான காங்கிரசும் ஜெயலலிதாவும் தமிழக மக்களிடம் பிரச்சாரம் செய்தனர். பின்னர் காங்கிரசுக்கும், அ.தி.மு.கவுக்கும் மோதல் வந்தவுடன், ராஜீவ் கொலைக்கு மூப்பனார்தான் காரணம் என்று ஜெயலலிதா குற்றம் சாட்டினார்; (தினத்தந்தி 18.4.96)

கிருஷ்ணகிரியில் ராஜீவுடன் பேச இருந்த ஜெயலலிதா அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தது ஏன்? என்று பதிலுக்கு ஜெயலலிதா மீது மூப்பனார் சந்தேகத்தைக் கிளப்பினார். (19.4.96 - தினமணி) ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் கூட தி.மு.க.வினர் இல்லை என்றார் கலைஞர் கருணாநிதி இப்படி ராஜீவ் கொலை சம்பவம் - அரசியல் கட்சிகளால், அவர்களின் கட்சி நலனுக்காக பந்தாடப்பட்டுக் கொண்டிருந்தன; ஆனால் - இதற்கான திட்டத்தை வகுத்த சதிகாரர்கள் - இந்தியாவின் சகல அரசு எந்திரங்களின் துணையோடு தப்பித்துக் கொண்டு விட்டார்கள். ஆதாரபூர்வமான பல ஆவணங்கள் வெளிவந்தும் கூட, அவர்கள் மீது சட்டம் பாய மறுத்து விட்டது; இந்தப் பின்னணியில் சர்வதேச உளவு நிறுவனங்களுடனும், ஆயுத வியாபாரிகளுடனும் நெருக்கமாக இருந்து கொண்டு, தனிமனித அதிரடி அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் சுப்ரமணியசாமியின் சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகள் - ஆதாரபூர்வமாக வந்தாலும் - ஆட்சி அதிகாரத்தில் உள்ள அவரது செல்வாக்கு காரணமாக, விசாரணைக்குள்ளாக்கப்படாமல் போய் விட்டது.



சுப்ரமணியசாமி

சுப்ரமணிய சாமி ஜனதா கட்சி என்று ஒரு கட்சியை வைத்துள்ளார். இந்த ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுப் பிரிவு மாநில பொதுச் செயலாளராக இருந்தவர் இ.வேலுச்சாமி; சுப்ரமணியசாமியுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர். ராஜீவ் கொலை செய்யப்பட்ட நேரத்திலும் - சுப்ரமணியசாமியுடன் இருந்தவர். ஜெயின் கமிஷன் முன் சாட்சியமளித்த வேலுச்சாமி - பல திடுக்கிடும் தகவல்களை அம்பலப் படுத்தினார். தமிழ் நாளேடுகள் சில அந்த சாட்சியத்தை விரிவாக வெளியிட்டிருந்தன. அந்த சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்ட மையக் கருத்துக்கள் என்ன?

- 1991 - மே 24ம் தேதியோடு தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் முடிவடைய இருந்தது. அதற்கு 3 நாட்களுக்கு முன்பு மே 21ம் தேதி ராஜீவ் திருப்பெரும்புதூரில் கொலை செய்யப்பட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



## ராஜீவ் காந்தி கொலை:

### இலாபம் அடைந்தவர்கள் யார்?

சில கேள்விகளை ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்க வேண்டியது அவசியமாகிறது.

1. ராஜீவ் கொலையால் ஏற்படக்கூடிய அரசியல் பாதிப்புகள் என்ன?
2. இந்தக் கொலையால் நன்மை பெறக் கூடியவர்கள் யார்?

இந்தியாவிற்குள் எடுத்துப் பார்ப்போமானால்:-

நேரு குடும்ப சாம்ராஜ்யம் முடிவிற்கு வந்துள்ளது.

இந்திரா காங்கிரசின் அரசியல் வருங்காலம் தேசியத் தலைவர் ஒருவர் இல்லாமையால் பாதிப்படையும்.

இந்து சமய தீவிரவாதிகளின் அரசியல் பலம் பெருகும்.

ஜெயலலிதா பி.ஜே.பியுடன் இணையும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

தமிழ்நாட்டில் தி.மு.க.வின் அரசியல் செல்வாக்குக் குறையும்.

இந்தியாவின் அயல்நாடுகளை எடுத்து நோக்கினால் ஸ்ரீலங்கா ஆளும் கட்சியினர் ராஜீவின் மறைவு இந்தியத் தலையீட்டைக் குறைக்கும் எனக் கருதுவார்கள்.

விடுதலைப் புலிகளுடன் போராடுவதற்கல்ல. எமது வானவெளியில் ஊடுருவும் இனம் தெரியாத விமானங்களை விரட்டியடிப்பதற்கே சீனாவிடமிருந்து அதிவேக ஜெட் விமானங்களை கொள்வனவு செய்கின்றோம் என விமானப்படைத் தளபதி ரென்ஸ் குணவர்தனா கூறும்பொழுது எந்த நாட்டைக் குறிப்பிட்டாரென்பது மூளை இல்லாதவர்களுக்குக் கூட புரியக்கூடியது.

இந்தக் கொலையால் நன்மை பெறக்கூடியவர்கள் யார்? இந்த இரண்டாவது கேள்வியை எடுத்துக் கொள்வோமானால்.

நிச்சயமாக ஈழத்தமிழர்களாக இருக்கமுடியாது. சொல்லப் போனால், அவர்களுக்கு இது பெரும் நஷ்டத்தையே ஏற்படுத்தியுள்ளது. முக்கியமாக தமிழ் ஈழ அகதிகள் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளால் பெரும் கஷ்டத்திற்கும் கோபத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவைகளுக்கு காரணம் பத்திரிகைகளும் பத்திரிகையாளருமே.

இந்தக் கொலையால் விடுதலைப்புலிகளின் போராட்டம் பின்னடையவே செய்யும். இக்கொலையால் நன்மையடைபவர்களை

www.padippakam.com



## கொலை பற்றித் தெரிந்தவர்கள்

சிவராசனும் பொட்டு அம்மானும் வயர்லெஸில் பேசிக்கொண்ட ஆதாரம். அதைப் பற்றியும் ஒரு சர்ச்சை உண்டாகியிருக்கிறது.

'Number 910 calling to 91' என்று ஆரம்பிக்கிறது அந்த வயர்லெஸ் உரையாடல். ''சிவராசனும் பொட்டு அம்மானும் பேசிக் கொண்டதை ராணுவம் பதிவு செய்து வைத்திருந்தது. அதைத்தான் ஆதாரமாகத் தருகிறோம்!'' என்று கோர்ட்டில் சி.பி.ஐ. சொல்லியிருக்கிறது. இதில் 910 என்பது சிவராசன் என்றும் 91 என்பது பொட்டு அம்மான் என்றும் சி.பி.ஐ. சொல்கிறது. சங்கேத மொழியில் நடந்த அந்த வயர்லெஸ் உரையாடலை மணி என்பவர் உதவி யுடன் தாங்கள் de-code செய்து அர்த்தம் புரிந்து கொண்டதாக சி.பி.ஐ. சொல்லி யிருக்கிறது.

''இப்படி சிவராசனும் பொட்டு அம்மானும் பேசிக்கொள்ளும் விஷயங்கள் மற்ற இரண்டு பேருக்கு மட்டுமே புரியும். சுபா, தனு ஆகியோர்தான் அந்த இருவர். ஆக, இந்தியாவில் இருந்த குற்றவாளிகளில் ராஜீவ் கொலைச் சதி பற்றி முழுமையாக அறிந்தவர்கள் சிவராசன், தனு, சுபா ஆகிய மூவர்தான். அந்த மூவருமே இப்போது உயிருடன் இல்லை. இதனால், மணி என்பவரைக் கொண்டு 'டி-கோடு' செய்தேன்!'' என்று சி.பி.ஐ. தனது ஆவணங்களில் சொல்லியுள்ளது.

இப்படிச் சொன்னதை குற்றவாளிகள் தாப்பில் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டனர்.

''ஆக, மூன்று பேருக்கு மட்டுமே தெரிந்த சதித்திட்டம் மற்ற குற்றவாளிகளுக்கு (Knowledge of Act) முன்கூட்டி தெரிய வாய்ப்பில்லை. சி.பி.ஐ.-யே இதை ஒப்புக் கொள்கிறது. அப்படியானால் ராஜீவ் படுகொலையை மற்ற குற்றவாளிகள் திட்ட மிட்டு செய்தனர் என்று அதே சி.பி.ஐ. சொல்லியிருப்பது மட்டும் எப்படி?'' என்று குற்றவாளிகள் தாப்பில் வாதாடிய வழக்கறிஞர் என். சந்திரசேகரன் தனி கோர்ட்டில் மடக்கியதையும் ஜெயின் வட்டாரத்தில் சுட்டிக்காட்டுக்கின்றனர்.

-ஜூனியர் விகடன் (10.12.97)

எடுத்து நோக்கினால் இதைச் செயல்படுத்தி இலாபம் அடையலாம் என்னும் எண்ணம் இருந்தும் செயல்படுத்தும் ஆற்றல் இல்லாமல் சிலர் இருந் திருக்கலாம். ஆற்றல் இருந்தும் இதனால் இலாபம் ஏதுமில்லை என்று எண்ணுபவர் சிலர் இருந் திருக்கலாம். இந்த இரண்டும் இருந்து இந்த வழியைக் கடைப்பிடிக்க விரும்பாதவர் களும் இருந்திருக்கலாம். ஒவ்வொரு நபரும் தம் தமது மூளை வளர்ச்சிக்கேற்ப யார் செய்திருப்பார் கள் என தமது எண்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் குழப்பங்களுக்குள் கலங்கரைவிளக்கம் போல் திகழ்வது ராஜீவின் படுகொலையால் பெரும் இலாபத்தைப் பெறுவது ஸ்ரீலங்கா அரசாங்கமே. இந்த இலாபங்களில் தலைசிறந்து விளங்குவது அவர் களுக்குத் தொல்லையாக விளங்கிவந்த தமிழ்நாட்டின் தலையீடு முழுதாக அகற்றப்பட்டுவிட்டது. - தமிழ் நேஷன்

படிப்பகம்

www.padippakam.com



- மே 19ம் தேதி டெல்லியிலிருந்து தமிழகம் வந்த சுப்ரமணியசாமி முதலில் திருப்பெரும்புதூர் பகுதிக்குத்தான் சென்றார். திருப்பெரும்புதூர் வழியாக நாங்கள் காஞ்சிபுரம் சென்று, பகல் உணவை முடித்துக் கொண்டு வாலாஜாபாத்துக்கு சென்று பிரச்சாரம் செய்து விட்டு, மீண்டும் காஞ்சிபுரம் திரும்பி கூட்டம் பேசிவிட்டு, பிறகு திருத்தணி, பள்ளிப்பட்டுக்கு சென்று பிரச்சாரம் செய்து விட்டு வேலூர் திரும்பினோம்.

- அடுத்த நாள் 20ம் தேதி - சேலம், ஆத்தூர் சென்று விட்டு, நான் விடைபெற்று திருச்சி சென்று விட்டேன். அடுத்த நாள் 21ம் தேதி காலை - சுப்ரமணியசாமி விமானம் மூலம் டெல்லி செல்லத் திட்டமிட்டிருந்தார். 21ம் தேதி பகலில் டெல்லியில் ஒரு முக்கிய வேலை இருக்கிறது. எனவே அதை முடித்துக் கொண்டு 22ம் தேதி சென்னை வந்து திருச்சி வழியே மதுரைக்குச் செல்கிறேன். என்று என்னிடம் சுப்ரமணியசாமி பயணத் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

- 21ம் தேதி இரவுதான் ராஜீவ் கொலை செய்யப்படுகிறார். அன்று சுப்ரமணியசாமி நடந்து கொண்ட விதம் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. 21ம் தேதி காலையில் அவர் திட்டமிட்டபடி டெல்லி செல்லவில்லை. அவரின் அன்றைய அனைத்து நடவடிக்கைகளும் மர்மமாகவே இருந்தன. அன்று, அவர் யார்யாரைச் சந்தித்தார் என்ற விவரங்களும் ரகசியமாகவே இருக்கின்றன. 21ம் தேதி காலை அவர் சென்னை விமான நிலையம் அருகே உள்ள 'டிரைடென்ட்' ஓட்டலில்தான் தங்கி இருந்தார். சென்னையில் அவர் - ஏன் மர்மமாகத் தங்கினார் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது; தன் கட்சியின் நெருங்கிய தோழர்களுக்குக் கூட தெரிவிக்காமல், அவர் டெல்லி பயணத்தை ரத்து செய்தது ஏன் என்பது மர்மமாகவே இருக்கிறது.

- நான் 21ம் தேதி காலை - டெல்லிக்கு சுப்ரமணிய சாமியின் வீட்டுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர் சென்னையில் தானே இருக்கிறார் என்று அவரது மனைவி கூறினார். பிறகு கட்சிப் பிரமுகர்களிடம் தொடர்பு கொண்டு விசாரித்தேன். சுப்ரமணியசாமி எங்கிருக்கிறார் என்ற விவரம் யாருக்கும் தெரியவில்லை.

- 21ம் தேதி காலை டெல்லிக்கு விமானம் மூலம் புறப்படப் போவதாகக் கூறிய சுப்ரமணிய சாமி அன்று காலையில் டில்லி பயண டிக்கெட்டை ரத்து செய்தார். பிறகு சென்னையிலிருந்து பெங்களூர் சென்றார். அங்கிருந்து டெல்லிக்குக் கிளம்பியிருக்கிறார். சென்னையிலிருந்து பெங்களூருக்கு திருப்பெரும்புதூர் வழியாக காரில் செல்ல வேண்டிய அவசியமென்ன? இதைத் தனது கட்சியின் முக்கிய தோழர்களுக்குக் கூட தெரியாமல் மறைத்தது ஏன்?

படிப்பகம்

www.padippakam.com



- பெங்களூரில் யாரை சந்திக்க அவர் அவசரமாகப் போனார்? ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் பெங்களூரைத் தள மாகக் கொண்டு செயல்பட்டு இருக்கலாம். ராஜீவ் கொலைக்குப் பிறகு கூட அவர்கள் பெங்களூர் வழியாக வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்றிருக்கலாம். இந்த நிலையில் பெங்களூருக்கு யாரையோ அவசரமாகச் சந்திக்க சுப்ரமணியசாமி சென்றிருக்கிறார்.

- அப்போது சுப்ரமணியசாமி மத்திய அமைச்சர், அமைச்சர் பதவிக்குரிய பல்வேறு வசதிகள் அவருக்கு உண்டு. மே 21ம் தேதி அவருக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்ன? பாதுகாப்புக்காக செய்யப்பட்ட வசதிகள் என்ன? இது பற்றிய ஆவணங்களை தமிழக அரசு மற்றும் மத்திய அரசிடமிருந்து ஜெயின் கமிஷன் பெற வேண்டும்.

- 21ம் தேதி இரவு 10.25 மணிக்கு நான் சுப்ரமணியசாமி வீட்டுக்கு தொலைபேசியில் பேசினேன். அப்போது ராஜீவ் கொலைபற்றி எனக்கு எதுவும் தெரியாது. யாருக்குமே எதுவுமே தெரியாது. 23ம் தேதி அவரது திருச்சிப் பயணத்தை உறுதி செய்து கொள்ளவே நான் தொடர்பு கொண்டேன். தொலைபேசியை எடுத்த சாமி, என் குரலைக் கேட்டதும், மிக சர்வசாதாரணமாக ''ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டு விட்டார் என்ற செய்தியை சொல்லத் தானே போன் செய்தீர்கள்?'' என்றார். நான் அதிர்ந்து போனேன். வெளி உலகத்துக்குத் தெரியாத தகவல் - இவருக்கு மட்டும் எப்படி தெரிந்தது?

- சிறிது நாட்கள் கழித்து - அப்பலோ மருத்துவ மனையில் அனு மதிக்கப்பட்டிருந்த திருப்பெரும்புதூர் காங்கிரஸ் வேட்பாளர் மரகதம் சந்திரசேகரை நலம் விசாரிக்க நானும் சாமியும் போனோம் மரகதத்துக்கு துளி காயம்கூட ஏற்படவில்லை. மரகதம் அம்மாள் பாசாங்கு செய்வது போலவே எனக்கு தோன்றியது.

- மரகதம் பற்றி பேச்சு எடுத்தபோது - அறையில் சொல்கிறேன். நிறைய விஷயம் இருக்கு'' என்றார் சாமி. ''திருப்பெரும்புதூரில் - பொதுக் கூட்டத்துக்கு தேர்வு செய்த இடம் மரகதத்துக்கே தெரியாது. அவருக்கே தெரியாமல் சிலர் தேர்வு செய்து விட்டனர். அது சதிகாரர்களுக்கு சாதகமாகி விட்டது'' என்றார் சாமி. இந்த அளவுக்கு துல்லியமான தகவல்கள் சாமிக்கு எப்படி தெரிந்தன?

- பிரதமர் சந்திர சேகருக்கு தெரியும் முன்பே எனக்கு ராஜீவ் மரணச் செய்தி தெரிந்து விட்டது என்று சுப்ரமணியசாமி கூறியிருப்பதை கமிஷன் கவனத்தில் கொள்ள வேண்டும்

- என்று சுப்ரமணியசாமியுடன் மிக நெருக்கமாக இருந்த திருச்சி இ. வேலுச்சாமி தனது சாட்சியத்தில் கூறி இருக்கிறார். சுப்ரமணியசாமியின் இந்த சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகளின் அடிப்படையில் எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை

படிப்பகம்

www.padippakam.com





திரு. சேஷன்

சுப்ரமணியசாமியைப் போலவே - இந்தப் பிரச்சினையில் குறிப்பிடப் பட வேண்டிய மற்றொரு நபர் - முன்னாள் தேர்தல் ஆணையாளர் சேஷன் ஆவார். ''ராஜீவ் படுகொலை செய்யப்படுவார் என்பது தனக்கு முன் கூட்டியே தெரியும்'', என்று சேஷன் தனது சுய சரிதையில் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் ராஜீவின் சோதிடத்தின் அடிப்படையில் இதை கணித்ததாக அவர் கூறுகிறார். காஞ்சிபுரம் சங்கர மடத்துக்கும் - குரு வாயூர் கிருஷ்ணன் கோயிலுக்கும் போய் விசேட பூசை நடத்தினால், ராஜீவ் இந்த ஆபத்திலிருந்து தப்பிக்கலாம் என்று, இவர் யோசனையும் கூறி இருக்கிறார்.

உண்மையில் ராஜீவ் கொலை நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன் - சேஷன் கீழ்க்கண்ட உத்தரவை அனைத்து மாநிலங்களின் தலைமைச் செயலாளருக்கும், தேர்தல் அதிகாரிகளுக்கும் அனுப்பியிருந்தார்.

''முன்னாள் பிரதமர்கள், இன்னாள் பிரதமர், முன்னாள் முதல்வர்கள், இந்நாள் முதல்வர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எல்லா மரியாதைகளையும், பாதுகாப்பையும் தரலாம். ஆனால் அவர்கள் அரசாங்க

## ராஜீவ் உடலைப் பின்தொடர்ந்த மர்ம மனிதர்கள்

ராஜீவின் உடலை தேவகி மருத்துவமனை டாக்டர் சொக்கலிங்கம் சென்னை பொது மருத்துவமனையிலிருந்து விமான நிலையத்திற்கு தனது ஆம்புலன்சில் கொண்டு சென்றபோது அதனை நீல சீருடை அணிந்த 4 அல்லது 5 பேர் பதிவு செய்யப் படாத மாருதி ஜிப்சி வேனில் பின்தொடர்ந்ததாகவும், விமான நிலைய வி.ஐ.பி. பகுதியில் ஆம்புலன்ஸ் நின்றபோது அவர்கள் ஆம்புலன்ஸ் சைலன்சரில் மாங்கொட்டையைத் திணித்து டிரைவரை எச்சரித்ததாகவும் மாங்கொட்டையைக் கண்டுபிடித்து அகற்றிய பின்னரே ஆம்புலன்சை ஓட வைக்க முடிந்தது என்றும் ஆம்புலன்சு நகரத்திற்கு திரும்பும் போது அதே நபர்கள் தங்களையும் ஏற்றிச் செல்லுமாறு சொக்கலிங்கத்திடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதாகவும், விமான நிலையத்திற்கு ஆம்புலன்சில் வாழப்பாடி ராமமூர்த்தியும் பயணம் செய்ததாகவும் குறிப்பிட்டார். [இந்து 25-5-91]

படிப்பகம்

www.padippakam.com



தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கேற்றால் மட்டுமே பாதுகாப்பு அளிக்க வேண்டும். மேற்குறிப்பிட்டவர்கள் ஒரு மாநிலத்துக்கு தனிப்பட்ட முறையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராகவோ அல்லது அரசியல் கட்சிக்காரர்களாகவோ சென்றால், பாதுகாப்பு உட்பட அரசு செய்ய வேண்டிய வசதிகளைச் செய்து தரக்கூடாது'' - இதுதான் சேஷன் பிறப்பித்த உத்தரவு ஆகும்.(இந்தியன் எக்ஸ்பிரஸ் 15.6.97) ராஜீவ் உயிருக்கு ஆபத்து என்பதை முன் கூட்டியே தெரிந்திருந்த சேஷன் கொலை நடப்பதற்கு ஒரு வாரத்துக்குமுன் இப்படி ஒரு உத்தரவைப் பிறப்பித்தார் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். சேஷனின் இந்த விபரீதமான உத்தரவைக் கண்டு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்து விட்டதாக 'இந்தியா டுடே' பத்திரிகை எழுதியது.

ராஜீவ் கொலை சம்பவம் நடந்தவுடன் 'இது இஸ்ரேல் உளவு நிறுவனத்தின் சதி' என்று சுப்ரமணியசாமியிடம் கூறினாராம் சேஷன். உடனே சுப்ரமணியசாமி ஆத்திரத்தின் உச்சிக்குப் போய் நின்று அதை மறுத்தாராம். இதை சேஷனே தனது சுயசரிதையில் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

சேஷன் இஸ்ரேல் உளவு நிறுவன சதி என்று அடித்துச் சொல்லவும், அதை ஆத்திரத்துடன் சுப்ரமணியசாமி மறுத்து, இஸ்ரேல் உளவு நிறுவனத்தின் பெயர் இதில் அடிபடக்கூடாது என்று துடிப்பதும் ஏன்? இவைகள் எல்லாம் அவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கக் கூடிய மேல்மட்ட விவகாரங்கள்.போலும்!...

## உண்மைக் குற்றவாளிகளைத் தப்ப வைக்க முயற்சி

தேர்தல் வந்ததும், நரசிம்மராவ் பிரதமராவதற்கு, தனக்கு வேண்டிய அரசியல் வாதிகள் வியாபார நண்பர்கள் மூலம் சந்திராசாமி செயல்பட்டார் என்று இல்லஸ்டிரேட்டட் வீக்லி ஆப் இந்தியா 21.6.91 இதழில் குறிப்பிட்டிருந்தது.

ராஜீவ் கொலைக்கு மூளையாயிருந்த சந்திராசாமியே இந்தியப் பிரதமரை உருவாக்கும் நிலை இருந்தால், எப்படி உண்மைக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியும்?

பிளிட்ஸ் ஏடு தனது 15-6-91 இதழில் தமிழ்நாடு காங்கிரசின் மேல் மட்டங்களில் ராஜீவ் கொலையைத் திட்டமிட சர்வதேச நிறுவனம் ஊடுருவியது என்பதில் சந்தேகமில்லை என்று எழுதுகிறது. பிளிட்ஸ் கருத்துக்கு வாழப் பாடியார் வாய்திறக்கவே இல்லையே ஏன்?

ராஜீவ் கொலையைப் புலனாய்வு செய்யும் அமைப்புகள் விடுதலைப் புலிகளின் பங்கோடு மட்டும் நிறுத்திவிடாமல் இந்தியாவுக்கு எதிரான பல உலக நிறுவனங்களும் இச்சதியில் பங்கு பெற்றிருப்பதை விசாரித்து அம்பலப் படுத்த வேண்டும். [பிளிட்ஸ் 15-6-91]

முன்னாள் காவல்துறை டி.ஜி.பிகளான லெட்சுமி நாராயணனும், மோகன் தாசும் பிளிட்ஸ் கருத்தையே வலியுறுத்தி உண்மைக் குற்றவாளிகளைத் தப்ப வைக்க முயற்சிகள் நடப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# 9. திருப்பெரும்புதூர் குழப்பங்கள்

காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள திருப்பெரும்புதூரில் காங்கிரஸ் வேட்பாளர் மரகதம்சந்திரசேகரை ஆதரித்து நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தான் ராஜீவ் கொல்லப்பட்டார்: இந்தத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை பாதுகாப்பற்ற ஒரு பகுதியில் நடந்த ஏற்பாடு செய்தது யார்? ராஜீவ் சுற்றுப் பயண நிகழ்ச்சியில் இந்த ஊர் இடம் பெறாத போது கடைசி நேரத்தில் சுற்றுப்பயண நிகழ்ச்சியில் சேர்க்கப்பட்டது எப்படி? இதற்குப் பின்னணியாக இருந்தது யார்?

மனித வெடி குண்டுக்கு ராஜீவ் பலியானபோது அவருக்கு அருகில் தமிழக காங்கிரஸ் தலைவர் ஒருவர் கூட இல்லாமல் போனது ஏன்? இந்த விபத்தில் காங்கிரசு தலைவர் ஒருவர் கூட பலியாகாமல், தங்களைக் காப்பாற்றிக் கொண்டது எப்படி? இப்படி ஒரு சம்பவம் நடக்கப்போவது, காங்கிரசாருக்கு முன்கூட்டியே தெரியுமா? இப்படி ஏராளமான கேள்விகள் எழுந்தாலும், இந்தக் கேள்வி களுக்கு விசாரணைக் கமிஷன்களோ, புலனாய்வு நிறுவனங்களோ இதுவரை பதிலளிக்கவில்லை. ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த இந்த சதியில் சம்பந்தப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்காகவே, இந்தக் கேள்விகள் மூடி மறைக்கப்படுகின்றனவோ, என்ற சந்தேகம் நாளும் வலிமை பெற்றே வருகிறது:

சென்னைக்கு ராஜீவ் வரப் போகிறாரா? இல்லையா என்பது - அவர் திருப்பெரும்புதூர் வருவதற்கு 3 நாட்களுக்கு முன்புகூட - அதாவது மே 18ம் தேதி வரை முடிவு செய்யப்படாமலே இருந்தது. இறுதியாக மரகதம் சந்திர சேகரின் கடும் பிடிவாதத்துக்குப் பின் சென்னை வருவதற்கு ராஜீவ்


ராஜீவ்காந்தி, மரகதம் சந்திரசேகர்

படிப்பகம்

www.padippakam.com



ஒப்புக் கொண்டார் (நக்கீரன் 1.6.91) அதன் பிறகு ஏப் 1ம் தேதி சென்னை விமான நிலையத்தில் -காங்கிரசார் சிலர் ராஜீவைச் சந்தித்து, அவரது உயிருக்கு ஆபத்து இருப்பதாகத் தாங்கள் உணர்வதாகக் கூறினார்கள். மே 21ம் தேதி அன்று மாலை கூட, காங்கிரசார் சிலர் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயணனை சந்தித்து திருப்பெரும்புதூர் கூட்டத்திற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். சென்னை நகரத்தோடு ராஜீவ் , பிரச்சாரத்தை முடித்துக் கொள்ளட்டும் என்று ஆளுநர் யோசனை கூறி இருக்கிறார். **(இந்து *28.5.91*)**

கடைசி நேரத்தில் இந்தப் பொதுக் கூட்டத்தை மரகதம் சந்திர சேகரின் தூண்டுதலினால்: தாம் உறுதி செய்ததாக, கர்நாடகத்தைச் சார்ந்த மார்கரெட் ஆல்வா தெரிவித்தார் (Current வார பத்திரிக்கை 8.6.91) இந்த மார்கரெட் ஆல்வாவுக்கும் சிவராசனுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு என்றும், மார்கரெட் ஆல்வாவின் நண்பர் வீட்டில் தான் - பெங்களூரில் சிவராசன், சுபா ஆகியோர் தங்கி இருந்ததாகவும், ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பெங்களூரைச் சார்ந்த ரங்கநாத் ஜெயின் கமிஷனுக்கு அனுப்பிய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருப்பதை, மீண்டும் நினைவில் கொள்ள வேண்டியது அவசியமாகும். ராஜீவ் திருப்பெரும்புதூருக்கு வர இருப்பதை - மார்கரெட் ஆல்வா மூலம் தான். சிவராசன் தெரிந்து கொண்டிருக்கிறார். இதை சிவராசனே, ரெங்கநாத் திடம் கூறி இருக்கிறார். ஆனாலும் மார்கரெட் ஆல்வா மீது, உளவு நிறுவனம் எந்த விசாரணையையும் மேற்கொள்ளவில்லை.

பொதுக் கூட்ட மேடையில் ராஜீவ் காந்திக்கு மாலை போட யாருக்கும் அனுமதி கிடையாது என்று ராஜீவ் வருவதற்கு ஒருமணி நேரத்துக்கு முன்பாகவே சப்-இன்ஸ்பெக்டர் பி. அரியமூர்த்தி என்பவர் அறிவித்தார். எனவே வரும் வழியிலே மாலைபோடுவதற்கும் அதனால் குழுப்பங்கள் ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கப்பட்டு விட்டது. (இந்து-28.5.91)

பொதுவாகவே ராஜீவ் காந்தி கூட்டத்தின் போது, தனியார் ஆம்புலன்ஸ் வேன் ஒன்று தயார் நிலையில் இருக்கும். ஆனால், இந்த முறை தமிழ்நாடு காங்கிரஸ் முன்பணம் செலுத்தாததால், ஆம்புலன்சும் வரவில்லை (ஜூனியர் போஸ்ட், 31.5.91) நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாலை அணிவிப்பது தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட குழப்பங்கள் கொலை முயற்சியை எளிதாக்கியது. ராஜீவ் கொல்லப்பட்டவுடன், தலைமறைவான வாழப்பாடி ராமமூர்த்தி, 30 நிமிடங்கள் கழித்துதான், சடலத்தைப் பார்க்க வந்தார். (இல்லஸ்டிரேட்டட் வீக்லி-15.6.91)

ராஜீவ் கொலை செய்யப்பட்டவுடன் முதல் 30 நிமிடங்கள் கடும் குழப்பம் நிலவியது. கொலையாளிகள் தப்பிச் செல்ல போதுமான கால அவகாசம் இருந்தும், அவர்கள் தப்பிக்கவில்லை. ராஜீவ் காரை ஓட்டி வந்த டிரைவர் கூட அங்கிருந்து ஓடிவிட்டார். கடைசி நிமிடங்களில், கொலையாளிக்கு அருகில் லதாகண்ணனும், காங்கிரஸ் பேச்சாளர் கோகிலாவும் (லதா கண்ணன் மகள்) இருந்தது, வீடியோ படத்தின் மூலம் தெரிய வந்தது. அவர்கள் இருவரும் மரகதம் சந்திரசேகர் குடும்பத்துக்கு அறிமுக

படிப்பகம்

www.padippakam.com



மானவர்கள். மரகதம் சந்திர சேகரின் மகன் ஒரு சிங்களப்பெண்ணைத் திருமணம் செய்துள்ளார். ஆனால் மரகதம் சந்திரசேகர் குடும்பத்தினரோ, கோகிலாவையும், லதா கண்ணனையும் தங்களுக்குத் தெரியாது என்கிறார்கள். மரகதம் சந்திரசேகர் வீட்டில் கொலையாளி தென்பட்டதாகவும், அவர் உடுத்தி இருந்த சல்வார் கமிஸ் போன்ற உடையை, சென்னை எழும்பூரில் உள்ள ஒரு கடையில், கொலை நடந்ததற்கு முந்தைய நாளில், லதா தனது இலங்கை நண்பருக்கு பரிசளிப்பதாகச் சொல்லி வாங்கியதாகத் தெரிகிறது. (இந்தியா டுடே-15.6.91)ஆனால், இது தொடர்பான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை:

இவைகளுக்குப் பின்னால் மற்றொரு சம்பவமும் நடந்தது, புலன் விசாரணையின் மீது, பலத்த சந்தேகத்தை இந்த சம்பவம் ஏற்படுத்தி விட்டது. இந்த வழக்கு தொடர்பாக கோடியக்கரை சண்முகம் என்பவரை ஜூலை மாத இறுதியில் சிறப்பு புலனாய்வுக்குழு கைது செய்தது. இந்தக் கைது ஒரு பொக்கிஷம் போன்ற பரிசு (Prize-Catch) என்று கூறிய புலனாய்வுத்துறை, இவர் மூலம் பல முக்கிய தடயங்கள் கிடைக்கப் போகின்றன என்று அறிவித்தது. ராஜீவ் கொலையாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இவர் கொடுத்த தகவல் அடிப்படையில் நிறைய அளவு வெடி மருந்துகளும் தகவல் தொடர்புக் கருவிகளும் கடற்கரை அருகில் தோண்டி எடுக்கப்பட்டன. 18.7.91 அன்று கைதான சண்முகம் வேதாரண்யம், காவல் நிலையம் அருகே உள்ள பொதுத் துறை ஆய்வு மாளிகையில், சிறப்புப் புலனாய்வுக்குழு கண்காணிப்பில் இருந்தார். 20.7.91 அன்று இந்த ஆய்வு மாளிகைக்குப் பின்னால் உள்ள ஒரு மரத்தில் பிணமாகத் தொங்கினார். சென்னைக்குக் கொண்டு செல்லப்பட இருந்தார் சண்முகம். ஆனால் சிறப்பு புலனாய்வுக் குழு, தனது பயணத் திட்டத்தை மாற்றி வேதாரண்யத்தில் கூடுதலாக ஒரு இரவு தங்க வைத்தது, அந்த இரவில் தான் இந்த மரணம் நடந்தது. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் கண்காணிப்பில் இருந்தவர் எப்படி தப்பிச் செல்ல முடிந்தது? (இந்து 22.7.91)

''அய்யோ! என் புருஷனை சி.பி.அய்காரங்க கொன்னுட்டாங்களே! என்று சண்முகத்தின் மனைவி கதறினார். (நக்கீரன்-3.8.91) ஆனால் இது தற்கொலை என்றது சிறப்புப் புலனாய்வுக்குழு.



கோடியக்கரை சண்முகம்

படிப்பகம்

www.padippakam.com



திருப்பெரும்புதூரில்-ஒருபக்கம் இப்படிக் குழப்பங்கள் நடந்த நிலையில்-அரசியல் சக்திகள் வேகவேகமாக காய்களை நகர்த்தத் துவங்கின.

ராஜீவ் இறந்த 10 மணி நேரத்துக்குள்-நாட்டில் இரண்டாம் கட்ட, மூன்றாம் கட்ட வாக்குப்பதிவுகள் நடக்கும் தேதிகளை தேர்தல் ஆணையாளர் சேஷன் தள்ளி வைத்தார். இது சேஷன் தானாக எடுத்த முடிவு என்று மூத்த அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் சேஷன் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் பிரதமர் சந்திரசேகர், குடியரசுத் தலைவர், ஆர். வெங்கட்ராமன், சட்ட அமைச்சர் சுப்ரமணியசாமி ஆகியோருடன் கலந்து எடுத்த முடிவு என்றார் (சண்டே-23.6.91). ஆனால் 4 வார காலத்துக்குத் தேர்தலைத் தள்ளி வைத்ததுதான், இது வரை நடக்காத அதிசயமாகும். முதல் சுற்றுத் தேர்தலில் பல வாக்குச்சாவடிகளில் வாக்குப் பதிவை டி.என். சேஷன் ரத்து செய்து விட்டார். இதன் நோக்கம்- எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை பலம் இல்லாத ஒரு தொங்கு பாராளுமன்றத்தை உருவாக்குவதுதான் என்று 'பிளிட்ஸ் பத்திரிக்கை (15.6.91) எழுதியது.

அப்போது குடியரசுத் தலைவராக இருந்த ஆர். வெங்கட்ராமன் தேசிய அரசு ஒன்றை அமைக்கும் கருத்தைக் கொண்டிருந்தார். இந்த யோசனைக்கு வரவேற்புக் கிடைத்தால் மீண்டும் தேர்தலைத் தள்ளி வைத்து அறிவிக்க போதுமான அவகாசம் இருக்கட்டும் என்ற நோக்கத்துடனேயே, சேஷன் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று, மூத்த தலைவர் மதுலிமாயி, குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதினார். (பிளிட்ஸ் 15.6.91)

ஆக, ராஜீவ் கொலைக்குப் பின்னால், அரசியல் மாற்றங்களுக்காகக் காத்திருந்த அரசியல் சக்திகளும், சுறு சுறுப்பாக செயல்பட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. ராஜீவ் கொலைக்குப் பின்னால் சர்வதேச வலை ஒன்று இறுக்கமாகப் பின்னப்பட்டிருந்தது என்ற உண்மையை வலியுறுத்துவதாகவே இந்நிகழ்வுகள் இருக்கின்றன.

### சண்முகம் சாவு-படுகொலையே

தமிழக அரசின் முன்னாள் காவல்துறை இயக்குநர் கே. மோகனதாஸ், விஜய் தொலைக்காட்சிப் பேட்டியொன்றில், ''சிறப்புப் புலனாய்வுக் குழுவின் பாதுகாப்பில் இருந்த மிராசுதாரர் சண்முகத்தின் சாவு ஒரு தற்கொலையல்ல. திட்டமிட்ட கொலை. விசாரணைக்கு அழைத்துச் செல்லும் போது வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டிருந்த சண்முகம் தூக்கில் தொங்கியபோது கைலி கட்டிக் கொண்டிருந்தது எப்படி? விடுதலைப் புலிகள் மாட்டிக்கொள்ளும்போது சயனைட் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்வதுதானே வழக்கம். சிவராசன் மட்டும் துப்பாக்கிக் குண்டால் மரணமடைந்தது எப்படி?'' இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் டெல்லியிலிருந்து வெளிவரும் அவுட்லுக் இதழ் [97 நவம்பர் 24] கீழ்க்கண்ட ஐயத்தை எழுப்புகிறது. ''சிவராசனோடு செத்துப்போன சுபாவின் உடல் பாதுகாக்கப்பட்டு சாட்சியமாக்கப்பட்ட அதே நேரத்தில் சிவராசனின் உடல் உடனே கொளுத்தப்பட்டது ஏன்? ராஜீவின் கொலையோடு தொடர்புடையவர்களாகச் சொல்லப்படும் பலரின் மர்மமான மரணங்கள் எதைக்காட்டுகின்றன?''.

படிப்பகம்

www.padippakam.com

# 10. விடை தெரியாத கேள்விகள்

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை 'தடா' சட்டத்தின் கீழ் நடந்து முடிந்துள்ளது. பிரிட்டிஷ்காரர்கள் கொண்டு வந்த 'ரவுலட்' சட்டத்தை விடக் கொடுமையானது 'தடாசட்டம்' இந்திய கிரிமினல் சட்டத்துக்கு மாறாக, சித்திரவதை செய்து, குற்றவாளிகளிடமிருந்து பெறப்படும் வாக்கு மூலங்களை நீதிமன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ள இந்த சட்டம் வகை செய்கிறது. இந்தியக் கிரிமினல் சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டை, எதிர் தரப்பினர் தான் நிருபிக்க வேண்டும். ஆனால் இந்த சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களே தங்களை நிரபராதிகள் என்று நிருபிக்க வேண்டும். வழக்கு விசாரணையும் மக்களுக்குத் தெரியாமல்-ரகசியமாக நடத்தப்படும்: விசாரணை பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவராது: நாட்டின் செல்வாக்கு மிக்க-பிரதமராக இருந்த ஒரு தலைவர் படுகொலை செய்யப்பட்ட சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழக்கை-இப்படி ஒரு காட்டுமிராண்டிச் சட்டத்தின் கீழ் விசாரித்ததே-நாட்டுக்கு மிகப் பெரும் தலைகுனிவாகும்.

சர்வதேசத்தரம் கொண்ட சட்டங்களின் கீழ் இந்த விசாரணை நடக்க வில்லை என்று சர்வதேச மனித உரிமைக் குழுவே (Amnesty International) சுட்டிக் காட்டியிருக்கிறது. ஆனாலும்இந்த வழக்கை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு, வழக்கறிஞர்கள் துரைசாமி, ராமதாஸ், சந்திரசேகரன், ஜெய சீலன், தென்னவன் ஆகியோர் மிகக் கடுமையாக உழைத்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக வாதிட்டனர்: வழக்கறிஞர்கள் எழுப்பிய பல அடிப்படையான கேள்விகளுக்கு விடை கிடைக்கவில்லை: நீதிபதியோ, குற்றம் சாட்டப்பட்ட 26 தமிழர்களுக்கும் மரண தண்டனை விதித் துள்ளார். இதில் 5 பேர் பெண்கள்: 5 பெண்களுக்கு ஒரே நேரத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பது வரலாற்றிலேயே இதுவே முதன் முறையாகும். இந்த வழக்கு விசாரணையின் போது வழக்கறிஞர்கள் எடுத்து வைத்த சில முக்கிய கேள்விகளை 'தமிழன் எக்ஸ்பிரஸ்' வார ஏடு (நவம் , 19-25-97) தொகுத்து வெளியிட்டிருக்கிறது. அந்தக் கேள்விகளை அப்படியே வெளியிடுகிறோம்.

1. 1991-ம் வருடம் மே மாதம் 21-ம் தேதி டெல்லியிருந்து தேர்தல் பிரசாரத்திற்குக் கிளம்பினார் ராஜீவ் காந்தி. அவர் ஒரிசா,

படிப்பகம்

www.padippakam.com



ஆந்திரா வழியாக சென்னை வந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிகழ்ச்சி நிரலில் இல்லாத திருப்பெரும்புதூரில் நள்ளிரவுக் கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் எப்படி ஒப்புக் கொண்டார்?

2. திருப்பெரும்புதூருக்கு ராஜீவை எப்படியாவது வரவழைத்துவிட வேண்டும் என்று எங்காவது திட்டம் தீட்டப்பட்டதா?

3. புவனேசுவர், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ராஜீவ் பிரச் சாரத்திற்கு சென்றபோது அவருடன் இருந்தவர் பாதுகாப்பு அதிகாரி ஒ.பி. சாகர். ஆனால் அவர் சென்னைக்கு ராஜீவுடன் வரவில்லை ஏன்?

4. பல்கேரிய நாட்டைச் சேர்ந்த தொலைக்காட்சிப் பத்திரிகையாளர் கள் ராஜீவ்காந்தியின் சுற்றுப்பயணத்தில் உடன் வந்தார்கள். அவர்களுடைய வேலை, ராஜீவ் பிரச்சாரத்தை வீடியோவில் பதிவு செய்வது. ஒரிஸாவிலும், ஆந்திராவிலும் ராஜீவ் செய்த முதல்கட்ட சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்ட அவர்கள் ராஜீவ் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்களுக்குச் செல்லவில்லை. அவர்கள் பயணம் செய்த விசேஷ விமானத்தின் பைலட்டுடன் விசாகப் பட்டினத்தில் ஒரு ஆடம்பர ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். அப்படியானால் அவர்கள் உடன் வந்த காரணம் என்ன?

5. ராஜீவ் கிளம்புகிற விமானத்தில் கோளாறு ஏற்பட்டது. உடனே விமான நிலையத்திலிருந்து சர்க்யூட் ஹவுஸுக்குத் திரும்பினார் ராஜீவ். கோளாறு சரி செய்யப்பட்டுவிட்டது என்கிற தகவல் அப் போதைய ஆந்திர முதல்வர் விஜயபாஸ்கர ரெட்டி மூலமாகக் கிடைத்தவுடன் விமான நிலையம் திரும்பினார் ராஜீவ். இந்தக் குழப்பத்தில் இந்த இரண்டு பல்கேரிய நாட்டு பத்திரிகையாளர் கள், பாதுகாப்பு அதிகாரி சாகரை தங்கள் காரில் ஏற்றிக் கொண்டு தாமதமாக விமான நிலையத்துக்கு வந்தார்கள். இதனால் ராஜீ வுடன் விமானத்தில் பயணம் செய்ய சாகரால் முடியவில்லை. அனுபவம் மிக்க அந்தப் பாதுகாப்பு அதிகாரியை ராஜீவுடன் போக விடாமல் செய்தது ஏன்?

6. சென்னையில் ராஜீவின் பாதுகாப்பு அதிகாரியாக செல்ல வேண்டிய பி.சி.குப்தா, சென்னை விமான நிலையத்தில் ராஜீவுக்காக காத்தி ருந்தார். அதே விமானத்தில் வந்திருக்க வேண்டிய சாகரிடமிருந்து கைத்துப்பாக்கியை அவர் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் சாகர் வராததால் கைத்துப்பாக்கி இல்லாமலேயே குப்தா. ராஜீ வுடன் செல்ல நேர்ந்தது. இதற்கு ஏதாவது உள் நோக்கம் உண்டா?

7. ராஜீவ் மீனம்பாக்கத்திலிருந்து கிளம்பியவுடன் ராமாவரம் தோட்டம் அருகே பத்திரிகையாளர்கள் என்ற பெயரில் இரண்டு பெண்கள் அவர் காரில் ஏறினார்கள். அவர்களுடைய அடை யாளங்கள் சோதனைக்குள்ளானதா? இன்றுவரை அவர்களை ஏன் சிறப்பு புலனாய்வுத்துறை விசாரிக்கவில்லை?

படிப்பகம்

www.padippakam.com



8. யார் அந்த பல்கேரியர்கள்? அவர்கள் எங்கு சென்றார்கள்?

9. யார் அந்த இரண்டு அயல்நாட்டு பெண் பத்திரிகையாளர்கள்? அவர்கள் எங்கு சென்றார்கள்?

10. அந்த இரண்டு பத்திரிகையாளர்களும் ராஜீவை பேட்டி கண்டார்கள். ஆனால் அதே காரில் உடனிருந்த பாண்டியனும், மரகதம் சந்திரசேகரும் அவர்கள் என்ன பேசினார்கள் என்பது தெரியாது என்றார்கள். இவர்கள் எதை மறைக்க முயலுகிறார்கள்? ஏன்?

11. தான் கொலை செய்யப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு, பாகிஸ்தான் ஜனாதிபதி ஜியா-உல்-ஹக்கை கொன்றது சி.ஐ.ஏ. தான் என்றார் ராஜீவ். அவர் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? அவரை சொல்லத் தூண்டிய காரணம் என்ன? தனக் கெதிராகவும் இப்படி ஒரு திட்டம் இருக்கலாம் என்பது அவருக்கு முன்கூட்டியே தெரியுமா?

12. 1991 ஜுலை மாதம் அன்றைய மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான், 'எல்.டி.டி.ஈ.யைத் தவிர வேறு சில சர்வதேச நிறுவனங்களும், பலம் வாய்ந்த வெளிநாட்டுச் சக்திகளும் ராஜீவ் கொலையின் பின்னணியில் இருக்கிறார்கள்' என்றார்.

13. உள்துறை அமைச்சர் அப்படி சொல்லக் காரணம் என்ன என்பதை சிறப்புப் புலனாய்வுத் துறை ஏன் விசாரிக்கவில்லை.?

14. வளைகுடா போரின்போது அமெரிக்க விமானங்களுக்கு இந்தியா எரிபொருள் கொடுத்து உதவியது. இந்த உதவியைச் செய்த சந்திரசேகர் அரசைக் கடுமையாகக் கண்டித்தார் ராஜீவ் காந்தி அமெரிக்காவிற்கு இதனால் ராஜீவ் மீது ஏற்பட்ட கோபத்தையும், இந்தக் கொலையின் பின்னணியில் சி.ஐ.ஏ.வுக்கு பங்கு உண்டா என்பதையும் ஏன் புலனாய்வுத் துறை விசாரிக்கவில்லை?

15. பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அராபத் 'ராஜீவ் உயிருக்கு ஆபத்து இருக்கிறது' என்று அன்றைய பிரதமர் சந்திரசேகரிடம் தெரிவித்தார். 'அவருக்கு இந்தத் தகவல் எங்கிருந்து கிடைத்தது? யார் மூலமாக ராஜீவுக்கு மிரட்டல்?'' என்பதை ஏன் புலனாய்வுத் துறை விசாரிக்கவில்லை?

16. மேற்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளில் கொலைக்கான திட்டம் தீட்டப்பட்டிருந்தால் மட்டுமே அராபத்திற்கு இந்தப் பின்னணி தெரிய வாய்ப்புண்டு.

17. மரகதம் சந்திரசேகர் ராஜீவ் காந்தியுடன் கூட்டம் நடந்த இடத்திற்கு வந்தார். அவருடைய மகள் லதா பிரியகுமார் தன் கணவருடனும் வழக்கறிஞர் மகேந்திரனுடனும் அரக்கோணத்திலிருந்து வந்தார். அவரது மகன் லலித் சந்திரசேகர் மனைவி வினோதினியுடன் எங்கிருந்து வந்தார் என்பதை விளக்கவேயில்லை. வினோதினி

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையைச் சேர்ந்த ஜூனியஸ் ஜெயவர்தனாவின் மகள் என்பது தெரிந்தும் அவரை ஏன் விசாரிக்கவில்லை? சம்பவ இடத்தில் அந்தக் குடும்பத்தினர் இருந்தும் அவர்களை ஏன் விசாரிக்கவில்லை?

18. சிவராசனின் தாயாரும், வினோதினியின் தந்தையும் சிங்களர்கள்தான். சம்பவ இடத்தில் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவின் தூதுவர்களாக இருக்க வாய்ப்புண்டு. இந்திய அமைதிப்படை விவகாரத்தில் பிரேமதாஸாவுக்கு ராஜீவ் மீது கோபம் உண்டு. அந்தக் கோணத்தில் ஏன் விசாரணை செய்யப்படவில்லை.

19. விடுதலைப் புலிகள், இலங்கை அரசு இரண்டுக்கும் ஒரு விஷயத்தில் ஒற்றுமை உண்டு. இந்திய அமைதிப்படை இலங்கையில் நுழையக் காரணமாக இருந்த ராஜீவ் மீது இருதரப்பினருக்கும் கோபமுண்டு. இந்த விஷயத்தில் எதிர்தரப்பு வழக்கறிஞர் சந்திரசேகர் விசேஷப் புலனாய்வுத் துறைக்கு ஒரு சவால் விட்டார். 'வினோதினியின் பூர்வீகம் என்ன? அவரும், அவர் குடும்பத்தினரும் அப்பாவிகள் என்பதை நிரூபித்தால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவருமே தாமாகவே தங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்வார்கள் என்றார். இறுதிவரை அவர் சவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்படவும் இல்லை.

20. காமினி திசநாயாக, அதுலத் முதலி, விக்கிரம சிங்கே இவர்கள் எல்லாம் இலங்கையின் முக்கிய அரசியல்வாதிகள் இவர்கள் கொலைகளின் பின்னணியில் பிரேமதாசா இருந்தார் என்பது பின்னர் நிரூபிக்கப்பட்டது. எனவே ராஜீவ் கொலையில் இவர் பங்கு இருக்கலாம் என்ற கோணத்தில் ஏன் புலன் விசாரணை செய்யப்படவில்லை.

21. சிவராசன், தனு, சுபா ஆகியோர் ஒரு அந்திய சக்தியின் தூண்டுதலால் ஏன் இந்தக் கொலையைச் செய்திருக்கக் கூடாது? அந்த மூவரும் ஈழத் தமிழர்கள் என்பதால் மட்டுமே அவர்களைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி விசாரணையை முடித்து விட்டார்களா?

22. புலிகளையும், அதன் தலைவர் பிரபாகரனையும் சம்பந்தப்படுத்தும் ஆதாரம் ஏதுவும் புலனாய்வுத் துறையிடம் உள்ளதா?

23. பிரபாகரனும், சிவராசனும் ரேடியோ மூலம் பேசியதை விசேஷப் புலனாய்வுத்துறை கேட்டதாகச் சொல்லப்படுவது ஏன் ஒரு கற்பனையான ஆதாரமாக இருக்கக் கூடாது?

24. 'விசேஷ' லட்சியமுள்ள அரசியல்வாதிகள், ஏன் அவரது காங்கிரஸ் தோழர்களேகூட தங்கள் வளர்ச்சிக்கு ராஜீவ் தடையாக இருக்கிறார் என்பதால் கூலிப்படையினரை ஏவிவிட்டு இந்தக் காரியத்தை செய்திருக்கக் கூடாது?

படிப்பகம்

www.padippakam.com



25. பல்வேறு நாட்டு ஆயுத வியாபாரிகள் பிரதமர் என்கிற முறையில் ராஜீவுடன் தொடர்பு வைத்திருந்தார்கள். கூலிப்படைகள் மூலமாக அவர்கள் ஏன் இந்தக் காரியத்தைச் செய்திருக்கக்கூடாது?

26. மறுபடியும் அமைதிப்படை தங்கள் நாட்டில் நுழையலாம் என்கிற எண்ணத்தில் இந்தியாவுக்கு வலுவான தலைவர் இருக்கக் கூடாது என்று இலங்கை அரசு ஏன் நினைத்திருக்கக் கூடாது?

27. மூன்றாவது உலக நாடுகளின் தலைவர்களை அப்புறப்படுத்துவதில் சி.ஐ.ஏ.வுக்கு அதிக அக்கறை உண்டு. அந்த எண்ணம் ராஜீவ் விஷயத்தில் இருந்ததா?

28. வாழப்பாடி ஏற்றுக் கொள்ளவில்லை. மூப்பனார் அக்கறை காட்டவில்லை. ஆனால் மரகதம் சந்திரசேகர் மட்டும் டெல்லி சென்று திருப்பெரும்புதூருக்கு வர வேண்டும் என்று ராஜீவை ஏன் வற்புறுத்தினார்? தன்னை அறியாமல் சதிகாரர்கள் வலையில் சிக்கி ராஜீவ் மரணப்படுக்கையில் விழக் காரணமாகி விட்டாரா?

29. யார் இந்த பொட்டு அம்மான்? இப்படி ஒரு நபர் இருக்கிறாரா? 'அம்மான் ஒரு மூத்த தலைவர் ஒரு போரில் இறந்துவிட்டார். பொட்டு மட்டுமே உள்ளார்' என்கிறது எல்.டி.டி.ஈ. வட்டாரம். உயிருடன் இல்லாத ஒரு நபரை எப்படி இரண்டாவது குற்றவாளியாக புலனாய்வுத் துறை முத்திரை குத்தியது?

30. பத்மநாபா கொலை வழக்கையும், இந்த வழக்கையும் ஒப்பிட்டால் பல உண்மைகள் வெளிவருகின்றன. தமிழ்நாடு காவல்துறையின் 'கியூ' பிராஞ்ச், பத்மநாபா வழக்கை விசாரித்தது. சிறப்பு புலனாய்வுத் துறை, ராஜீவ் கொலை வழக்கை விசாரணை செய்தது. இரண்டு விசாரணை அமைப்புகளும் சதி நடந்த இடம் யாழ்ப்பாணம் என்கின்றன. பத்மநாபா வழக்கில் குற்றவாளிகளில் ஒருவர் சிவராசன். ராஜீவ் வழக்கிலும் அவர் முக்கிய குற்றவாளி.

**அப்படியானால் ராஜீவ் கொலையில் குற்றவாளியாகக் கருதப்பட்ட பிரபாகரன் பத்மநாபா வழக்கில் ஏன் குற்றவாளியாக சேர்க்கப்படவில்லை? ஆகவே பிரபாகரன் பெயரை நுழைப்பது அரசியல் முடிவே தவிர விசாரணையினால் கிடைத்த தெளிவே அல்ல. கடும் உள்நோக்கத்துடன் வழக்கிற்கு உயிர்கொடுக்க புலனாய்வுத்துறை செய்த முயற்சி இது.**

31. ராஜீவை சந்தித்தார் கவிஞர் காசி ஆனந்தன். அவர் பிரபாகரனிடமிருந்து ராஜீவுக்கு கொண்டு வந்த தகவல் என்ன? 'ஈழ விடுதலைக்கு ராஜீவுக்கு பிரபாகரன் மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தால் ஏன் அவரை பிரபாகரன் கொலை செய்ய வேண்டும்?

32. இந்தியா மற்றும் தமிழகத்தில்தான் தனக்கு அனுதாபமும், ஆதரவும் கிடைக்கும் என்பது பிரபாகரனுக்கு தெரியும். அப்படியிருக்கும் போது இந்த மக்களின் வெறுப்பை சம்பாதிக்கிற தவறைச் செய்து,

படிப்பகம்

www.padippakam.com



நாட்டைவிட்டே துரத்தப்பட்டு, தேசவிரோதியாக முத்திரை குத்தப்பட்டு தடை செய்யப்படுகிற அளவுக்கான முட்டாள்தனத்தையா பிரபாகரன் செய்வார்?

33. லதா கண்ணனின் மகள் கோகிலா என்னும் சிறுமி, ராஜீவ் காந்தியை நிறுத்தி கவிதை படித்தார். அதுவே பக்கத்திலிருந்த தனு என்கிற மனிதகுண்டு வெடிக்கக் காரணமாக இருந்தது. ஏன் அவர் பெயர் குற்றவாளிப் பட்டியலில் இல்லை? லதா கண்ணனை பயன்படுத்தி தான் தனு உள்ளே வந்தார். இறந்து போன ஹரிபாபு குற்றவாளி என்றால் லதா கண்ணனை ஏன் சேர்க்கவில்லை? காங்கிரஸ் மற்றும் அதன் தொண்டர்களின் மீது புலனாய்வுத்துறைக்கு ஏன் இத்தனைப் பரிவு?

34. திருப்பெரும்புதூருக்கு செல்லும் முன் இரண்டு தெருமுனைக் கூட்டங்களில் பேசினார் ராஜீவ். அந்தக் கூட்டங்களில் மேடை வரை உடன் வந்தார் வாழப்பாடி ராமமூர்த்தி. திருப்பெரும்புதூரில் மட்டும் ஏன் தொலை தூரம் தள்ளிப் போனார்?

35. அப்பாவிப் பொதுமக்கள் பாதுகாப்பு அதிகாரிகள் பலர் ராஜீவுடன் உயிரிழந்தார்கள். ஆனால் காங்கிரஸ் தலைவர் ஒருவருக்கும் லேசான காயம் கூட இல்லையே அது ஏன்?

36. தனு, சுபா, சிவராசன் மூவரையும் திருப்பெரும்புதூருக்கு அழைத்து வந்தவர் மரகதம் அம்மையாரின் மகள் லதா பிரியகுமார் என்று கருதப்படுகிறது. குறிப்பாக பெண்கள் பகுதிக்கு அழைத்துவந்து லதா கண்ணனிடம் அவர்களுக்கு உதவும்படி சொன்னார். அவர் மீது ஏன் குற்றம் சுமத்தப் படவில்லை?

37. பிரபாகரன், சிவராசன் இருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட பழைய படத்தை வைத்துக்கொண்டு பிரபாகரனுக்கு இதில் தொடர்பு உண்டு என்று எப்படிச் சொல்லலாம்?

38. மார்கரெட் ஆல்வாவின் வேண்டுகோளுக்கிணங்கத்தான் சிவ ராசனுக்கு பெங்களூரில் வீட்டை வாடகைக்கு கொடுத்ததாக ரெங்க நாதன் வாக்குமூலம் அளித்தார். இதில் உண்மை உண்டா என்பதை விசாரித்தார்களா?

39. சந்திராசாமி, சுப்பரமணியசாமி, சந்திரசேகர், ஆயுத விற்பனை யாளர் கசோகி மூவருக்கும் இந்த வழக்கில் ஏதாவது தொடர்பு உண்டா என்கிற கோணத்தில் விசாரணை நடந்ததா?

40. புலிகள் இந்த கொலையைச் செய்ததின் மூலம் அவர்களுக்குக் கிடைத்த ஆதாயம் என்ன? அமெரிக்கா போன்ற மிகப்பெரிய வல்லரசுகள், சி.ஐ.ஏ. மூலமாக பல மில்லியன் டாலர்கள் பணமும் ஏராளமான ஆயுத உதவிகளும் செய்த இந்த காரியத்தை செய்ய வைத்தார்களா?

41. யாரோ சிலரைப் பிடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சி.பி.அய்.யும் விசேஷ புலனாய்வுத் துறையும் எதற்கு?

படிப்பகம்

www.padippakam.com

# 11. மரணத்தின் பிடியில்...

ராஜீவைக் கொலை செய்தது விடுதலைப் புலிகள்தான் என்று உறுதியான முடிவோடு, இந்தக் குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் நிருபிப்பதற்கு ஆதாரங்களைத் தேடும் வேலையைத் தான் சி.பி.அய் செய்ததே தவிர, உண்மையானக் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கான கண்ணோட்டத்தில் செயல்படவில்லை என்பதற்கு ஏற்கனவே பல உதாரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

சிவராசனை உயிருடன் பிடித்திருந்தால் பல உண்மைகள் வெளிவந்து விடும் என்பதற்காகவே, வேண்டுமென்றே சிவராசனைக் கைது செய்வதைத் தாமதப்படுத்தி, இறுதியில் அவர் தற்கொலை செய்து கொள்வதற்கான சூழல்களை உருவாக்கினார்கள் என்பது சி.பி.அய். யால் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான ரெங்கநாத்தின் புகார்: ஜெயின் கமிஷன் முன் அவர் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் இவ்வாறு கூறி இருக்கிறார்.

- 18.8.91 அன்று நான் கைது செய்யப்பட்டேன். நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் சிவராசனும் மற்றவர்களும் பதுங்கியிருந்த வீட்டை போலீஸ் துணை கமிஷனர், வெற்றிகரமாக சுற்றி வளைத்தார்.
- நான் கைது செய்யப்பட்ட போது போலீசாரிடம் பல உண்மைகளைத் தெரிவித்தேன். ஆனால் அந்த உண்மைகளைச் சொல்லக் கூடாது என்று சி.பி.அய் அதிகாரிகள் என்னை மிரட்டிக் கொடுமைப்படுத்தினார்கள். சி.பி.அய் பல விஷயங்களை வெளிச்சத்துக்கு வரவிடாமல் மூடி மறைத்து விட்டது.
- இந்த வழக்கில் முக்கிய குற்றவாளிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள சிவராசனையும், சுபாவையும் உயிருடன் பிடிப்பதற்கு சி.பி.அய் மிகவும் தயக்கம் காட்டியது.
- ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான விக்கி எனப்படும் விக்னேசுவரன் 3.7.91 அன்று கோவையில் கைது செய்யப்பட்டார். சி.பி.அய்.யின் புலனாய்வுப் படி, சிவராசனையும், சுபாவையும் பெங்களூருக்கு அழைத்துப் போனவர்களில் இந்த விக்கியும் உண்டு. இவரைக் கைது செய்த பின் சிவராசன் பற்றி அனைத்து தகவல்களையும் இவர் சொல்லி

படிப்பகம்

www.padippakam.com



விட்டதாகத் தெரிவிக்கிறது. சி.பி.அய் - தகவல் தெரிந்த உடனே-அதாவது 30-ம் தேதியே சம்பந்தப்பட்ட வீட்டை சுற்றி வளைத்திருக்க வேண்டும். ஆனால் சி.பி.அய் 31ம் தேதி இரவுதான் அங்கு போனது என்று சி.பி.அய் தரப்பு சாட்சியே சொல்லியிருக்கிறார். 20.8.91 அன்று காலை தான் (அதாவது தகவல் கிடைத்தது. 20 நாட்கள் கழித்து) அந்த வீட்டுக்குள் போலீஸ் நுழைந்தது. அப்போது தான் இரண்டு பேர் சையனைடு சாப்பிட்டு இறந்து கிடந்ததை போலீஸ் பார்த்தது. அவர்கள் தப்பிச் செல்ல வேண்டும் என்றே சி.பி.அய். எதிர்பார்த்தது. எனவேதான் 20 நாட்கள் வரை வீட்டுக்குள் நுழையாமல் வெளியே இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

- 2.8.91 அன்று இரவு பத்து மணிக்குத்தான் சிவராசன் மற்றும் சுபா என்வீட்டுக்கு வந்தனர் என்று சி.பி.அய்.யே ஒப்புக் கொள்கிறது. அப்படி என்றால் 30.7.91-லிருந்து 2.8.91 வரை அவர்கள் எங்குத் தங்கி இருந்தார்கள் என்பதைச் சொல்லாமல் ஏன் சி.பி.அய் மறைக்கிறது? யாரைக் காப்பாற்ற?



ரெங்கநாத்

- ஜகநாதன் என்பவரால் வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டில் சிவராசனும், சுபாவும் இந்த இடைக்காலத்தில் தங்கி இருக்கிறார்கள். சி.பி.அய் அவரை விசாரித்தபோது, விடுதலைப் புலிகள் தங்குவதற்காக இன்னும் சில வீடுகளை வாடகைக்கு எடுத்ததாக அவர் கூறியிருக்கிறார். ஆனால் அந்த வீடுகளில் சி.பி.அய்.தேடுதல் நடத்தவில்லை.

- போராளிகள் ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள விவரத்தையும் ஜெகநாதன் சி.பி.அய்-யிடம் கூறி இருக்கிறார். அந்த நர்சிங் ஹோமுக்கு சிவராசனும், சுபாவும் சென்று காயம் பட்டவர்களுக்கு ரத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

- சில மருத்துவமனைகளுக்கு விசிட் செய்து நோயாளிகளை விசாரித்திருந்தாலே சிவராசனையும், சுபாவையும் கண்டு பிடித்திருக்கலாம்.

- சிவராசனையும், சுபாவையும் பெங்களூருக்கு அழைத்துச் செல்லும் போது அவர்கள் 541824 என்கிற பெங்களூர் நம்பருக்கு போன் செய்ததாகக் கூறுகிறது சி.பி.அய். இந்த டெலிபோன் யாருடையது? ஏன் அவர் விசாரிக்கப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



- பெங்களூரில் இந்திரா நகரில் காலை 7. மணிக்கு நல்ல வெளிச்சத்தில் டாங்கர் லாரியிலிருந்து சிவராசனும், சுபாவும் இறங்குகிறார்கள். மிகவும் செல்வாக்கான ஒருவர் வீட்டு வாசலில் வண்டி நிறுத்தி வைக்கப்படுகிறது. அந்த முக்கிய புள்ளியை சி.பி.அய் ஏன் கண்டு கொள்ளவில்லை?
- 2.8.91 அன்று நள்ளிரவு சிவராசனையும், சுபாவையும் என் வீட்டுக்கு யார் எப்படி கொண்டு வந்தார்கள் என்பதையும் சி.பி.அய் சாமர்த்தியமாக மூடி மறைக்கிறது.
- 8.8.91 அன்று சிவராசன் தங்கியிருக்கும் வீட்டைக் கண்டு பிடித்த சி.பி.அய் மயக்கமடையச் செய்யும் வாயுவை அந்த வீட்டுக்குள் செலுத்தி உயிரோடு பிடிக்க ஏன் முயல வில்லை? அவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் வரை ஏன் காத்திருக்க வேண்டும்?
- ராஜீவைக் கொல்லப் பயன் படுத்தப்பட்ட சக்திவாய்ந்த ஆர்.டி. எக்ஸ் வெடிமருந்து ராணுவத்திடமிருந்துதான் வந்திருக்க வேண்டும். அல்லது ஆயுதங்களைக் கடத்துபவர்களிடமிருந்து தான் கிடைத்திருக்க முடியும். அந்த ஆயுதக் கடத்தல்காரரை சி.பி.அய். ஏன் மறைக்கிறது?
- ராஜீவ் வெடிகுண்டு வெடித்து இறந்த செய்தி அப்போதைய போலீஸ் அய்.ஜி. ராகவனால் இரவு 10.40 மணிக்குத்தான் முதன் முதல் வெளியிடப்பட்டது. அதற்கு முன்பு திருப்பெரும்புதூர் பொதுத் தொலைபேசியிலிருந்து யாரும் இது தொடர்பாக போன் செய்யவில்லை. ஆனால் டெல்லியில் இருக்கும் சேஷனுக்கு இரவு 10.30 மணிக்கு எப்படி செய்தி கிடைத்தது? அதை அவர் இரவு 10.40 மணிக்கு ஆர். வெங்கட்ராமனுக்குத் தெரிவித்துள்ளார். இப்படிப்பட்ட முக்கியமான தகவல்களை சி.பி.அய் ஏன் மறைக்கிறது?

-என்று சில முக்கியமான கேள்விகளை ரெங்கநாத் எழுப்பியிருக்கிறார். இதற்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை.

## சாட்சிகளின் முரண்பாடுகள் :

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் நீதிபதி மரணதண்டனை அளித்து விட்டார். அதே நேரத்தில் அரசு தரப்பில் குற்றச்சாட்டுகள் முழுமையாக நிருபிக்கப்படவில்லை என்று வழக்கில் வாதாடிய வழக்கறிஞர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அரசு சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டியபோதும், அவைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமலே தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அரசு சாட்சிகளில் உள்ள முரண்பாடுகளை சில உதாரணங்களுடன் சுட்டிக்

படிப்பகம்

www.padippakam.com



காட்டியிருக்கிறார், குற்றம் சாட்டப்பட்ட சிலருக்காக வாதாடிய வழக்கறிஞர் துரைசாமி: அவர் சுட்டிக் காட்டியிருக்கும் முரண் பாடுகள் சில.

குற்றம் சாட்டப்பட்ட இரும்பொறை, ரவிச்சந்திரன், சுசீந்தரன் ஆகியோர் இதே குற்றங்களுக்காக அவர்கள் மீது தொடுக்கப்பட்ட மற்ற தடா வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது குறைந்த அளவு தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அதே குற்றச் சாட்டுகளுக்கு ராஜீவ் கொலை வழக்கில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1991-ம் ஆண்டு அக்டோபரில் நடுக்கடலில் இரும்பொறையை இந்தியக் கடற்படையினர் கைது செய்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு குண்டு சாந்தன் எழுதிய கடிதம் இவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. குண்டு சாந்தனுக்கு தஞ்சம் அளித்து உதவியதாக இவர் மீது இராமேசுவரத்தில் தடா வழக்கு ஒன்று தொடுக்கப் பட்ட்து. பத்மநாபா கொலை வழக்கிலும் இவர் சேர்க்கப்பட்டார். மேலே கண்ட இரு வழக்குகளிலும் இவரை குற்றமற்றவர் எனக் கூறி நீதி மன்றம் விடுதலை செய்தது. அதே குற்றச்சாட்டுகளுக்காக ராஜீவ் கொலை வழக்கில் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டு நீதி மன்றங்கள் இரு வேறான தீர்ப்புக்களை அளித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரவிச்சந்திரன் சுசீந்திரன் ஆகியோர் சிவராசன், சுபா ஆகியோருக்குத் தஞ்சம் கொடுக்கப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் இதே குற்றச்சாட்டுகளுக்காக தமிழ்நாடு கியூ பிரிவு போலீசார் இவர்கள் மீது தொடுத்த வழக்கில் இவர்களுக்கு ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஒரே சட்டப் பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட இவர்களுக்கு ஒரு வழக்கில் ஐந்தாண்டு தண்டனையும், மற்றொரு வழக்கில் மரண தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது விநோத மானதாகும்.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்கு மூலங்களை உறுதி செய்யும் வகையில் வேறு சாட்சியங்கள் இல்லை. உதாரணமாக சிவராசன், சுபா, பத்மா, நளினி, முருகன் ஆகியோர் 1991-ம் ஆண்டு மே 26-ம் தேதி திருப்பதியில் இருந்து கிளம்பியதாக ஒப்புதல் வாக்கு மூலங்கள் சில வற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று மாலையே அவர்கள் திருத்தணியை அடைந்ததாக அவர்களின் காரோட்டி சாட்சியம் அளித்துள்ளார்.

ஆனால் இரவிச்சந்திரன் அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் சிவ ராசனும், அவரும் சென்னை உணவு விடுதி ஒன்றில் அதே நாளில் பகல் ஒரு மணி அளவில் உணவு உண்டதாக கூறியுள்ளார். இரவிச்சந்திரன் மாமா கூறும் போது அன்று மாலை அவர்கள் கிளம்பிச் சென்றதாக கூறியுள்ளார். ஒரே நபர் ஒரே நேரத்தில் திருப்பதியிலும், திருத்தணியிலும், சென்னை யிலும் எப்படி இருக்க முடியும்? ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இந்த

படிப்பகம்

www.padippakam.com



முரண்பாடுகளை நாங்கள் சுட்டிக் காட்டியபோதும் நீதிபதி அவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஒப்புதல் வாக்கு மூலங்களைஅப்படியே ஏற்றுத் தண்டித்துள்ளார்.

சிவராசனுக்காக பேரறிவாளன் மோட்டார் சைக்கிள் ஒன்றினை மே 4-ந் தேதி வாங்கியதாக ஒரு சாட்சி குறிப்பிடுகின்றார். ஆனால் மற்றொரு சாட்சியோ மே 2-ந் தேதியே அந்த மோட்டார் சைக்கிளில் பேரறிவாளன் சேலையூருக்கு வந்ததாகக் குறிப்பிடுகின்றார். இன்னொரு சாட்சியோ மே 3-ம் தேதி அல்லது 4-ம் தேதி அவரும் பேரறிவாளனும் சாந்தனை நேரில் சந்தித்து அவரிடம் இருந்து 75 ஆயிரம் ருபாயை பெற்றதாகக் கூறி யுள்ளார். அதாவது சென்னையிலும், திருச்சியிலும் ஒரே நாளில் பேரறி வாளன் இருந்ததாகக் கூறப்படுவது முன்னுக்குப் பின் முரணானதாகும்.

அமிர்தலிங்கம் கொலை வழக்கை விசாரித்த இலங்கை நீதி மன்றம் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவருக்கு தண்டனை அளித்த தீர்ப்பை ஒரு ஆவணமாக நீதி மன்றத்தில் அரசு தரப்பு அளித்தது. அதாவது விடுதலைப் புலிகள் அரசியல் தலைவர்களை கொலை செய்வதை வழக்கமாகக் கொண்டவர்கள் என்பதை நிரூபிக்க இவ்வாறு செய்தது. ஆனால் இலங்கையின் உச்ச நீதி மன்றம் அளித்த இறுதியான தீர்ப்பில் விசாரணை நீதி மன்றத்தின் தீர்ப்பை தள்ளுபடி செய்து ஆணையிட்டதை நீதிபதிக்கு தெரியாமல் அரசு தரப்பு மறைத்து விட்டது.

இதைப் போல ஏராளமான முரண்பாடுகளும், தவறுகளும், சுட்டிக் காட்டப்பட்டன. ஆனால் எதையுமே நீதிபதி தனது கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடிய மற்றொரு வழக்கறிஞர் **சந்திரசேகர்** கூறுகிறார்.

''உயிரற்ற ஒரு வழக்கிறகுப் புத்துயிர் கொடுப்பதற்காகவும், சர்வதேச அளவில் பரபரப்பு ஏற்படுத்துவதற்காகவுமே இவ்வழக்கில் பிரபாகரனை குற்றவாளியாகச் சேர்த்தீர்கள். பத்மனாபா வழக்கில் இதே சிவராசனை குற்றம் சாட்டினீர்கள். அதற்கும் யாழ்ப்பாணத்தில் சதி உருவானதாக கூறினீர்கள். அப்படியென்றால் ஏன் அந்த வழக்கில் பிரபாகரன் சேர்க்கப் படவில்லை. பத்மனாபா வழக்கில் நீங்கள் சுமத்திய குற்றச்சாட்டை அந்த நீதிபதி ஏற்கவில்லை. ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்த நீதிபதி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றப்பத்திரிகையைப் படிக்கும்போது உடனடியாக எனது மனதில் தோன்றியது இதுதான்.

பரபரப்பான சண்டைகள் நிறைந்த வெள்ளிவிழா திரைப்படத்திற்கு திட்டமிட்டு எழுதப்பட்ட கதை வசனமாக இது காட்சி தருகிறது. ''மகத் தான வெற்றி பெறும் படம் என நினைத்து நீங்கள் தயாரித்த இந்த படம், படு மோசமான தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கிறது''.

படிப்பகம்

www.padippakam.com



*சிவராசன், தனு, சுபா ஆகியோர் ஒரு அந்நிய சக்தியின் தூண்டுதலால் ஏன் இந்தக் கொலையை செய்திருக்கக் கூடாது? அந்த மூவரும் யாழ்ப் பாணத் தமிழர்கள் என்பதால் மட்டுமே அவர்களைப் புலிகளுடன் தொடர்புப்படுத்தி விசாரணையை முடித்து விட்டார்களா?*

*பிரபாகரனும், சிவராசனும் ரேடியோ மூலம் பேசியதை விசேஷப் புலனாய்வுத் துறை கேட்டதாகச் சொல்லப்படுவது ஏன் ஒரு கற்பனையான ஆதாரமாக இருக்கக் கூடாதா?*

*கிரீன்வேஸ் சாலையில் மல்லிகை என்ற சொகுசு மாளிகையின் நான்கு புறச் சுவர்களுக்குள் உட்கார்ந்து கொண்டு மனோரதத்தில் ஏறி கற்பனை யான குற்றச்சாட்டுகளை உருவாக்கி யாழ்ப்பாணம் செல்லாமலே, விசாரிக்காமலே பிரபாகரன், பொட்டு அம்மான், அகிலா ஆகியோரை குற்றவாளிகள் என்று பிரகடனம் செய்துள்ளீர்கள். இது எப்படி நியாயம் ஆகும்.*

*எனது அனைத்து வாதங்களையும் எழுத்துப் பூர்வமாகவும் அளித்தேன். நான் எழுத்துப் பூர்வமாகக் கொடுத்ததையே தீர்ப்பில் குறிப்பிடவில்லை.*

- *கொலைச்சதியை அறிந்து-இந்த 26பேரும் அதில் ஈடுபட வில்லை என்பதே எங்களது வாதம். ஆனால் நீதிபதி அதை கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை.*
- *பிரபாகரனுக்கு இதில் தொடர்பு இருக்கிறதா என்பது அவரை விசாரித்த பிறகு தானே தெரியும்? இதில் பிரபாகரனை சேர்ந்ததே அரசியல் உள் நோக்கத்தோடு தான்: அதற்கு ஏற்ப தீர்ப்பும் வந்தது.*
- *இந்தத் தீர்ப்புக்கு உலக அளவில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. உலக அளவில் மனித உரிமைக் குழுக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.*

*-என்று'தென் செய்தி' பத்திரிக்கைக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் வழக்கறிஞர் சந்திரசேகர் கூறியிருக்கிறார்.*

*காந்தியார் கொலை வழக்கில் கூட இரண்டு பேருக்குத்தான் தூக்குத் தண்டனை!*

*இந்திரா கொலை வழக்கில் ஒருவருக்குத்தான் தூக்குத்தண்டனை!*

*ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஏற்கனவே 12 பேர் இறந்து விட்டார்கள்: இந்த வழக்கில் சம்பந்தமே இல்லாத ஏற்கனவே இறந்து போன 'குற்றவாளி'களுக்கு - ''கொலை செய்தவர்கள்'' இவர்கள்தான் என்பது எள்ளளவும் தெரியாதபோது, தங்குமிடம் தந்தார்கள் என்றும், சாப்பாடு போட்டார்கள் என்றும், துணிமணிகள் தந்தார்கள் என்றும், கூறி சகலருக்கும் தூக்குத்தண்டனை விதிப்பது சரியா? இது தான் நீதி நெறியா?*

படிப்பகம்

www.padippakam.com



## பதில் கிடைக்காத சில கேள்விகள்

1. ராஜீவ் கொலைக்கு முன்னர் சிவராசன் சென்னையிலிருந்து டெல்லிக்கு இரண்டு முறை இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் சென்றிருக்கிறான். எதற்காக?

2. அவன் டில்லியில் யாரைச் சந்தித்தான்? யார் அவனுக்கு ராஜீவ் சுற்றுப்பயண விவரத்தைக் கொடுத்தார்கள்?

3. சாதாரண லாட்ஜ்கூட இல்லாத திருப்பெரும்புதூரில் தங்குமாறு ஏன் ராஜீவ் நிர்பந்திக்கப்பட்டார்?

4. வெடிகுண்டு தயாரிக்க யார் மருந்து சப்ளை செய்தார்கள்?

5. யார் வெடிகுண்டு தயாரித்தது?

6. 21.5.91 வரை அந்த வெடிகுண்டை எங்கே வைத்திருந்தார்கள்?

7. ராஜீவைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட சக்தி வாய்ந்த ஆர்.டி. எக்ஸ் வெடி மருந்து நிச்சயம் வெளிச்சந்தையில் கிடைக்காது. அது இராணுவத்திடமிருந்துதான் வந்திருக்க வேண்டும். ஆயுதங்களைக் கடத்துபவர்களால் மட்டுமே இந்த வெடி மருந்தை கொடுத்திருக்க முடியும். அந்த ஆயுதக் கடத்தல் காரரை ஏன் சி.பி.ஐ. மறைக்கிறது?

8. வெடிகுண்டு வெடித்து ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் இறந்த தகவல் அப்போதைய போலீஸ் ஐ.ஜி. ராகவனால் இரவு 10.40க்குத்தான் முதன் முதலில் வெளியிடப்பட்டது. அதற்கு முன்பு ஸ்ரீபெரும் புதூரில் பொதுத் தொலைபேசியிலிருந்து யாரும் இது தொடர்பாக போன் செய்யவில்லை. விஷயம் இப்படியிருக்க, டெல்லியிலிருக்கும் திரு.டி.என். சேஷனுக்கு எப்படி இரவு பத்தரை மணிக்கு தகவல் சென்றது? அவர் அதை 10.40க்கு திரு.ஆர். வெங்கட் ரமனுக்கு தெரிவித்துள்ளார். இப்படிப்பட்ட முக்கியமான திடுக்கிடும் தகவல்களை சி.பி.ஐ. ஏன் மூடி மறைக்கிறது?

1987-ல் ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் செய்துகொண்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் பிரபாகரனுக்குப் பிடிக்கவில்லை. இந்த ஒப்பந்தப்படி இலங்கை சென்ற அமைதிப்படை எல்.டி.டி. யினரை சரணடைய வைத்து அதிகப்படியான ஆயுதங்களை அவர்களிடம் இருந்து திரும்பப் பெற்றது. இது தவிர, இந்த அமைதிப் படையினர் இலங்கைத் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தது உட்பட பல காரணங்களால் கோபம் அடைந்துதான் ராஜீவைக் கொல்ல விடுதலைப் புலிகள் திட்டம் போட்டனர் என்கிறது சி.பி.ஐ. ☞

படிப்பகம்

www.padippakam.com



## கோப்புகளைத் 'தொலைத்த' சி.பி.அய். அதிகாரி!

ஸ்ரீகுமார் எனும் சி.பி.அய். அதிகாரி - ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக வெளிநாடுகளுக்கு சென்றார். இலண்டன் வழியாக இந்தியாவுக்குத் திரும்பும் போது - இலண்டன் ஹீத்துரு விமான நிலையத்தில் இந்த வழக்குகள் தொடர்பான கோப்புகள் அடங்கிய அவரது கைப்பெட்டி காணாமல் போய் விட்டது. அந்த அதிகாரி - ஹீத்துரு காவல் நிலையத்தில் ஒரு புகாரைப் பதிவு செய்து விட்டு இந்தியா திரும்பி விட்டார். முக்கிய கோப்புகள் காணாமல் போய்விட்டதாகக் கூறிய அந்த அதிகாரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? காணாமல் போன கோப்புகளைத் திரும்பப் பெற ஏன் மேற்கொண்டு முயற்சிகள் எடுக்க வில்லை? இந்தக் கேள்விகளுக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

- 'நந்தன்' ஏப் 1-15

ஆனால், இப்படிச் சொல்வதை சாட்சியங்கள் மூலம் நிரூபித் திருக்கிறார்களா? அப்போது வெளியுறவுத்துறை செயலாளராக இருந்த ரமேஷ் பண்டாரி [இப்போது உ.பி.கவர்னர்] ராஜீவ் காந்திக்கும் எல்.டி.டி.ஈக்கும் சுமுக உறவு இல்லை என்று சொன்னதாக இவர்கள் வாக்குமூலம் பெற்றிருந்தனர். ஆனால், பிறகு சிறப்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது, ராஜீவ் காந்திக்கும் எல்.டி.டி.ஈக்கும் சுமுக உறவு இருந்ததில்லை என்று சி.பி.ஐ.யிடம் நான் சொல்லவே இல்லை என்று ரமேஷ் பண்டாரி சாட்சியம் கூறியுள்ளார்.

இதே மாதிரி வை.கோபால்சாமியும், நான் அப்படிச் சொல்லவே இல்லை. சி.பி.ஐ.யினரே நான் சொல்லாததை எழுதிக் கொண்டார்கள் என்று குற்றம் சாட்டியுள்ளார். [குமுதம் - 4.12.97]

படிப்பகம்

www.padippakam.com



*தூக்குத் தண்டனையையே முற்றிலுமாக ஒழித்து விட வேண்டும் என்கிறது அய்.நா.வின் மனித உரிமைக் கமிஷன். உலகில் 44 நாடுகள் தூக்குத் தண்டனையையே ஒழித்து விட்டன. மிகவும் அபூர்வமாகவே (Rarest of rare) தூக்குத் தண்டனையை விதிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறது இந்திய உச்சநீதிமன்றம். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆண்டை மனித உரிமை ஆண்டாக அய்.நா. பிரகடனம் செய்திருக்கிறது. இந்த மனித உரிமை ஆண்டில் 26 தமிழர்களுக்கு ஒட்டு மொத்தமாகத் தூக்குத் தண்டனை விதித்திருப்பது சரியா? நீதியா? நியாயமா?*

*-மனித உணர்வு படைத்தவர்கள் முன், இந்தக் கேள்வியை வேதனையோடு சமர்ப்பிக்கிறோம்.*

## அன்னிய சக்தியின் தொடர்பு

ஜெயின் கமிஷனுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி 1985-ம் ஆண்டு அக்டோபர் 14-ம் தேதியன்று இலண்டன் நகரில் வைத்து இராஜீவ் காந்தியைப் படுகொலை செய்யும் முயற்சி நடந்தது. ஆனால் ஸ்காட்லாந்து யார்டு போலீசும், பிரிட்டிஷ் உளவுத்துறையும் இந்த் சதியைப்பற்றி முன்னதாகவே தெரிந்து கொண்டன. இலண்டனில் இருந்த குருநானக் குருத்துவாரின் துணைத் தலைவரான ஜெர்மைல் சிங் ரதுவாலா,பர மாத்மா சிங்,மார்வின் அக்விந்தார்சிங் இல் உள்பட 15 பேர்களை பிரிட்டிஷ் போலீஸ் கைது செய்து விசாரணை நடத்தியது.

இராஜீவைப் படுகொலை செய்தால் 60,000 பிரிட்டிஷ் பௌண்டுகள் அளிப்பதாகவும் இலண்டனில் பாதுகாப்பாக இருக்க ஒரு வீடு அளிப்பதாகவும் இறுதிவரை ஆசைகாட்டியதாகவும் கூறப்பட்டது. முன்னாள் மத்திய அமைச்சர் கே.கே. திவாரி இந்நிகழ்ச்சி பற்றிக்குறிப்பிடும் போது பின்வருமாறு கூறியுள்ளார்.

‘‘இராஜீவை கொலை செய்ய அன்னிய சக்திகள் தொடர்ந்து முயற்சி செய்தன. இராஜீவ் கொலைக்கான சதித்திட்டத்தை அன்னிய சக்திகளுடன் சேர்த்து சந்திர சுவாமிதான் வகுத்தார். இன்னும் சொல்லப்போனால் இந்திராகாந்தி கொலைக்கும், இராஜீவ் கொலைக்கும் இடையே நிச்சயமாக தொடர்பு உள்ளது. இந்த இரு கொலைகளிலும் தொடர்பு உடையவர்கள் அதே நாடாவார்கள்.

அவுட் லுக் (1.12.97)

படிப்பகம்

www.padippakam.com

# 12. "சத்தியம்" சிரிக்கிறது

ராஜீவ் கொலை வழக்கில் 26 தமிழர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுத் தீர்ப்பு கூறப்பட்டதும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் கார்த்திகேயன் புளகாங்கிதம் அடைந்தார். மகிழ்ச்சிப் பெருக்குடன் தலைகால் தெரியாமல் கூத்தாடினார்.

அப்போது ''சத்தியம் வென்றது'' என உரக்கக் கூவினார்.

ஆனால் உண்மையில் அன்று சத்தியம் சிரித்தது.

புலனாய்வு என்ற பெயரிலும் தீர்ப்பு என்ற பெயரிலும் நடத்தப்பட்ட நாடகங்களைக் கண்டு சத்தியம் சிரித்தது என்பதைக் கீழ்க்கண்ட உண்மைகள் அம்பலப்படுத்துகின்றன.

- பொதுவில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது சுமத்தப்படுகின்ற குற்றச் சாட்டுகளில் சிறு சந்தேகம் ஏற்பட்டாலும், அந்தச் சந்தேகத்தின் பலனை (*Benefits of Doubts*) குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சாதகமாக வழங்குவதுதான் நீதிமன்றத்தின் பொதுவான நியதி. இத்தீர்ப்பில் அந்த நோக்கம் பாதகமான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் விசித்திரம். நீதிமன்றம் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்காமல், போலீஸ் தரப்பிற்கு வழங்கியுள்ளது.
- இந்தியச் சட்டத்தின்படி தடாச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மீது ஒருவருடம் முடிவதற்கிடையில் முழுமையாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு நடந்தது முற்றிலும் மாறுபட்டது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேர் மீதான குற்றப் பத்திரிகை 20.05.92 இல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் கூட, முழுமையாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. குற்றப் பத்திரிகை பகுதி பகுதியாக தவணை முறையில்தான் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
- நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுகின்ற போதே, குற்றப்பத்திரிகை தொடர்பான ஆவணங்களும் ஆதாரங்களும் தாக்கல் செய்யப்பட வேண்டும். இது முக்கியமான

படிப்பகம்

www.padippakam.com



விதியாகும். இந்த விதியும் இங்கு மீறப்பட்டிருக்கின்றது. இந்த வழக்கில் விசாரணைகளை மேற் கொண்ட சிபிஐ யினால் எந்த முறையான நட வடிக்கைகளும் மேற் கொள்ளப்படவில்லை. அது மட்டுமின்றி நீதிமன்றத்தில் அவ்வப்போதும், தேவைப்பட்ட போதும் ஆதாரங்கள் வழங்கப்பட்டன. குற்றப்பத்திரிகையின் நகலையும் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்குக் கொடுப்பதில் கூட சிபிஐ இழுத்தடிப்பையே மேற்கொண்டது.

- நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிபிஐ யினால் மிகக் கொடுமையான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர். இறுதியில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டே ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டது. இதில் இன்னொன்றையும் வெளிப்படுத்த வேண்டும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அளித்ததாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களின் பல பக்கங்களில் வாக்குமூலம் அளித்தவர்களின் கையெழுத்து இடப்படவில்லை. வாக்கு மூலம் அளித்தவரின் கையெழுத்து ஒப்புதல் வாக்குமூலத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இல்லாதிருந்தால் அந்த ஒப்புதல் வாக்குமூலம் செல்லு படியாகாது. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். நீதிபதிக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை.

- நீதிபதி நவநீதன் கையெழுத்தில்லாத ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் தூக்குத்தண்டனை எனும் தீர்ப்பு வழங்கியிருப்ப தானது, நீதிமன்றத்தை, சட்டவன்மையை அவமதிக்கின்ற செயலா கும். தான் தோன்றித்தனமான அவரது இந்த நடவடிக்கையானது பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. அரசியல் நிர்ப்பந்தம் அவரை பொம்மை நீதிபதியாக்கியிருக்கலாம் எனும் ஊகத்திற்கே வழி சமைக்கின்றது.

- ஒரு குற்றவியல் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் வழக்கின் போது குற்றவாளியாக ஐயந்திரிபற நிரூபிக்கப்பட வேண்டும். நிரூபிக்கப் படமுடியாத விடத்து அவர்கள் குற்றவாளி கள் அல்லர். ஆனால் தடா சட்டத்தினைப் பொறுத்து இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர்கள் தாம் குற்றவாளிகளல்லர் என்பதை நிரூபிக்க வேண்டும். இரண்டு அம்சங் களையும் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். சாதாரண குற்றவியல் சட்டத்தில் ஒருவரைக் குற்றவாளி என வழக்கு தொடுக்கும் அரசு அவரைக் குற்றவாளி என நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்கப்படாத விடத்து அவர் கள் குற்றவாளிகள் என நீதிமன்றம் கருதும். தடாசட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்ட இந்த 26 பேரும், தாம் குற்றவாளிகள் அல்லர் என நிரூபிக்கும் சந்தர்ப்பம் இருந்தும், நீதிபதி அதற்கான

படிப்பகம்

www.padippakam.com



அவகாசத்தை வழங்கவில்லை. நீதியும் சட்டமும் செய்துவிட்ட வஞ்சகச் செயல் இது.

- எப்போதும் குறிப்பிட்ட வழக்கிற்குரிய நீதிமன்றத்தினை முடிவு செய்த பின்னரே அந்த வழக்கிற்குரிய வேலைகள் ஆரம்பமாகும். ஆனால் இங்கு அப்படியல்ல. இந்த வழக்கைப் பொறுத்து சிபிஐ யினால் வழக்கு தாக்கல் செய்துவிட்ட பின்பு தான் வழக்கு நடத்தப்படும் நீதிமன்றம் எதுவெனத் தீர்மானிக்கப்பட்டது. இதனூடாகச் சொல்லப்பட்ட செய்தி என்னவென்றால், இந்த வழக்கு என்பது கண்துடைப்பு நாடகம். தீர்ப்பு இதுதான் என்பது எப்போதோ முடிவாகிவிட்டது. தீர்ப்பும் எதேச்சதிகாரத் தீர்ப்பாகும்.

- சிபிஐயினால் தயாரிக்கப்பட்ட குற்றப்பத்திரிகை கூட விநோதமாக இருந்தது. வழமையாகக் கிடைக்கின்ற ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சிகளின் அடிப்படையில் குற்றப்பத்திரிகை தயாரிக்கப்படுதல், குற்றவாளிகள் யாரெனத் தீர்மானிக்கப்படுதல் இவையே ஒழுங்கு முறையான நீதிமன்றத் தீர்ப்புக்கு இட்டுச் செல்வதாகும். ஆனால் இந்த வழக்கினைப் பொறுத்து, ஒரு அனுமானத்தின் அடிப்படையில் 'இவர்கள் தான் குற்றவாளிகள்' எனத் தீர்மானித்ததன் பிறகே வழக்கு விசாரணைக்கு வேண்டிய ஒப்புதல் வாக்குமூலங்கள், ஆதாரங்கள், ஆவணங்கள் சாட்சிகள் தயாரிக்கப்பட்டன.

- சிபிஐ யினால் 1014 சாட்சிகள் இருப்பதாக முதலில் கூறப்பட்டது. ஆனால் 288 பேர் தான் சாட்சிகளாகக் கூப்பிட்டு விசாரிக்கப் பட்டனர். அத்துடன் சாட்சிகளின் விசாரணையில் கூட விசித்திரம் நடந்தது. சாட்சிகளின் பெயர் முன்கூட்டியே குற்றவாளிகள் தரப்பில் ஆஜராகும் வழக் கறிஞர்க்குச் சமர்பிக்கப்பட வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை. சாட்சியாக அழைக்கப்படுபவர் களின் எண்கள் மட்டுமே கொடுக்கப் பட்டது. இதனால் சாட்சி சொல்ல வருபவர் யார்? அவர் எதற்காகச் சாட்சி சொல்ல வருகின்றார்? சாட்சியின் நம்பகத்தன்மை எவ்வளவு? என்பதெல்லாம் குற்றவாளிகள் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்குத் தெரிய வில்லை. சிபிஐ இந்த வழக்கை ஒரு பொருட்டாக மதிக்காமல், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தீர்ப்பை வழங்குவதில் வெகு கவன மாக இருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

- இந்த வழக்கில் வி.ஐ.பி. (VIP) சாட்சிளாக வை. கோபால்சாமி. ரமேஸ் பண்டாரி, லதா பிரியகுமார், மரகதம் சந்திரசேகர், காசி ஆனந்தன், ஆவடி மனோகரன், மலைச்சாமி, இலங்கை டி.ஐ.ஜி. (DIG) குணத்திலக ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். ஆனால் சிலர் வேண்டுமென்றே தவிர்க்கப் பட்டனர். உதாரணமாக ராஜீவ்


படிப்பகம்

www.padippakam.com



காந்தியின் தமிழ்நாட்டுச் சுற்றுப்பயண நிகழ்ச்சியைத் திட்டமிட்ட காங்கிரஸ் தலைவர் மற்றும் காங்கிரஸ் கட்சியின் முக்கிய புள்ளியாகக் கருதப்பட்ட ஜி.கே. மூப்பனார், போன்றோர் சாட்சியாக அழைக்கப்படவில்லை. குறிப்பாக இன்னுமொன்று ராஜீவ் காந்தியைக் கொல்ல சர்வதேசச்சதி நடந்தது. அதில் திரை மறைவு அரசியல் நடத்தும் சந்திரசாமிக்கும் பங்குண்டு. சந்திரசாமியுடன் சுப்பிரமணிய சுவாமிக்குத் தொடர்பு உண்டு. இவை பற்றியயெல்லாம் ஜெயின் கமிசனின் விசாரணையில் சாட்சிகள் சொல்லியிருக்கிறார்கள். இவர்களெல்லாம் சாட்சிகளாக அழைக்கப்பட வேண்டும் என நீதிபதி கவனத்தில் கொள்ள வில்லை.

◆ மூடிய கதவினுள் இவ்வழக்கு விசாரணை ஏன் நடத்தப்பட வேண்டும்? எந்தப் பத்திரிகையாளரும் இந்த வழக்கு விசாரணையைப் பார்வை யிட அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணம் சந்தேகமூட்டு கின்றது. உண்மைகள் பலவற்றை மூடிமறைப்பதற்காக, பொய்மை கள் பல வெளி உலகிற்குத் தெரியாதிருப்பதற்காக, மூடிய கதவி னுள் விசாரணை நடைபெற்றிருக்க வேண்டும். மூடிய திரையினுள் வஞ்சகமான நாடகம் அரங்கேறியது.



படிப்பகம்

www.padippakam.com

# 13. நீதியாம் நீதி?

**ரா**ஜீவ் கொலைவழக்கு விசாரணை நேர்மையாகவும், நீதிமுறையுடனும் நடத்தப்படவில்லை. சர்வதேச நெறிமுறைகளும் பின்பற்றவில்லை. ஒரே நபருக்கு பல தூக்கு தண்டனைகள், ஆயுள் மற்றும் தண்டனைகள் அளிக்கும் அளவுக்கு நீதி மரத்துப் போய்விட்டது.

26 தமிழர்களின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளையும் தண்டனைகளையும் கீழே தந்துள்ளோம். படித்தால் உங்கள் நெஞ்சம் பதறும்.

## யாருக்கு எவ்வளவு தண்டனை

| பெயர் | குற்றச்சாட்டு | தண்டனை |
|---|---|---|
| 1. நளினி | கொலை | மரணதண்டனை |
| | தடா | மரண தண்டனை |
| | | ஆயுள் தண்டனை |
| | சதி திட்டம் | மரண தண்டனை |
| | கடுமையான காயங்கள் ஏற்படுத்துதல் | 3 வருடம் ஜெயில் |
| | லேசான காயம் ஏற்படுத்துதல் | 1 வருடம் ஜெயில் |
| 2. சின்ன சாந்தன் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 3. முருகன் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 4. சங்கர் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |

படிப்பகம்

www.padippakam.com



| | | |
|---|---|---|
| 5. விஜயானந்தன் | சதித்திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 6. சிவரூபன் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 7. கனகசபாபதி | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 8. ஆதிரை | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2வருடம் ஜெயில் |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 9. ராபர்ட் பயஸ் | சதி திட்டம் | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| 10. ஜெயக்குமார் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 11. சாந்தி | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 12. விஜயன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 13. செல்வ லட்சுமி | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |

படிப்பகம்

www.padippakam.com



| | | |
|---|---|---|
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 14.பாஸ்கரன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 15. சண்முகவடிவேலு | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| 16.ரவிச்சந்திரன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெடிபொருள் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| | சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 17.சுசீந்திரன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெடிபொருள் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| | சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 18.பேரறிவாளன் | சதி | மரண தண்டனை |
| | கொலை | மரண தண்டனை |
| | பலத்த காயம் ஏற்படுத்துதல் | 3 வருடம் ஜெயில் |
| | லேசான காயம் ஏற்படுத்துதல் | 1 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| | பாஸ்போர்ட் சட்டம் | 3 மாத ஜெயில் |
| 19.இரும்பொறை | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | பாஸ்போர்ட் சட்டம் | 3 மாதம் ஜெயில் |
| 20.பாக்கியநாதன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |

படிப்பகம்

www.padippakam.com



| | | |
|---|---|---|
| 21 பத்மா | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வயர்லெஸ் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 22.சுபா சுந்தரம் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | சாட்சியம், தடயங்களை மறைத்தல் | 2 வருடம் ஜெயில் |
| 23.தனசேகரன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2வருடம் ஜெயில் |
| 24.ரங்கன் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 25.விக்கி | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |
| | வெளிநாட்டினர் சட்டம் | 2 வருடம் ஜெயில் |
| 26.ரங்கநாத் | சதி | மரண தண்டனை |
| | தடா | ஆயுள் தண்டனை |
| | கொலையாளிக்கு அடைக்கலம் | 2 வருடம் ஜெயில் |

படிப்பகம்

www.padippakam.com

# 14. தலைகீழாக மாறிய "இந்து"

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகு ''இந்து'' நாளிதழ் பரபரப்பான செய்தி ஒன்றினை வெளியிட்டது. 5.3.91 அன்று விடுதலை புலிகளின் பிரதிநிதி காசி ஆனந்தன் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப்பேசினார் என்பதே அச்செய்தி ஆகும். 25.5.91 ''இந்து'' நாளிதழில் முதல் பக்கத்திலேயே இச்செய்தி வெளியிடப்பட்டது. காங்கிரசு கட்சியின் அதிகார பூர்வமான பேச்சாளர் பிரணாப் முகர்ஜியிடம் இச்செய்தி பற்றி கேட்கப்பட்டபோது ''இத்தகைய சந்திப்பு பற்றி ஆதாரம் எதுவும் இல்லை'' என்று அவர் திட்டவட்டமாக மறுத்தார்.

25.5.91 அன்று வெளியான ''இந்து'' நாளிதழ் முதல் பக்கத்தில் ராஜீவ் காந்தி காசி ஆனந்தன் சந்திப்புச் செய்தியை மீண்டும் உறுதி செய்தது. இவர்கள் இருவரும் சந்தித்துப் பேசிய செய்தியை விடுதலைப் புலிகள் வட்டாரம் மட்டுமல்ல. ராஜீவ் காந்தியே ''இந்து'' செய்தியாளரிடம் ஒப்புக் கொண்டார் எனவும் ''இந்து'' நாளிதழ் கூறியது.

'இந்து' குடும்ப பத்திரிக்கைகளில் ஒன்றான Front Line இதழ் ஜுன் 8-21, 1991, ராஜீவ் - காசி ஆனந்தன் சந்திப்பினை உறுதி செய்து கட்டுரை ஒன்று வெளியிட்டது. இதை டி.எஸ். சுப்பிரமணியம் என்பவர் எழுதி யிருந்தார்.

'இந்து' நாளிதழ் Front Line ஆகிய இதழ்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பத்திரிகைகள் அல்ல. விடுதலைப் புலிகளின் எதிரிகள் தரும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடும் பத்திரிகைகளாகும். 1991ம் ஆண்டில் இந்த இரு பத்திரிகைகளும் வெளியிட்டுள்ள செய்திகள் ராஜீவ் கொலையில் விடுதலைப் புலிகளுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை உறுதி செய்யும் செய்திகள் ஆகும். ஆனாலும் காலப்போக்கில் இவைகள் வேண்டும் என்றே விடுதலைப்புலிகளை இக்கொலையில் சம்பந்தப்படுத்தி செய்திகளை வெளியிட்டன. 'இந்து' இதழ் முதலாளியின் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி. மாலினி பார்த்தசாரதி என்பவர் டில்லியில் இருந்து வெளியாகும் 'இந்து' இதழின் துணை ஆசிரியராக பணியாற்று கிறார். ராஜீவ் காந்தி - காசி ஆனந்தன் சந்திப்புக்கு இவர்தான் ஏற்பாடு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com



***ராஜீவ் படுகொலைக்குப் பின்னர் 'இந்து' குடும்ப பத்திரிகைகள் இந்தக் கொலையில் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இல்லை என்பதைக் காட்டும் வகையில் ராஜீவ் காந்தி - காசி ஆனந்தன் சந்திப்புச் செய்தியை வெளியிட்டன. சுமுகமாக நடைபெற்ற இந்தச் சந்திப்புக்குப் பிறகு ராஜீவ் காந்தி கொலை செய்ய வேண்டிய அவசியம் விடுதலைப் புலிகளுக்கு இல்லை என்பது நிருபணமாயிற்று.***

'இந்து' குடும்பப் பத்திரிகைகளில் இவ்வாறு செய்திகள் வெளியிடப் பட்டதை சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வு குழு விரும்பவில்லை. ஏனென்றால் அவர்கள் இந்தக் கொலையை விடுதலைப் புலிகள் மீது சுமத்துவதில் குறியாக இருந்தார்கள். எனவே இத்தகைய உண்மைச் செய்திகள் வெளியானது தங்கள் நோக்கத்திற்கு இடையூறாக இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள்.

எனவேதான் திருமதி மாலினி பார்த்தசாரதியை சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை என்ற பெயரில் மிரட்டத் தொடங்கிற்று. புலிகளின் படுகொலைத் திட்டத்திற்கு துணை புரிந்ததாக திருமதி மாலினியை மிரட்டினார்கள். இதன் விளைவாக 'இந்து' Front Line ஆகிய இதழ்கள் தன் போக்கை அடியோடு மாற்றிக்கொண்டு சி.பி.ஐ. யின் விருப்பத்திற்கு இணங்க புலிகள் மீது பழி சுமத்தும் செய்திகளை வெளியிடத் தொடங்கினார்கள். 'இந்து' குடும்ப பத்திரிகைகளில் தலைகீழ் மாற்றத்திற்கு இது தான் காரணம் ஆகும்.

## 'இந்து' வெளியிட்ட செய்தி

ராஜீவ் கொலை செய்யப்பட்டதில் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இல்லை என்பதை உறுதிப்படுத்தும் செய்திகள் வெளிவந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கடந்த மார்ச் மாதம் ராஜீவ் காந்தியை டில்லியில் சந்தித்துப் பேசி - சுமுகமான உறவு முறையை உருவாக்கிக் கொண்டார்கள் என்ற தகவல் வெளிவந்திருக்கிறது.

இதுபற்றி இந்து ஏட்டில் வெளிவந்துள்ள செய்தி விபரம்:

கடந்த மார்ச் 5ம் தேதி விடுதலைப் புலிகளின் மத்திய கமிட்டியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் ராஜீவ் காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இந்த செய்தி பத்திரிக்கைகளில் வெளிவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பிலே முயற்சி எடுத்து இந்த சந்திப்பு நடந்தது. இந்த சந்திப்பின் மூலம் புலிகள் இயக்கத்துக்கும் - ராஜீவ் காந்திக்கும் இடையே நல்லுறவு உருவானது. இந்திய அமைதிப் படையை ராஜீவ் அனுப்பிய பிறகு இப்போதுதான் முதன் முதலாக ராஜீவ் காந்தியும் விடுதலைப்புலிகளும் சந்தித்து, நல்லுறவுகளை உருவாக்கிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com



இந்த சந்திப்பு மிகவும் சுமூகமாக இருந்தது. ராஜீவ் காந்தியுடன் நல்லுறவை புலிகள் இரண்டு மாதங்களுக்கு முன் ஏற்படுத்தியுள்ள நிலையில் ராஜீவ் கொலையை புலிகள் எப்படி செய்திருப்பார்கள் என்ற கேள்விக் குறியை எழுப்பியிருக்கிறது.

மாறிவரும் அரசியல் ராணுவ சூழல்களைத் தொடர்ந்து புலிகள் ராஜீவோடு சுமூகமாகப் போகும் முடிவை எடுத்தனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தனது தலையீட்டை விலக்கிக் கொண்டதால், இலங்கை அரசின் ராணுவத் தாக்குதல் அதிகரித்து வருவதாக புலிகள் கருதுகின்றனர். இதை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ராஜீவிடமே நேரில் தெரிவித்ததோடு ஈழத் தமிழர் பிரச்சினையில் சுமூகமாக தீர்வை தங்களால் உருவாக்க முடியும் என்று தாங்கள் உறுதியாக நம்புவதாக ராஜீவ் காந்தியிடமே தெரிவித்துள்ளனர். ராஜீவ் காந்தியும் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்க சம்மதித்து தனது இல்லத்திலேயே அவர்களின் சந்திப்புக்கு அனுமதியும் அளித்தார்.

### ராஜீவ்-புலிகள் சந்திப்பு உண்மையே

உலக கிறிஸ்தவ தேவாலங்களின் கூட்டமைப்பு நடத்தி வரும். சர்வதேச பிரச்சினைகள் பற்றிய ஆய்வு நிறுவனத்தில் இயக்குநராக இருக்கும் நினான் – கோசி என்பவர் 30.12.97 இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பாவில் உள்ள விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் என்னை சந்தித்த போது கீழ்கண்ட விபரங்களை தெரிவித்தார்கள். 1991-ம் ஆண்டின் தொடக்கத்திலேயே இராஜீவ் காந்தியுடன் தாங்கள் தொடர்பு கொண்டிருந்ததாகவும், இராஜீவ் காந்தியின் தூதுவர்கள் இலண்டனில் இருந்த விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகளைச் சந்தித்ததாகவும் அவர்கள் கூறினார்கள் இதைத் தொடர்ந்து டெல்லியில் இருந்த இராஜீவ் காந்தியின் வீட்டில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அவரை சந்தித்துப் பேசினார்கள். பதவியில் இல்லாத ஒருவருடன் மீண்டும் நட்புறவைப் புதுப்பித்து கொள்வதால் என்ன பயன் என்று நான் கேட்ட போது அவர்கள் ''வி.பி.சிங்., சந்திர சேகர், ஆகியோர் பிரதமர் பதவிகளை வகித்தபோது அவர்களின் நடவடிக்கைகள் எங்களுக்கு ஏமாற்றத்தை அளித்தன.

ராஜீவ் காந்தியின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம். இந்திய அமைதிப்படை நடத்திய அட்டூழியத்திற்கு அவர் வருத்தம் தெரிவித்துள்ளார். அவர் பிரதமரானால் வலிமை வாய்ந்த பிரதமராக விளங்குவார். எங்களுடைய லட்சியம் நிறைவேற நிச்சயமாய் உதவுவார் என நம்புகின்றோம்'' என்று கூறினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



''கடந்தகால கசப்பான சம்பவங்களை மறந்து விடுவோம். நமது உறவில் புதிய அத்தியாயத்தை துவக்குவோம். எங்கள் இயக்கம் இந்தியாவுக்கு எதிராக ஒருபோதும் செயல்படாது என்று புலிகள் ராஜீவிடம் கூறினர். ராஜீவ் காந்தியும் இதற்கு முழுமையான ஆதரவு தெரிவித்தார். பிரபாகரனுக்கு தனது வாழ்த்துக்களைக் கூறுமாறு கூறிய ராஜீவ் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறும் தனது சார்பில் பிரபாகரனிடம் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். ராஜீவ் காந்தி கூறிய கருத்துக்கள் உடன் பிரபாகரனுக்குத் தெரிவிக்கப்பட்டன. பிரபாகரனும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இந்த நிலையில் ராஜீவை விடுதலைப் புலிகள் கொலை செய்திருப்பார்கள் என்று கூறப்படுவதில் அடிப்படை இல்லை. இவ்வாறு இந்து ஏடு எழுதியிருக்கிறது.

'இந்து' நாளிதழ் 28.5.91.

## ''பிரண்ட் லைன்'' இதழ் வெளியிட்ட செய்தி

ராஜீவ் காந்திக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதி கவிஞர் காசி ஆனந்தனுக்கும் இடையே மார்ச் 5ம் தேதி புதுடெல்வி யில் நடைபெற்ற சந்திப்பு மிக முக்கியமானதாகும். ராஜீவ் காந்தி உயிரோடு இருந் திருப்பாரானால் இந்த சந்திப்பின் விளைவுகள் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்குப் பல நன்மைகளை ஏற்படுத்தி யிருக்கும்.

ராஜீவ் காந்தியைச் சந்திக்க வேண்டும் என விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் விரும்பியது. இந்த இயக்கத்தின் மத்தியக் குழு உறுப்பின ரான காசி ஆனந்தன் இதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். ராஜீவ்காந்தி வீட்டில் சுமார் 30 நிமிடம் மிக நல்லமுறையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

''மக்களவைத் தேர்தல்கள் முடியும் வரை பொறுத்திருக்கும்படி'' ராஜீவ் காந்தி காசி ஆனந்தனிடம் தெரிவித்தார். ''கடந்த காலத்தில் நடந்தவற்றை மறந்துவிட்டு அவருடன் புதிய நட்புறவை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்புவதாக'' காசி ஆனந்தன் ராஜீவ்காந்தியிடம் தெரிவித்தார். மேலும் ''இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஒரு போதும் விடுதலைப்புலிகள் ஈடுபடமாட்டார்கள்'' என்றும் உறுதி கூறினார். ராஜீவ்காந்தி மீண்டும் பிரதமர் ஆவதின் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு உறுதியான முயற்சி களைச் செய்ய முடியும் என விடுதலைப் புலிகள் நம்புவதாகவும் அவர் கூறினார்.

ராஜீவ் காந்தியும் மிக மகிழ்ச்சியுடன் கீழ்க்கண்டவாறு பதில் அளித் தார்: தனது வாழ்த்துக்களை பிரபாகரனுக்கு தெரிவிக்கும்படியும் போராட்டத்தை பிரபாகரன் தொடர்ந்து நடத்துமாறும் அவர் கூறினார். இலங்கையில் தற்போது நடைபெறுவது பற்றியும் விடுதலைப் புலி களின் இறுதி லட்சியம் பற்றியும் அவர் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



எதிர்காலத்தில் தொடர்ந்து தன்னுடன் தொடர்பு வைத்துக் கொள்ளும் படியும் இறுதியாக ராஜீவ் காந்தி கூறினார்.

ராஜீவ் காந்தியின் வாழ்த்துச் செய்தி பிரபாகரனிடம் உடனடியாக தெரிவிக்கப்பட்டது. முன்னாள் இந்தியப் பிரதமருடன் மீண்டும் நட்புறவு ஏற்படுவது குறித்து அவரும் மகிழ்ச்சியடைந்தார்.

இந்த சந்திப்புக்குப் பிறகு காசி ஆனந்தன் விடுத்த அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிட்டார். ''விடுதலைப் புலிகள் இந்தியாவின் பக்கம் இருப்பார்கள். அதைப்போல இந்தியாவும் எங்கள் பக்கம் இருக்கும். நாங்கள் ஒருபோதும் இந்தியாவிற்கு எதிராகச் செயல் படவில்லை. இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மூண்டெழுந்த மோதல் எங்கள் வரலாற்றில் துரதிருஷ்ட வசமான அத்தியாயமாகும். இதை இரு தரப்பினரும் முழுவதுமாக மறந்துவிட வேண்டும். எங்களைப் பொறுத்த வரையில் இந்தியப் படைகளை எதிர்த்து நாங்கள் போராடிய காலகட்டத்தில்கூட பாகிஸ்தானிடமோ, சீனாவிடமோ நாங்கள் எத்தகைய உதவியும் கேட்கவும் இல்லை'' பெறவும் இல்லை.

ராஜீவ் காந்தி - காசி ஆனந்தன் சந்திப்பைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேசச் செயலகப் பொறுப்பாளர் தளபதி கிட்டு இலண்டனில் இருந்து விடுத்த அறிக்கை ஒன்றில் ''இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர இந்தியா முயற்சிசெய்ய வேண்டும். தமிழர் களுக்கு எதிராக சிங்கள இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை களை நிறுத்தும்படி சிங்கள அரசுக்கு இந்தியா நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டும். சிங்கள் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடக்கும்போது இந்தியா நடுவராக இருக்க வேண்டும். சர்வதேச பாதுகாப்பு நியதிகளுக்கு ஏற்ப தமிழர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும் ஏற்பாடுகளை செய்வதுபற்றி சிங்கள அரசு இந்திய அரசுக்கு உறுதிதர வேண்டும். தமிழர் களின் நியாயமான கோரிக்கையை ஏற்கும்படி சிங்கள அரசை இந்தியா வற்புறுத்த வேண்டும்.''

ராஜீவ் காந்தி சந்திப்பிற்குப் பிறகு காசி ஆனந்தன் ''ரா'' உளவுத் துறை அதிகாரிகளையும் சந்தித்தார். இதன் விளைவாக இலங்கையில் போர்க்களத்தில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகளைத் தமிழகத் திற்குக் கொண்டுவந்து சிகிச்சை அளிக்க அனுமதி தரப்பட்டது. தமிழ்நாட்டில் அப்போது ஆளுநர் ஆட்சி இருந்தது வசதியாக இருந்தது. இதைத் தொடர்ந்து முன்னாள் பாதுகாப்புத் துறை இணை அமைச்சரும் ராஜீவ் காந்திக்கு மிக நெருக்கமான காங்கிரஸ் தலைவருமான ப. சிதம்பரம் 5.5.91 அன்று விடுத்த அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



''இலங்கையிலிருந்து அகதிகளாக வரும் தமிழர்களுக்கு பாது காப்பும் புகலிடமும் அளிப்பது நம்முடைய கடமை. காயமடைந்த போராளிகளுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.''

காசி ஆனந்தன், கிட்டு, ப. சிதம்பரம் ஆகியோர் விடுத்த அறிக்கைகளைக் கண்டு சிங்கள அரசு பதட்டம் அடைந்தது. ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமர் ஆவதற்கு வாய்ப்பு உருவாவது குறித்து அது அச்ச மடைந்தது. ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமரானால் இந்திய - இலங்கை உடன் பாட்டை

**ரமேஷ்தலால் தகவல்**

சந்திர சாமியின் தீவிர பக்தராக இருந்தவர் ரமேஷ்தலால் பின் அவரது நடவடிக்கைகளை நேரில் பார்த்து அச்சமடைந்து அவலை விட்டு விலகி ''நேதாஜி சுபாஷ் சேனா'' என்ற அமைப்பை ஏற்படுத்தி செயல்பட்டு வருபவர். இவர்களும் போது 1986ல் சந்திர சாமி ராபில் எதிர்ப்பாளர்களை அழைத்துப் பேசினார். அக்கூட்டத்தில் மூத்த காங்கிரஸ் தலைவர்களான பிரணாப்முகர்ஜி, பி.வி. நரசிம்மராவ், ஏ.பி.சர்மா, பிரகாஷ் மெஹ்ரோத்ரா, எஸ்.எஸ். மகாபத்ரா, குண்டுராவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டெல்லியில் உள்ள 18 வில்லிங்டன் கிரசென்ட் என்ற இடத்தில் இந்த சந்திப்பு நடந்தது.

அவர்களிடம் சந்திரசாமி ராஜீவ் காந்திக்கு பதில் காங்கிரசுக்கு புதிய தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றார். அடுத்து யார் தலைமைப் பொறுப்பை ஏற்பது என்பதில் பிரணாப் நரசிம்மராவ் இடையே கருத்து வேறுபாடு இருந்தது.

அப்போது குண்டுராவ் தலையிட்டு அடுத்து பிரதமர் ஆவதற்கு அதிக பணம் யாரால் செலவழிக்க முடியும் என்றார். அப்போது சந்திரசாமி நான் நரசிம்மராவ் பிரதமராக பணம் செலவழிக்க தயார் என்றார். அப்போது பிரணாப் முகர்ஜி எனக்கு திருபாய் அம்பானி செலவு செய்வார் என்றார்.

அப்போது கமலபதி திரிபாதி ஒரு ஆலோசனை கூறினார். அதிக எம்பிக்கள் தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். நரசிம்மராவும் மூத்த காங்கிரஸ் தலைவர் எனவே அவரே பொருத்தமானவர் என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து ராஜீவ் காந்தியை நீக்கிவிட்டு புதிய பிரதமரை தேர்ந்தெடுக்க அப்போதைய குடியரசுத் தலைவர் கியானிஜையில்

படிப்பகம்

www.padippakam.com



தீவிரமாக அமுல் செய்வதற்கான முயற்சிகளை எடுப்பார் என சிங்கள அரசு கருதியது. இலங்கையின் ஜனாதிபதியான பிரேமதாசா இந்த உடன் பாட்டைத் தொடக்கம் முதலே எதிர்த்து வருபவர். இந்த உடன்பாடு கையெழுத்தானபோது இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மறுத்தார். அவர் ஜனாதிபதியானவுடன் இந்திய அமைதிப் படையை உடனடி யாக திரும்பப்பெறுமாறு வற்புறுத்தினார். *(Front Line 8-21, 1991)*

சிங்கை சந்திரசாமியும், மகாபத்ராவும் சந்தித்து பேசினர். ராஜீவ் காந்தியை பிரதமர் பதவியில் இருந்து நீக்க ரூ. 40 கோடி தருவதாக கூறினர்.

இதுபற்றி ராஜீவ் காந்தி அறிந்ததும் சந்திரசாமியின் தொடர்புள்ள நிறுவனங்கள், அவரது மடம் ஆகியவை சோதனை இடப்பட்டன. அன்னியச் செலாவணி சட்டம் பாய்ந்தது. வருமான வரி முறைகேடு கள் பற்றிய வழக்குகள் பாய்ந்தன. இக்கால கட்டத்தில் சந்திரசாமி, சந்திரசேகர், உன்னி கிருஷ்ணன், அஜித்சிங், தேவிலால் ஆகி யோரை அழைத்துப் பேசினார்.

அப்போது சந்திரசேகர் ஒரு குழுவாக சென்று குடியரசுத் தலைவரை சந்தித்து சந்திரசாமிக்கு உதவும்படி கோரலாம் என்றார். இந்தக்கட்டத்தில் சந்திரசாமி மிகவும் கோபத்துடன் தன்னிலை மறந்து பேசினார். ராஜீவ் காந்தி எனக்கு பிரச்சினைகளை கொடுக்கிறார். ராஜீவ் காந்தி மிக கொடூரமான முடிவினை சந்திப்பார். நான் நினைத்தால் நேருபரிவார் தொண்டர்களே அதைச் செய்து விடுவார்கள் என்றார்.

1991 மே 21-ந்தேதி பம்பாயில் இருந்துவந்த சிலர் சந்திர சாமியிடம் தேர்தல் நிதி கேட்டார்கள். அவர்களிடம் சாமி ''தேர்தலே தள்ளிப்போகும். எனவே, தற்போது நிதிதர இயலாது'' என்று கூறினார். அதேபோன்று ராஜீவ் கொலை செய்யப்பட்டு தேர்தல் தள்ளிப் போனது. அப்போது என்னை அழைத்த சந்திரசாமி ராஜீவ் கொலையில் எனக்கு தொடர்பு இருப்பதாக யாரிடமும் நீ கூறக் கூடாது என்று மிரட்டினார்.

1985 தலைமையில் அமெரிக்காவிலும் 1985 அக்டோபர் 14-ந்தேதி இங்கிலாந்திலும் ராஜீவ் காந்தியை கொல்ல சந்திரசாமி திட்டமிட்டார். ஆனால் அது திருப்பெரும்புதூரிலேயே நடந்தது என்றார்.

படிப்பகம்

www.padippakam.com

# 15. கண்டனக் கணைகள்

## நீதிபதி நவனீதம் தீர்ப்பு கசாப்புக்கடைத் தீர்ப்பு
## தி.க. பொதுச் செயலாளர் கி. வீரமணி கண்டனம்

மக்கள் உரிமைக்கு எப்போதெல்லாம் அநீதி இழைக்கப்படுகிறதோ அதை எதிர்த்து குரல் கொடுக்க நாங்கள் தயங்கமாட்டோம்.

மக்கள் உரிமைக்கு எதிராக சட்டம்-நீதிமன்றம்-ஏடுகள் இருக்கக் கூடாது என்பதுதான் எங்கள் நிலை. நெருக்கடி காலத்தையே எதிர்த்தவர் கள் அதைவிட கொடுமையான தடா சட்டத்தை எதிர்த்துக் குரல் கொடுத் தோம். மனித உரிமைகளுக்காக என்ன விலை கொடுக்கவும் தயாராக இருக்கிறோம். இப்படிப் பட்ட எதிர்ப்புகளால்தான் நரசிம்மராவ் ஆட்சி யில் தடா சட்டம் ரத்தானது.

தடா சட்டம் ரத்தான பல மாதங்களுக்கு பின்பும் தடா கோர்ட்டில் வழக்கு நடந்து 26 பேருக்கு இந்த நாட்டில் மரண தண்டனை விதித்து தீர்ப்பு வருகிறது. தந்தை பெரியார் கூறினார். சட்டக் கோர்ட்டுகள்தான் உள்ளன. நியாய கோர்ட்டுகள் இல்லை என்றார். நீதிபதி நவனீதம் தீர்ப்பு கசாப்புக் கடை தீர்ப்பாகும். நீதிமன்றத் தீர்ப்பாகாது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம்தான். குடியரசுத் தலைவராக இருந்தாலும் கடைக்கோடியில் உள்ள குப்பன் என்றாலும் சட்டம் முன் ஒன்றுதான்.

ராஜீவ் வழக்கு தீர்ப்பு பற்றி சுவரொட்டி ஒட்டக் கூடாதாம். நெருக்கடி நிலையை எதிர்த்தவர்கள் என்பவர்கள் கூறுகிறார்கள்.

பேட்டரி வாங்கிவந்தவருக்கு தூக்கு, ஏன் தயாரித்தவன், விற்றவன், லைசென்சு தந்தவனுக்கு தண்டனை கொடுக்காமல் விட்டது ஏன்? நாகரீகமுள்ள மனித சமுதாயம் இந்த அக்கிரமத்தைக் கண்டிக்க வேண்டும்.

பொது மக்கள் கருத்தை உருவாக்க வேண்டும். பம்பாய் குண்டு வெடிப் பில் 3000 பேர் செத்தனர். கல்பனாத் ராய்க்கு தடா கோர்ட்டு தண்டனை கொடுத்தது. ஆனால் உச்ச நீதி மன்றம் விடுதலை செய்தது. அவரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



குற்றம் தெரிந்திருந்து இடம் தந்தால்தான் குற்றம், தெரியாமல் இருந்தால் குற்றவாளி இல்லை என்று தீர்பு கொடுத்துள்ளது. உச்ச நீதி மன்றம். இதை கவனத்தில் நீதிபதி நவனீதம் எடுத்துக் கொள்ளவில்லை.

ஒரு பாபர் பகுதி இடிப்பால் நாடு முழுவதும் எதிர் விளைவுகள் ஏற்பட்டன. கோவை வரை நடக்கிறது. இந்த வழக்கில் மறுவிசாரணை நடத்த வேண்டும்.

## மறுபடியும் நீதி விசாரணை
## மூத்த வழக்கறிஞர் பாளை சண்முகம் கோரிக்கை

ராஜீவ் கொலை வழக்கில் 26 தமிழர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது நியாயமானதுதானா? சட்டப்படி கேட்கிறோம். 26 பேருக்கு தூக்கு தரக் கூடாது என்று மனிதாபிமான அடிப்படையில் நாங்கள் கேட்கவில்லை. சட்டப்படியே கேட்கிறோம். 50 ஆண்டு காலமாக வழக்கறிஞராக உள்ளவன் என்ற முறையில் கேட்கிறேன்.

நீதி மன்றங்கள் காலத்திற்கு ஏற்ற மாதிரி செயல்படுகின்றன. நீதிபதிகள் சொர்க்கத்தில் இருந்து வரவில்லை. நெருக்கடி நிலை காலத்தில் நீதி மன்றங்கள் இந்திரா காந்தியைப் பார்த்து பயந்தன.

தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவே 26 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாக நீதிபதி கூறுகிறார். இந்த தண்டனைக்கு பின்தான் கோவையில் குண்டு வெடிக்கிறது. ஊரே நாசமாகும் வகையில் குண்டு வைக்கப்படுகிறது இதையெல்லாம் உளவுத்துறை முன்னதாகவே அறியாமல் போனது. நெல்லையில் துணை மேயர் மகன் குண்டு தயாரிக்கிறார். அது வெடித்துச் சாகிறார். நெல்லை மாவட்டத்தில் பல இடங்களில் குண்டு தயாரிக்கிறார்கள். போலீசுக்கு தெரியாமலா தயாரிக்கிறார்கள்?

போலீஸ் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை போய் விட்டது. இது போன்ற தீர்ப்புகளால் நீதி மன்றங்கள் மீதும் நம்பிக்கை போய்விடும். சி.பி.அய். இயக்குனர் கார்த்திகேயன் தீர்ப்பு வந்தவுடன் பழிக்குப்பழி வாங்கிவிட்டோம் என்கிறார். ஒரு பெரிய போலீஸ் அதிகாரி இவ்வாறு கூறுவது நியாய மற்றதாகும் 6 வருடம் நடந்த ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பை நீதிபதி சித்திக், கார்த்திகேயன் இருவரை தவிர வேறு யாராலும் எழுத முடியாது. 50 வருட வழக்கறிஞர் தொழில் அனுபவத்தில் இதைக் கூறுகிறேன். பதவியில் உள்ளவர்களுக்காக நீதிமன்றங்கள் வளைந்து நெளியலாமா?

மக்கள் எழுச்சி ஏற்பட்டால்தான் இதுபோன்ற பிரச்சினைகளில் நல்ல தீர்ப்பு கிடைக்கும். அந்த வழக்கை மறுபடியும் விசாரிக்க வேண்டும். எற்கெனவே இவ்வழக்கை 95 சதவீதம் விசாரித்த சித்திக்கே முழுவதும் விசாரிக்க வேண்டும்.ராஜீவ் காந்திக்கு பதில் கொலையானவர் வேறு ஆளாக இருந்தால் எல்லோரையும் விடுதலை செய்திருப்பார்கள். மக்கள் அக்கறை எடுக்காவிட்டால் எதுவும் நடக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



## ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பு நீதிமன்ற தீவிரவாதம் ஆகும்

### பஞ்சாப் முன்னாள் டி.ஜி.பி. கே.பி.எஸ். கில் கடும் கண்டனம்!!

*''ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 பேருக்கு நீதி மன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. இந்த மாதிரி தீர்ப்புகளின் விளைவாக தீவிரவாதம் மேலும் அதிகரிக்கும். பூந்தமல்லி நீதிபதி அளித்த தீர்ப்பு நீதிமன்ற தீவிர நடவடிக்கை ஆகாது. நீதி மன்ற தீவிரவாதம் ஆகும்'' என கே.பி.எஸ். கில் ''தி பயனீர்'' பத்திரிகையில் ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பு குறித்து எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அதே கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:*

*இந்திரா காந்தியை சீக்கியர்கள் கொலை செய்தார்கள் அதனால் சீக்கியர்களுக்கு எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டன என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.*

*இந்திரா காந்தி கொலை வழக்கிலே கேகர்சிங் என்ற சீக்கியருக்கு மரண தண்டனை கொடுத்தார்கள். எச்.என். சீர்வை என்ற பிரபல அரசியல் சட்ட அறிஞர் இது பற்றி கருத்துக் கூறும்போது இது அநீதியாகும் என்றார். மும்பை உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி தார்குண்டே ''நாயை கொல்வதாக இருந்தாலும் ஆதாரம் இல்லாமல் கொல்லக்கூடாது'' என்றார். அக்கருத்தை நான் வரவேற்கிறேன்.*

*இதைப் போலவே ராஜாஜியின் சகாவான மசானி ''கேகர்சிங் கிற்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.* ***நீதித் துறையில் நடந்த படு கொலை''*** *என்றார். அது சட்டபூர்வமானதாக இருக்கலாம். ஆனால் அது அநியாயமானதொரு தீர்ப்பு என்று கூறியதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.*

*ராஜீவ் காந்தி கொலைக்கு பழி வாங்கிவிட்டோம் என்று சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன் கூறியுள்ளார். புலனாய்வு அமைப்புகளோ, நீமன்ற அமைப்புகளோ பழி வாங்கும் நோக்கில் செயல் படக்கூடாது. இவ்வாறு செயல்படுவது நடு நிலைக்கு எதிரானதாகும்.*

1991ம் ஆண்டு முதல் 1997 வரை பஞ்சாபில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 11696 ஆகும். இதில் 1781 போலீசாரும் அடங்குவர். **இவ்வளவு படுகொலைகள் நடந்திருந்த போதும் அமைதி திரும்பிய இந்த 5 ஆண்டுகளில் அங்கு ஒருவருக்கூட மரண தண்டனை விதிக்கப்படவில்லை.** இவ்வளவு பயங்கரவாதம் நடை பெற்றுள்ளது. மக்களுக்கு இவ்வளவு தீமைகள் விளைவிக்கப்பட்டபோதும் இவர்கள் மீது எல்லாம் நீதித்துறை பாயவில்லை. ஆனால் பிரதமர்கள் அல்லது முன்னாள் பிரதமர்கள் கொலை செய்யப்பட்டால் எல்லாவிதமான விதிகளும் புறந்தள்ளப்படுகின்றன. என்ன வேண்டுமானாலும் செய்ய

படிப்பகம்

www.padippakam.com



லாம். எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம். தீர்ப்பு வரலாம் என்றால் அது எப்படி நீதியாகும்? இவ்வாறு கே.பி.எஸ். கில் எழுதியுள்ளார்.

## தீர்ப்புக்கு எதிராக மக்களைத் திரட்டுவோம்

### ஆந்திர மனித உரிமை போராளி டாக்டர். பால கோபால் அறைகூவல்

ஆந்திர மாநில சிவில் உரிமைக் குழுவின் பொதுச் செயலாளராக உள்ள டாக்டர் பால கோபால் இந்திய அளவில் மதிக்கப்படும் முக்கியமான மனித உரிமைப் போராளி ஆவார். ''தலித் முரசு'' இதழுக்குப் பேட்டியளித்த அவர் கூறியதாவது:-

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 பேர்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதை இரண்டு வகையில் நாங்கள் கண்டிக்கிறோம். தூக்குத் தண்டனை முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவது ஒரு மனித உரிமை அமைப்பு என்ற முறையில் எங்கள் கடமையாகும். ஏறத்தாழ 150 ஆண்டுகளாக மரண தண்டனைக்கு எதிரான போராட்டங்கள் உலகெங்கும் நடந்து வருகின்றன. தற்போது சுமார் 44 நாடுகளில் மரண தண்டனை முற்றிலுமாக கைவிடப்பட்டுள்ளது. இதில் பல மூன்றாம் உலக நாடுகளும் அடங்கும்.(நாடுகள் விவரம் - தனியே இணைக்கப்பட்டுள்ளது)

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள விதம் எந்த நியாயத்துக்கும். தர்க்கத்துக்கும் உட்பட்டதாக இல்லை. 1980-ல் உச்ச நீதிமன்றம் பச்சன்சிங் வழக்குத் தொடர்பான தீர்ப்பில் ஒரு செய்தியை குறிப்பிட்டுள்ளது. சாதாரணமாக எந்தவொரு வழக்கிலும் அதிகளவு தண்டனையாக ஆயுள் தண்டனையே விதிக்கப்பட வேண்டும். அரிதான சந்தர்ப்பங்களில் மட்டும்தான் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என உச்ச நீதி மன்றம் குறிப்பிட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கைப் பொறுத்தவரை இப்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அனைவரும் எப்படி அரிதினும் அரிதான செயலைச் செய்தவர்கள் தானா என்று பார்க்க வேண்டும். அவர்கள் குற்றம் செய்திருந்தால் அதை இந்திய குற்றவியல் சட்டத்தை வைத்தே தண்டிக்க முடியாதா? அவர்கள் அனைவரையும் விடுவித்துவிட வேண்டும் என நாங்கள் கேட்கவில்லை. அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டிருப்பதைத் தான் எதிர்க்கின்றோம்.

நமது நாட்டுச் சட்டங்கள் அனைத்தும் பிரிட்டனின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டதுதான். ஆனால் பிரிட்டனில் மரண தண்டனையை ஒழித்துவிட்டார்கள். போர் நடக்கும் நேரத்தில் எதிரியுடன் சேர்ந்து கொண்டு தேசத்துக்கு துரோகமிழைத்தால் மட்டும்தான் மரண தண்டனை. மற்ற எவருக்கும் மரண தண்டனை கிடையாது. பிரிட்டனே மரண தண்டனையை கைவிட்ட பிறகு, இந்தியா ஏன் செய்யக் கூடாது? என்றுதான் நாங்கள் கேட்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஏதேனும் சட்ட உதவி வேண்டுமெனக் கேட்டால் அது பற்றி பரிசீலிப்போம். இந்த வழக்கின் தீர்ப்பைக் கண்டித்து, அகில இந்திய அளவில் மனித உரிமை அமைப்புகளைக் கூட்டி ஆலோசனை நடத்தவிருக்கின்றேன். பீகாரில் பதே கிராமத்தில் தலித் மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக உண்மையறியும் குழு ஒன்று பிப்ரவரி எட்டாம் தேதியன்று பாட்னா சென்றது. அக்குழுவில் இந்திய அளவில் செயல்படும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் பங்கெடுக்கின்றன. அச்சமயம் இந்த வழக்கு பற்றியும் நாங்கள் பேசத் திட்டமிட்டுள்ளோம்.

## தமிழர் உயிர் காப்புக் குழுவிற்கு ஆதரவு தருக

### கேரள மனித உரிமைக் குழு வேண்டுகோள்!

''ராஜீவ் கொலை வழக்கில் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் குறைக்க வேண்டும்'' என்று கேரள மாநில மனித உரிமைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது. இக்குழுவின் மாநில அமைப்பாளர் முகுந்தன் சி.மேனன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது.

அமைதிக் காலத்தில் குற்றம் புரிந்த யாருக்கும் இத்தகைய மரண தண்டனை இந்தியாவிலோ அல்லது உலகத்தின் எந்தப் பகுதியிலோ அளிக்கப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களில் 5பேர் பெண்கள். சுதந்திர இந்தியாவில் இதுவரை எந்தப் பெண்ணிற்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதில்லை. அந்த வகையிலும் இந்தத் தீர்ப்பு குறிப்பிடத் தக்கதாகும். சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு இணங்கவும் இந்திய நீதிமன்ற நடைமுறைகளுக்கு இணங்கவும் இந்த வழக்கின் விசாரணை நடைபெறவே இல்லை என நான் குற்றம் சாட்டுகிறேன். அரசியல் ரீதியாக ஆத்திரமூட்டப்பட்ட சூழ்நிலையில் வழக்கு விசாரணையின் தொடக்க காலத்திலிருந்து எதிர் தரப்பு வழக்கறிஞர்கள் மிரட்டப்பட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக வழக்கு விசாரணை இரகசியமாகவே நடத்தப்பட்டது. பத்திரிகையாளர்கள் ஒருபோதும் அனுமதிக்கப்படவில்லை. தீர்ப்பு வழங்கப்பட்ட நாளில் கூட பத்திரிக்கையாளர்களுக்கு அனுமதி இல்லை.

எதிர்காலத்தில் இத்தகைய கொலைகள் நடைபெறாமல் இருக்க கடுமையான தண்டனையே வழிவகுக்கும் என நீதிபதி தனது தீர்ப்பில் கூறியிருப்பதை நான் ஏற்கவில்லை. மகாத்மா காந்தி, இந்திராகாந்தி ஆகியோரை கொலை செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இது ராஜீவ் கொலையைத் தடுக்கவில்லை. மக்களின் பல்வேறு பிரிவினரை வாட்டி வதைக்கும் அரசியல், பொருளாதார, சமுதாய பிரச்சினைகளுக்கு உரிய காலத்தில் சரியான தீர்வுகளை அரசுகள் எடுக்கத் தவறியதின் காரணமாகத்தான் அரசியல் படுகொலைகள் நடைபெறுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



*கேரள மாநில மனித உரிமைக்குழு மரண தண்டனையை அறவே எதிர்க்கிறது. மக்களின் வாழ்வுரிமைக்கு இது விரோதமானதாகும். மனித உரிமை, ஜனநாயக உரிமை ஆகியவற்றுக்காகப் போராடும் சகல அமைப்புகளும் இந்தக் கொடிய தீர்ப்புக்கு எதிராகப் போராட முன்வர வேண்டும். சிறந்த வழக்கறிஞரான ராம்ஜேத் மலானி போன்றவர்கள் உச்ச நீதிமன்றத்தில் இவ்வழக்கில் ஆஜராகி மரண தண்டனையைக் குறைப்பதற் காக வாதாட முன்வர வேண்டும்.*

***ஜார்ஜ் பெர்னாண்டஸை புரவலராகவும் பழ. நெடுமாறனைத் தலைவ ராகவும் கொண்டுள்ள குழுவிற்கு சகலவிதத்திலும் ஆதரவளிக்க முன் வரும்படி அனைத்து ஜனநாயக மற்றும் மனித உரிமை அமைப்புக்களை வேண்டிக் கொள்கிறேன்.***

## 'எகனாமிக்ஸ் டைம்ஸ்' நாளேடு கண்டனம்

*இராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 தமிழர்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு இருப்பதை பிரபல ஆங்கில நாளேடான ''எக்கானாமிக் டைம்ஸ்'' கண்டித்துள்ளது. அப்பத்திரிகையின் 4.2.98 இதழில் எழுதியுள்ள தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.*

*'இராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பது பெரும் சர்ச்சையையே தோற்று விக்கும். அரசியல் உணர்வு சம்பந்தப்பட்ட வழக்கில் அத்துமீறிய பதில் நட வடிக்கையாக இது அமையக்கூடும். கொலைச் சதியில் பங்கு கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் மரண தண்டனை என்பது சரிதானா? பிரபலமானவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் மட்டுமே நமது நீதி முறை தீவிர நடவடிக்கை எடுக்குமா? இந்த வழக்கு பற்றிய முழுமையான ஆதாரங்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டால்தான் மேற்கண்ட கேள்வி களுக்கு விடை கிடைக்கும். அபூர்வமாக சில வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று உச்சநீதி மன்றம் ஏற்கெனவே கூறியுள்ளது. ஆனால் தடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருமே கொலைக்கான சதியில் பங்கு கொண்டவர்கள் எனக்கருதி தீர்ப்பளித்திருக்கின்றார். எது எப்படியிருப்பினும் 26 பேர்கள் பங்கு கொண்ட சதி பற்றிய விபரங்கள் கொலைக்கு முன்னதாகவே வெளியாகவில்லை என்று கூறுவது நம்பத்தக்கதல்ல. குறிப்பாக அரசியல் தலைவர்கள் சம்பந்தப்பட்ட படுகொலைகள். மிக இரகசியமானவை. ஒரு சிலருக்கு மட்டுமே முன்னதாகவே தெரிந்திருக்கும்.*

*கொலைக்கான சதியில் 26 பேருக்குமே பங்கு உண்டு என்பதில் சிறப்பு நீதி மன்றம் முழுமையாக திருப்தியடைந்திருக்க வேண்டும். அப்படியானால் கீழ்கண்டவை குறித்து நீதி மன்றத்திற்கு அசைக்க முடியாத ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றதா?*

படிப்பகம்

www.padippakam.com



கொலை செய்யப்படுவது யார் என்பதை சதிகாரர்கள் அறிந்திருக்க வேண்டும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் அவர்கள் முழுமையாக ஒத்துழைத்து இருக்க வேண்டும்.

மேற்கண்ட இரு நிபந்தனைகளில் முழுமையான திருப்தி இருந்தால் தான் கொலைச்சதியில் அனைவருக்கும் பங்கு இருந்த தென்பது நிருபண மாகும். கொலையாளிகள் தங்குவதற்கு இடவசதி அளித்ததாகக் குற்றம் சாட்டுவதை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். கொலை பற்றிய உண்மை தெரியாமல் அல்லது அச்சத்தின் காரணமாகவோ தங்குவதற்கு இடம் அளித்திருக்கக் கூடும். இதையெல்லாம் நீதி மன்றம் தீவிரமாக பரிசீலித் திருக்க வேண்டும். நியாய உள்ளம் படைத்த தனிப்பட்டவர்களும், அமைப்புகளும் இத்தகைய கேள்விகளை எழுப்புகின்றன. இந்தியா, இலங்கை ஆகிய இருநாடுகளின் எல்லைகளைத் தாண்டி இந்த 26 பேர்களும் கொலைக்கான இரகசியத்தை நியாயமான காலம் வரை மறைத்து விட்டார்கள் என்று கூறுவது சரியாகாது. சிறப்பு நீதிமன்றம் அதீதமாக தீர்ப்பளித்துள்ளது. எதிர்காலத்தில் பயங்கரவாத நடவடிக்கை களுக்கு இந்தத் தீர்ப்பு வித்திட்டுள்ளது.

பல்வேறு காரணங்களினால் ஆத்திரமூட்டப்பட்ட அதிருப்தியடைந்த தனி நபர்தான் இத்தகைய பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவார் என்பதனை நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## நாளைக்கு தமிழகம் முழுவதையும்...

### கவிஞர் இன்குலாப்

வேறொன்றும் சொல்வதற்கு இல்லை. நீதிமன்றங்களின் மூலமாகவும் இந்திய வல்லரசு உரிமை கோரும் தமிழர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தவிர. இதற்கு முன்பு பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் மகன் பொழிலனுக்கும், அவர்தம் தோழர்களுக்கும் விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை இந்த அச்சுறுத்தலின் தொடக்கம் எனலாம். தமிழர்கள் அப்போதும் அசதியில் இருந்தனர். இப்பொழுது 26 பேருக்கும் மரண தண்டனை விதித்திருக்கிறது. இது அப்பட்டமான அச்சுறுத்தல்.

இதை நடுநிலையோடு விசாரணை செய்து, முறையாக வழங்கப்பட்ட தீர்ப்பாக ஏற்பதற்கில்லை. மூடிய அறைகளுக்குள் தொடங்கி நடத்தப்பட்ட விசாரணை, மூடிய அறைகளுக்குள் வழங்கப்பட்ட தீர்ப்பாக வெளிவந்திருக்கிறது. நீதிபதி வழங்கிய தீர்ப்பைச் சிறப்புப் புலனாய்வுக் குழு தலைவர் சொல்லித்தான் செய்தியாளர்கள் தெரிய வந்திருக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



எத்தகைய குற்றங்கள் சுமத்தப்பட்டன? குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சொன்ன பதில்கள் யாவை? இதைத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு ஏன் இல்லாமற் போனது? அரசு நடத்தும் இப்படிப்பட்ட அடாவடித்தனமான நீதிமன்ற விசாரணை முறைகள் கேள்விக்கு அப்பாற்பட்டவையா? பூவிருந்தவல்லி சிறப்பு நீதிமன்றம், 2வது நாளாக நியாய நடைமுறைக்கும் மரண தண்டனை விதித்திருக்கிறது.

சத்தியமேவ ஜெயதே, வாய்மையே வெல்லும் என்றும், தேசத்தின் கொள்கை சரியென்று மெய்ப்பிக்கப்பட்டது என்றும் சிறப்புப் புலனாய்வுக்குழு தலைவர் புளகாங்கிதம் அடைந்திருக்கிறார். வெளிப்படையாக அல்லாமல் மூடிவைத்து விசாரணை நடத்துவதுதான் சத்தியமேவ ஜெயதேவா? ராஜீவ் என்ற மனிதர் செய்த குற்றங்களும் ஊழல்களும்தான் தேசத்தின் கொள்கையா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சிறை, கைவிலங்கு, துப்பாக்கி, தூக்குக்கயிறு ஆகியவற்றையே அரசு விடையாக வைத்திருக்கிறது. எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாத பாசிச வெறி தலைவிரித்தாடுகிறது. இன்று 26 பேர், நாளைக்கு தமிழகம் முழுவதையும் தூக்கில் போடலாம்.

ஒரு ஜெயின் ஆணையம் அவமதித்தது என்றால், சிறப்பு நீதிமன்றம் தமிழகத்துக்குத் தூக்குத்தண்டனை விதித்திருக்கிறது.

தமிழர்களே என்ன செய்யப் போகிறீர்கள்?

## 'ஆம்னஸ்டி இண்டர்நேஷனல்' கண்டனம்

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும், தனி நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளதற்கு சர்வதேச மனித உரிமைக் கழகம் (*Amnesty International*) கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அதன் அறிக்கை விவரம்:

இந்த வழக்கு விசாரணை நேர்மையாக நடக்கவில்லை. சர்வதேச நெறி முறைகளும் பின்பற்றப்படவில்லை. தடா சட்டத்தின் கீழ் இந்த வழக்கு விசாரணை நடந்திருக்கிறது. தடா சட்டமே சர்வதேச நெறிமுறைகளுக்கு எதிரானது. விசாரணை ரகசியமாக நடத்தப்பட்டதும், சாட்சிகள் ரகசியமாக வைக்கப்பட்டதும் சர்வதேச நெறிமுறைகள் அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1991 ஜூலையில் கைது செய்யப்பட்டாலும், குற்றப் பத்திரிகை1992 மே மாதத்தில்தான் தரப்பட்டிருக்கிறது. 1993ல் மே மாதம் வரை பூர்வாங்க விசாரணை கூட துவங்கப்படவில்லை. கடைசியாக 1994 சனவரியில் தான் விசாரணையே துவங்கியது. தடா சட்டத்தின் படி - குற்றம் சாட்டப்பட்டவர்கள் மேல் முறையீட்டுக்கு உயர்நீதி மன்றம் போக முடியாது. உச்சநீதி மன்றம் தான் போக முடியும். இவைகள் எல்லாமுமே கவலைதரக்கூடியவைகளாகும். அதோடு, கைது செய்யப்பட்டபோது

படிப்பகம்

www.padippakam.com



ஆதிரை என்ற பெண்ணுக்கு வயது 17 தான் 18 வயதுக்குட்பட்ட குற்ற வாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என்று சர்வதேச குழந்தைகள் உரிமைக்காப்பு ஒப்பந்தத்தின் 37(a) விதி கூறுகிறது ICCPR சட்டத்தின் 6(5) விதியும் இதைத்தான் கூறுகிறது.

1997ல் உருவான அய்.நா. மனித உரிமைக் கமிஷன் தீர்மானமும் தூக்குத் தண்டனையை எதிர்க்கிறது.

அதோடு தூக்குத் தண்டனையை இன்னும் அமுல்படுத்தி வரும் நாடுகளும், அதை கைவிட வேண்டும் என்றும் அய்.நா. வற்புறுத்துகிறது. இந்திய அரசியல் சட்டம் வாழ்வுரிமையை வலியுறுத்துகிறது. உச்ச நீதிமன்றமும் தூக்குத் தண்டனையை மிகமிக அபூர்வமாகவே பயன்படுத்த வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறது. ஆனாலும் இந்தியாவில் ஆண்டுக்கு ஒரு டஜன் தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இப்படி தூக்கிலிடப் படுகிறவர்கள் பெரும்பாலும் ஏழைகள், படிப்பறிவு இல்லாதவர்கள்தான். எனவே இந்த 26 பேருக்கும் தூக்குத் தண்டனை தரப்பட்டதை எதிர்த்து தந்திகள், கடிதங்களை அனுப்புங்கள்.

வழக்கு விசாரணைகள் சர்வதேச நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கவில்லை என்பதையும், தீர்ப்பு அய்.நா. மனித உரிமைக் குழுவின் தீர்மானத்துக்கு எதிரானது என்பதையும் உச்ச நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும். குடியரசுத் தலைவருக்கும், உச்சநீதி மன்ற தலைமை நீதிபதிக்கும் தந்திகளும், கடிதங்களும் குவிய வேண்டும்.

முகவரி:

***Hon. K.R. Narayanan,***
***President of India,***
***Rashtrapathi Bhavan,***
***New Delhi - 110 004.***

***Justice M.M. PUNCHHI,***
***Chief Justice,***
***Supreme Court of India,***
***Tilak Marg.New Delhi 110 001.***

படிப்பகம்

www.padippakam.com



## மனிதநேயமற்ற சில தமிழ் ஏடுகள்

தேசிய நாளேடுகள் இத்தீர்ப்பின் விளைவு பற்றி தெரிந்து கொண்டு கடுமையாக விமர்சித்துள்ளன. 'எகனாமிக் டைம்ஸ்' என்ற ஆங்கில வணிக நாளேடு. அதன் தலையங்கத்தில், ''ராஜீவ் கொலை வழக்கில், 26 பேருக்குத் தூக்கு தண்டனை விதித்தது - அத்து மீறிய பதில் நடவடிக்கை யாகும்'' என்று கண்டித்துள்ளது.

'இந்தியா டுடே இதழ் கூட ''குற்றமும் அதிக தண்டனையும்'' எழுதியுள்ள தலையங்கத்தில் - இத்தீர்ப்பு தூக்கு தண்டனை பற்றிய விவாதத்தை மறுபடியும் கிளப்பிவிடும்'' என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுபோன்று ஆங்கில இதழ்கள், உலக அளவில் தாங்கள் முற்போக்கு வாதிகள் என வேடம் தரித்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால், தமிழில் வெளிவரும் 'ஜூனியர் விகடன்' 'தமிழன் எக்ஸ்பிரஸ்', 'தினமலர்', 'விகடன் பேப்பர்', 'குமுதம்' போன்றவை இந்தத் தீர்ப்பை ஆதரித்து - வெறியைத் தூண்டும் வகையில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இந்தத் தீர்ப்பைப் பற்றி முழுமையாக ஆராயாமல், ''தூக்கு தண்டனைக்குக் காரணம் பத்திரிகையாளர்கள் - ராஜீவ் கொலையாளி சீற்றம்'' என ஜூனியர் விகடன் [4.2.98] செய்தி வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இந்தியாவில் இருந்தபொழுது - அவர்களிடம் இலங்கையில் நடை பெறும் செய்திகளைப் பெற்று - அதை விற்று பெரு மளவில் பணம் சேர்த்த பத்திரிகைதான் 'ஜூனியர் விகடன்' இவர்கள் தமிழர்களின் துயரங்களைக் கூட காசாக்குவதில் கைதேர்ந்தவர்கள்.

சரித்திரத்தில் இதுவரை இடம்பெறாத இந்தக் காட்டுமிராண்டித் தனமான தீர்ப்பை, 'தமிழன் எக்ஸ்பிரஸ்' ''சரித்திரம் வாய்ந்த தீர்ப்பு'' என்று எழுதியுள்ளது. ஆங்கில ஏடான 'பிரண்ட் லைன்' 18 பக்கங்களில் இத் தீர்ப்பை ஆதரித்து செய்திகள் வெளியிட்டுள்ளன. இதன் ஆசிரியரான என். ராம் இடதுசாரி முற்போக்கு வேடம் அணிந்து வலம் வருபவர்.

'குமுதம்' என்ற ஒரு வார ஏட்டுக்கு ஆபாசத்தைத் தவிர வேறு எதுவுமே தெரியாது. பெண்களின் அங்க உறுப்புகளை வெளியிட்டு பணம் சம்பாதிக் கும் இந்த ஏடு, ராஜீவ் வழக்குத் தீர்ப்பு பற்றி எழுதும் போது, தனது தலை யங்கத்தில், 'இந்த 26 பேர்களின் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டு - 'லீவர் இழுக்கும் சத்தம் காதில் விழ வேண்டும்'' என அடிப்படை மனித நேயம் கூட இன்றி எழுதுகின்றது. ஆனால், இந்த ஏடு தமிழகத்தை - தமிழ் மக்களின் பண்பாட்டைக் களங்கப்படுத்தி வருவதற்கு - எத்தனை முறை 'லீவரை' இழுத்திருக்க வேண்டும்?

'தலித் முரசு' - மார்ச் 1998.

படிப்பகம்

www.padippakam.com



## இணைப்பு - 1

### தூக்குத் தண்டனையை ஒழித்த நாடுகள்

1. அன்டோரோ
2. ஆஸ்திரேலியா
3. ஆஸ்டிரியா
4. கம்போடியா
5. கேப்வெர்டி
6. கொலம்பியா
7. கோஸ்டாரிகா
8. செக் மற்றும் ஸ்லோவேக்கியா கூட்டாட்சிக் குடியரசு
9. டென்மார்க்
10. டொமினிகன் குடியரசு
11. இக்குவேடார்
12. பின்லாந்து
13. பிரான்சு
14. ஜெர்மனி
15. ஹெய்தி
16. ஹோன்டுராஸ்
17. ஹங்கேரி
18. ஐஸ்லாந்து
19. அயர்லாந்து
20. கிரிபாட்டி
21. லய்ச் டென்ஸ்டின்
22. லக்ஸ்சம்பர்க்
23. மார்ஷல் தீவுகள்
24. மைக்ரோரிசா
25. மொனாகோ
26. மொசாம்பிக்
27. நமிபியா
28. நெதர்லாந்து
29. நியூசிலாந்து
30. நிகராகுவே
31. நார்வே
32. பனாமா
33. பிலிப்பைன்ஸ்
34. போர்டங்கல்
35. ருமேனியா
36. சென் மரினோ
37. சேவோ டோமி மற்றும் பிரின்சிப்
38. சாலமன் தீவுகள்
39. சுவீடன்
40. துவாலு
41. உருகுவே
42. பெனுடு
43. வாடிகன் நகரம்
44. வெனிசுலா

**தகவல்: 'ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்'**

படிப்பகம்

www.padippakam.com



இணைப்பு - 2

# 26 தமிழர்கள் உயிர்காப்பு
# வழக்கு நிதிக்குழு வேண்டுகோள்

ராஜீவ் கொலை வழக்கில் பல உண்மைகள் திட்டமிட்டு மறைக்கப்பட்டன.

இரகசிய விசாரணை என்ற பெயரில் எல்லாமே மூடுமந்திரமாக நடத்தப்பட்டன.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாட முன்வந்த வழக்கறிஞர்கள் மிரட்டப்பட்டனர். சாட்சிகள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

ஜெயின் கமிஷன் விசாரணையில் வெளிவந்த பல புதிய உண்மைகளை சி.பி.ஐ.யின் சிறப்புப் புலன் விசாரணைக்குழு கணக்கிலேயே எடுத்துக் கொள்ளவில்லை.

கொலையில் அன்னிய சக்திகளுக்கு உள்ள பங்கு பற்றி சி.பி.ஐ. புலன் விசாரணை நடத்தவேயில்லை.

கேலிக்கூத்தாக நடத்தப்பட்ட இவ்வழக்கு விசாரணையின் முடிவில் குற்றம் சாட்டப்பட்ட 26 தமிழர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய நீதித் துறையின் வரலாற்றிலேயே இவ்வளவு பேருக்குத் தூக்குத்தண்டனை இதுவரை விதிக்கப்பட்டதேயில்லை.

அதிலும் இந்தியா சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகளில் பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதே இல்லை. முதன் முறையாக 5 பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தூக்குமேடையில் நிறுத்தப்பட்டுள்ள 26 தமிழர்களின் உயிர்களைக் காக்கவும் நீதியை நிலை நிறுத்தவும் இந்திய உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

புரவலராக ஜார்ஜ் பெர்ணாண்டஸ் அவர்களும் தலைவராக பழ. நெடுமாறன், துணைத்தலைவர்களாக கரூர் பி.ஆர். குப்புசாமி, கார்முகில், ச. மெல்கியோர், ப. சண்முக சுந்தரம், ஆனூர் ஜெகதீசன், நெல்லிக்குப்பம் வி. கிருஷ்ணமூர்த்தி, நாத்திகம் இராமசாமி, புதுவை அழகிரி, நாமக்கல் என்.பி. இராமசாமி செயலாளர்களாக பெ. மணியரசன், தியாகு, பேரா. ப. கல்யாணி, பொருளாளராக முனைவர் சுப. வீரபாண்டியன் மற்றும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட பொதுக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

நீதியை நிலைநிறுத்துவதற்கான பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு. அந்தக் கடமையைத் தாமதமின்றி உடனே செய்யுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

மரணவாயிலில் நிறுத்தப்பட்டிருக்கும் நமது சகோதரத் தமிழர்களைக் காக்க அள்ளி வழங்குங்கள். நீதியை நிலைநிறுத்த உதவுங்கள்.

நிதி அளிக்க வேண்டிய முகவரி:
தலைவர்,
'தமிழர் நிதி'
17/1, நரசிம்மபுரம்,
மயிலை, சென்னை - 600 004.

அன்புள்ள
**(பழ. நெடுமாறன்)**
(வழக்கு நிதிக் குழுத் தலைவர்)

படிப்பகம்

www.padippakam.com



# விடியலுக் கிளமை வசந்தமே விலைதானா ?

தை பிறந்தால் வழிபிறக்குமா?
தீர்த்து சொல்லடி குயிலே!

- தை பிறந்தால்

சிறையின் கூட்டிலும் - உன்போல்
சிறகுகள் முளைத்திடுமா?
விடுதலை வானிலே
வலமிட்டுப் பறந்திடுமா?

- தை பிறந்தால்

அடிமை விலங்குடைய - மகன்
குருதியை வடித்தானா?
விடியலுக் கிளமை
வசந்தமே விலைதானா?

- தை பிறந்தால்

களம் வென்று வந்தே - என்
கண்களை நிறைப்பானா?
நெருங்கிவரும் என்றன்
சாவைத் தடுப்பானா?

- தை பிறந்தால்

- கவிஞர் குயில்தாசன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


நளினி


சண்முக வடிவேலு


பாக்கியநாதன்


பாஸ்கரன்


விஜயானந்தன்


முருகன்


சுசீந்திரன்


விஜயன்


இரும்பொறை


ரங்கநாத்


ஜெயக்குமார்


விக்கி


பத்மா

# குற்றம் சாட்டப்பட்ட 26 தமிழர்கள்


ஆதிரை


சின்ன சாந்தன்


தனசேகரன்


சாந்தி


ரங்கன்


கனக சபாபதி


சிவரூபன்


ராபர்ட் பயஸ்


ரவிச்சந்திரன்


செல்வ லட்சுமி


சுபா சுந்தரம்


சங்கர்


பேரறிவாளன்

படிப்பகம்